
எஸ்.ஐ.எம். ஸஹாப்



Al-Haj. A.R.A. SATHAR
Justice of the Peace - Whole Island
Regd. No: 2000/ 03/ NE/ WI/ B/ 015
604A, Central Road,
[illegible] - 03

# கனவும் மனிதன்

முனைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூல் நிலையம் மருதமுனை

................................................உப அலுவலகம்

1. இப்புத்தகம் கடைசியாகக் குறிப்பிடப் பட்டிருக்கும் திகதியன்று கொடுபடல் வேண்டும். பின் தங்கும் நாளொன்றுக்கு ரூபா1.00 வீதம் அறவிடப்படும்

2. இப்புத்தகம் அங்கத்தவருக்கோ அல்லது அங்கத்தவரல்லாதோருக்கோ இரவல் கொடுக்கக் கூடாது.

3. புத்தகங்களில் கீறிடுதல், எழுதுதல் பக்கங்களை மடித்து வைத்தல் போன்ற செயல்கள் தகாதவையென எச்சரிக்கப் பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவும் மனிதன்

- சிறுகதைகளின் தொகுப்பு -

## எம். ஐ. எம். றஊப்

முனைப்பு,

மருதமுனை,

கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவும் மனிதன்

சிறுகதைகளின் தொகுப்பு

எம். ஐ. எம். றஊப்
பொது நூலக வீதி,
மருதமுனை.

இது ஒரு முனைப்பு வெளியீடு.
பொது நூலக வீதி,
மருதமுனை.

முனைப்பு சாதனங்களுடன்,
சாய்ந்தமருது 'எவசைன்'
அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

அட்டை அமைப்பு:

மு. மு. பாசில்
முதற்பதிப்பு - 1992
விலை : ரூபா 75.00

# *Kanavum Manithan*

**A Collection of Short Stories by M.I.M. Rauffe.**

**Published by 'Munaippu'**

**Printed at**
**Evershine Printers,**
**Sainthamaruthu.**

**Cover Design & by**

**M. M. FAZIL**
**First Edition : 1992**
**Price : Rs. 75.00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுரை.

பதிப்புரை.

அறிமுகம்.

மஞ்சள் சோறு
1980-01-01 மல்லிகை.

வாழ்வைப் புரிந்து கொள்ள முந்தி
1980-02-09 வீரகேசரி.

இன்னும் வட்டத்துள்.
1981-05-18 வீரகேசரி.

நீளுகின்ற இருப்பு.
1980-09-08 வீரகேசரி

தனக்குள்ளே ஒரு தரிசனம்.
1980-03-13 வீரகேசரி.

நொண்டிக் கனவுகள்.
1981-06-05 வீரகேசரி,

இவனுக்குத் தானே அபத்தமாய்
1981-12-02 புதுசு.

முன்னிரவுகளும் ஒரு பின்னிரவும்
1982-05-11 வீரகேசரி.

வெறுமையும் நிறைவும்.
1983-06-02 வீரகேசரி.

இடையில் வெளிகள்.
1980-02-15 முனைப்பு.

ஆகாசத்திலிருந்து பூமிக்கு.
1982-02-15 கீற்று.

48 மாதங்களும் 15 நாட்களும்.
1988-06-19 வியூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

L 11169

கொஞ்சம் புத்தகங்கள், கொஞ்சம் கனவுகள், ஆசைகளுடன் வாழ்ந்த ஒரு பயில்நிலை எழுத்தாளனுடைய கதைகள் இவை. உணர்ச்சிகள் நிரம்பிய மனோநிலைகள் இக்கதைகள் எழுதக் காரணமாக இருந்தன. இன்று யதார்த்தத்தில், அறிவுபூர்வமாகப் பார்க்கும் போது இக்கதைகளின் குறைகளை உணரமுடிகிறது. வாழ்வின் பன்முகத் தன்மையிலிருந்து எங்கோ தொலைதூரமாக இருந்ததையும் அறிய முடிகின்றது.

வீட்டுச் சூழல் இலக்கியத்தை அறிமுகம் செய்தது. தாமரை, மல்லிகை, அஞ்சலி, மலர் என்பவை வாசிக்கத் தூண்டின. அலை, தீவிர வாசகனாக்கியது. கூடவே எழுதவும் தூண்டியது. வீரகேசரி இராஜகோபால் அவர்களும், எம்.ஏ. நுஃமான் அவர்களும் முறையே வீரகேசரியிலும், புதுசுவிலும் என் கதைகள் வெளிவரக் காரணமாக இருந்தார்கள். உற்சாகமூட்டினார்கள்.

இத்தொகுப்பினை வெளியிட முழுக்காரணமாக இருக்கும் என் மதிப்புக்குரிய ஆசிரியர் மருதூர்பாரி அவர்களை என்றைக்குமே மறக்கமுடியாது. எனது இயல்பான சோர்ந்து போதலை எல்லாம் கவனத்தில் எடுக்காது, இத்தொகுப்பின் ஒவ்வொரு அணுவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரத்தை எடுத்து, கச்சிதமாக செய்து முடித்த அவரை எப்படி என்னால் மறக்க முடியும். அவரிடமிருந்து எவ்வளவோ கற்க முடியும். தன்னம்பிக்கைக்கும், விடாமுயற்சிக்கும் நல்லதொரு முன்மாதிரி அவர்.

வேலைப் பழுக்கள் மத்தியில் கதைகளைப் படித்து அறிமுகக் குறிப்பு எழுதித் தந்த எம். ஏ. நுஃமான் அவர்களுக்கு எப்படி நன்றி கூறுவதென்று தெரியவில்லை. தந்தையுடன் நுஃமான், சண்முகம் சிவலிங்கம் அவர்கள் கதைத்துக் கொண்டிருக்க, நுஃமான் அவர்களது சிவப்பு கலர் ரேசிங்சைக்கிளை கள்ளத்தனமாக எடுத்து தெத்திப்பழகும், 'மாமா' என்று அன்போடு அழைக்கும் என் பால்யகால நினைவுகள் மீண்டும் மனதுள் குவிகின்றன.

இத்தொகுப்புக்கு அட்டைப்படம் வரைந்து தந்த நண்பன் மு. இ. அ. ஜபார், எவசைன் அச்சக முகாமையாளர் ஏ. எல். ஐ. இஜாபத்துல்லா, 'முனைப்பு' அச்சக கோர்ப்பாளர் பீ. எம். சஹீத் ஆகியோருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இக்கதைகள் அவ்வப்போது வெளிவரக் காரணமாக இருந்தவர்களும் பத்திரிகை சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் எல்லோரும், என் நன்றிக்குரியவர்கள்.

**எம். ஐ. எம். றஊப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

படைப்பாளிகளுக்கு படைப்புகளை நூல்வடிவில் வெளிக்கொணர்வதில் உதவவேண்டும் என்ற எண்ணம் எனக்கு நீண்டநாட்களாகவே இருந்து வந்தது. இன்று அது நிறைவேறி விட்டதை நினைத்து பெருமகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியவில்லை.

ஒரு படைப்பாளி தனது படைப்புகளை நூல் வடிவாக்கும்போது அடையும் மனச்சோர்வுகளையும், கஷ்டங்களையும் அனுபவவாயிலாக அறிந்தவன் நான்.

ஒரு தொகுதியை வெளியிட வேண்டுமானால் பெருந்தொகைப் பணத்தை திரட்சியாக முதலீடு செய்யவேண்டி உள்ளது. இது பலருக்குச் சாத்திய மற்றதாகப் போகின்றது. இதனால் நல்ல பல படைப்புக்கள் வெளிவராமல் கையெழுத்துப் பிரதியாகவே முடங்கிப் போய்விடுகின்றன.

எனது மாணவன் றஊப் ஒரு எழுத்தாளனாக இருக்கிறார் என்பதனையிட்டு என்னால் மகிழ்ச்சி அடையாமலிருக்க முடியவில்லை. அவரது கதைகளை முனைப்பு வெளியீடாகக் கொண்டு வருவதில் எனக்கு மிகுந்த மன நிறைவு.

மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகக் குறிப்பில் நுஃமான் அவர்கள் சொல்லி இருப்பதுபோல ஈழத்து இலக்கிய உலகில் வித்தியாச மான, நல்லதொரு தொகுப்பாக 'கனவும் மனிதன்' அமையும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. இதே போல இன்னும்பல நல்ல அறுவடைகளை முனைப்பின் ஊடாக செய்து முடிக்க இலக்கிய உலகம் உற்சாகப் படுத்தும் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு.

முனைப்பு-3வது இதழை அச்சிட்டுக் கொண்டி ருந்தபோது சாய்ந்தமருது 'எவசைன்' அச்சக முகாமை யாளர் ஏ.எல்.ஐ. இஜாபத்துள்ளாஹ் வழங்கிய நல்ல தொரு ஆலோசனை, சஞ்சிகை மட்டுமல்ல, புத்தகங் களை வெளியீடு செய்யவும் துணிவைத் தந்துவிட்டது. நான், சிரமம் என நினைத்திருந்த விடயத்தை இலகு எனக்காட்டி குருவாக இருந்து வழிநடத்தி வெற்றி அடையச் செய்த அவரை மறக்க முடியாது.

அவ்வப்போது செய்த சிறு சிறு முதலீடு மொத்த முதலீடாகி இன்று நூல் உருவில் காணக் கிடைக்கிறது. இதனால் ஏற்பட்டிருக்கக் கூடிய சிறு குறைபாடுகளை மனங்கொள்ளாது மன்னித்து விடுங்கள்.

மருதூர் பாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

மருதூர்க் கொத்தன் முக்கியமான ஈழத்துச் சிறு கதை எழுத்தாளர்களுள் ஒருவர். 1960, 70 களின் ஈழத்துச் சிறுகதை உலகில் அவரது பெயரும் பிரபல மாக இருந்தது. றஊப் கொத்தனின் மூத்த மகன். சமகால ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களுள் கவனத் துக்குரிய ஒருவர். இவர் தனது முதல் கதையை-மஞ்சள் சோறு- 1980 ஜனவரி முதல்திகதி எழுதியிருக்கிறார். அவ்வகையில் சிறுகதைத் துறையில் இவர் பிரவேசித்து சரியாக ஒரு தசாப்தம் முடிந்து விட்டது. இந்தப் பத்துவருடகால அறுவடை இந்தத் தொகுதியில் உள்ள கதைகள். றஊபின் கதைகள் கொத்தனின் கதைகளின் சாயல் எதையும் கொண்டிருக்கவில்லை. முற்றிலும் வேறுபட்டவை என்பது நம் கவனத்துக் குரியது. இந்த வேறுபாடு ஒரு தனிப்பட்ட தந்தைக்கும் மகனுக்கும் இடையே உள்ள தலைமுறை வேறுபாடு மட்டுமல்ல, தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் காணப் படும் இருவேறு தலைமுறைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுமாகும்.

தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளும் அவர்களின் வழித் தோன்றல்களும் கதை அம்சத்துக்கு முதன்மை கொடுத்தே சிறுகதை எழுதினார்கள். அதற்கேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையான கட்டமைப்புள்ள ஒரு வடிவத்தையும் அவர்கள் கையாண்டார்கள். சிறுகதை என்றால் இப்படித்தான், சிறுகதை இலக்கணம் இதுதான் என்ற ஒரு மனோபாவத்தை இவர்கள் வளர்த்திருந்தார்கள். இவர்கள் எல்லோரையுமே நாம் பழைய தலைமுறை எழுத்தாளர்கள் எனலாம். மௌனி இதில் ஒரு வித்தியாசம். மற்றவர்களிடமும் ஆங்காங்கே சில விலகல்கள். மற்றும்படி கதை அம்சம் பழைய தலைமுறைச் சிறுகதையின் பிரதான பண்பு எனலாம். புதுமைப் பித்தன் முதல் ஜெயகாந்தன் வரை இந்தப் பண்பை நாம் காணலாம். இவர்களின் கதைகளை மரபுவழிச் சிறுகதை என்று வேண்டுமானாலும் நாம் அழைத்துக் கொள்ளலாம்.

எழுபதுகளில் தோன்றிய புதிய சிறுகதை எழுத்தாளர் பலர் இந்த மரபுவழி முறையில் இருந்து பெரிதும் விலகினார்கள். கதை அம்சத்தை பெரும்பாலும் அல்லது முற்றிலுமாக இவர்கள் கைவிட்டார்கள். அன்றாட வாழ்க்கை அனுபவங்கள், அதன் அடியான மனோநிலைகள், எண்ணங்கள், உணர்வுகள் என்பனவற்றுக்கு வடிவம் கொடுக்க முயன்றார்கள். தொடர்புள்ள அல்லது தொடர்பற்ற நிகழ்வுகளைத் தொகுப்பதன் மூலம் ஒரு குறிப்பிட்ட உணர்வு நிலையை வெளிக்காட்டுவது இவர்களின் பொதுப் பண்பு எனலாம். கதை என்று சொல்லக்கூடியதாக ஒருசட்டகம் இவர்களிடம் இராது. இவர்கள் மூலம் தமிழ்ச் சிறுகதையின் பொருளும் வடிவமும் பெரிதும் மாற்றம் அடைந்தன. சா. கந்தசாமி, நா. முத்துசாமி, அசோக மித்திரன் முதல் வண்ணதாசன், வண்ண நிலவன், பிரபஞ்சன், பூமணி, கோபிகிருஷ்ணன் போன்றோர்வரை வெவ்வேறு



கனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் இப்பண்பு மாற்றத்துக்கு வழிவகுத்தனர். ஈழத்திலும் இப்பண்பு மாற்றத்தை நாம் காண்கின்றோம். கொத்தனும் அவருக்கு முந்திய, அவர்காலத்து எழுத்தாளர்கள் பலரும் பாரம்பரிய சிறுகதை வடிவத்தையே பயன்படுத்தினர். ஒரு கதை, இவர்கள் படைப்புக்களின் மையமாக இருக்கும். எழுபதுக்குப் பிறகு இங்கு தோன்றிய புதியதலைமுறை எழுத்தாளர் சிலர்--சிறிதரன், யேசுராசா, சண்முகம் சிவலிங்கம், எம்.எல்.எம். மன்சூர், உமா வரதராஜன், ரஞ்சகுமார் முதலியோர்--பாரம்பரிய மரபில் இருந்து விலகிச் சென்றனர். இலங்கைத் தமிழ்ச் சிறுகதைக்கு ஒரு புதிய முகத்தைப் பெற்றுத் தந்தனர். இவர்கள் வழக்கமான கதைசொல்லும் மரபை முற்றிலுமாக--அல்லது வெவ்வேறு அளவில் தம் படைப்புக்களில் நிராகரித்தவர்கள். இவர்களின் வரிசையில் வந்து நிற்பவர்தான் றஊப். இவர் சிறுகதையில், கதை அம்சத்தை முற்றாக நிராகரித்து விட்டவர் என்பதற்கு இத்தொகுப்பில் உள்ள கதைகள் அத்தனையுமே சாட்சி கூறுகின்றன.

இத்தொகுப்பில் 12 சிறுகதைகள் உள்ளன. எல்லாமே கடந்த பத்து ஆண்டுகளுள் எழுதப்பட்டவை. அதிலும் 1980 முதல் 1982 வரையுள்ள மூன்று ஆண்டுகளே இவரது கருவளம்மிக்க காலப் பகுதி. இம் மூன்று ஆண்டுகளில் எழுதப்பட்ட பத்துக் கதைகளும், 1983ல் ஒன்றும் பின்னர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு 1988ல் ஒன்றும்--ஆக 12 கதைகள். இதுவரை இவர் எழுதிய இரண்டொரு கதைகளைத் தவிர அனைத்தும் இத்தொகுப்பில் உள்ளன. இவற்றுள் மிகப்பெரும்பாலானவை இருபதுக்குப் பிறகு இருபத்தி ஐந்து வயதுக்குள் எழுதப்பட்டவை என்பதும் நமது கவனத்துக்கு உரிய செய்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் 12 கதைகளையும் ஒரு சேரப் படித்து முடித்த பிறகு இது ஒரு சிறுகதைத் தொகுப்பா அல்லது ஒரு நாவலா என்ற நியாயமான கேள்வி என்னுள் எழுந்தது. இரண்டும்தான் என்பதே அதற்குரிய பதில். ஒரு சிறுகதைத் தொகுப்பு; அதேவேளை ஒரு நாவல். 12 சிறுகதைகளால் அமைந்த ஒரு நாவல். ஒவ்வொரு கதையும் தனித்தனியே முழுமையாகவும் எல்லாம் சேர்ந்து ஒரு தனி முழுமையாகவும் அமைகின்றன. இந்த இரட்டைத் தன்மை இத்தொகுப்புக்கு ஒரு தனித்தன்மையை வழங்குகின்றது. றஊப் இந்த தனித் தன்மையை புத்திபூர்வமாக உணர்ந்திருக்கவில்லை என்று தெரிகிறது. அவ்வாறு உணர்ந்திருந்தால் சில கதைகளின் வரிசையை மாற்றி இருப்பார். இப்போது 10 ஆவதாக இடம் பெற்றிருக்கும் 'இடையில் வெளி கள்' இரண்டாவது அல்லது மூன்றாவதாக இடம் பெற்றிருக்கும். 11 ஆவதாக இடம் பெற்றிருக்கும் 'ஆகாசத்திலிருந்து பூமிக்கு' 9 ஆவதாக இடம் பெற் றிருக்கும். இவ்வாறு வரிசை மாறியிருந்தால் இது தொடர்ச்சி குலையாத அமைப்பொழுங்கு உடைய ஒரு நல்ல நாவலாகவும் அமைந்திருக்கும். இந்தத் தொடர்ச்சி இல்லாமலும்கூட இதன் நாவல் தன்மை கூறுபடவில்லை என்பது ஒரு விசேஷம்.

இக்கதைகள் அனைத்திலும் இடம்பெறும் பிர தான பாத்திரம் பெயர் இல்லாத அவன். ஏனைய பாத்திரங்கள் எல்லாம் அவனைச் சுற்றி அமைபவை. அவன் கனவு காணவும் கண்ட கனவுகள் கலையவும், அவன் இன்புறவும் துன்புறவும் காரணமாக அமை பவை. அவனது வாப்பா, உம்மா, மூத்தம்மா, மாமா, சகோதரர்கள், பெயர் இல்லாத சில 'அவள்' கள், சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள், மனைவி- இவர்கள் அனைவருமே சிறு சிறு கீறல்களாக- கோட்டுச் சித்திரங்களாக வந்து செல்பவர்கள். முழுமையாக அவன் மட்டும் தான். இதில் உள்ளவை அவனைப் பற்றிய கதைகள்--இது அவனைப் பற்றிய ஒரு நாவல்.

அவன் யார்? ஓர் இளைஞன். அவன் உணர்வுகளும் நொய்மையான மனமும் கொண்டவன். இலக்கிய பாஷையில் மோப்பக் குழையும் அனிச்சம் போல; நாட்டார் வழக்கில் தொட்டாற் சுருங்கி போல. மத்திய தரக் குடும்பத்தின் பற்றாக்குறை வாழ்வின் நெரிசல்களைச் சுமப்பவன் அவன். இந்த நெரிசல்களுக்கு உட்படாத சிறுபிராய நினைவுகளை மீட்டி அதில் சுகம் காண்பவன். அவனுடைய உலகம் மிகவும் சிறியது. அனுபவங்கள் குறுகியவை. அறிவார்த்தமான விசாரணைகளோ, இலட்சிய தாகமோ அவனிடம் இருப்பதாகத் தெரியவில்லை. வாழ்க்கை பற்றிய அவனது தரிசனங்கள் சாதாரணமானவை. மத்தியதரக் குடும்பத்தில் பிறந்து, பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்று, சில ஊமைக் காதல் அனுபவங்களுக்கு உள்ளாகி, உத்தியோகம் பெற்று, 'பலரைத் திருப்திப் படுத்த திருமணம் என்னும் வில்லங்கத்துள் மாட்டி' குழந்தை பெற்று, கடைசியில் உத்தியோகத்தையும் உதறி எறிந்துவிட்டு வெளியேறும் வரையுள்ள அவனது இளமை வாழ்வின் சில கட்டங்கள் அவனது பார்வையிலேயே இக்கதைகளில் விபரிக்கப்பட்டுள்ளன. இக்கதைகளில் விபரிக்கப்பட்டுள்ள வகையில் 'அவன்' நமது படித்த சராசரி இளைஞர்களுள் ஒருவன். அவனது ஆசை அபிலாசைகளில் பல நமதாகவும் உள்ளன. அவ்வகையில் அவன் நமது இளைஞர்களுள் ஒருவனாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் பிரதிநிதியாக இருக்கிறான். ஆயினும் அவனது உணர்திறன் நமது சராசரி இளைஞர்களில் இருந்து அவனை வேறுபடுத்திக் காட்டுகிறது. சண்முகம் சிவலிங்கம் வேறு ஒரு இடத்தில் சொல்வது போல அவன் 'தன் இருத்தலுக்குப் பிரக்ஞையாக இருக்கிறான்' இது அவனது தனித்துவம். இந்தப் பிரக்ஞை தான் இந்தக் கதைகளைச் சாத்தியமாக்கி இருக்கின்றது; அதற்கு ஒரு கலைத் தன்மையைக் கொடுத்திருக்கின்றது.

இந்தத் தொகுப்புக்குக் 'கனவும் மனிதன்' என றஊப் பெயரிட்டிருக்கிறார். இக்கதைகளின் நாயகனைக் கனவுகாணும் மனிதனாக கதாசிரியர் கருதுகிறார் என்பதை இத்தலைப்பு உணர்த்துகின்றது. நமது பெரும்பாலான வாசகர்களுக்கு இவரது கதைகளைப் போலவே இத்தலைப்பின் மொழி அமைப்பும் பிடிபடாததாக--நெருடலாகத் தோன்றக் கூடும். கனவு என்பது பெயர்ச் சொல். இங்கு அது வினையாகப் பயன் படுத்தப் பட்டிருக்கின்றது. கனவினான், கனவுகிறான், கனவுவான் என நாம் வழங்குவதில்லை. அவ்வகையில் 'கனவும் மனிதனும்' என்பதுதான் 'கனவும் மனிதன்' என பிழையாக எழுதப்பட்டிருக்கிறதோ எனச் சிலர் கருதக்கூடும். ஆனால் இது பிழையல்ல; ஒரு புதுமையாக்கம். மழைகிறது என்பது போல. வினவு என்ற வினை அடி இருப்பது போல அதே வடிவில் ஒத்த கனவு என்பதும் வினையடியாகக் கொள்ளப்பட்டுள்ளது; அவ்வளவுதான். இத்தகைய புதுமை ஆக்கங்களை பின்னோக்கு ஆக்கம் (Back formation) என மொழியியலாளர்கள் காட்டுவர். றஊப்புக்கு முன்னரே கனவு வேறு சில எழுத்தாளர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நமக்கு இப் பயன்பாட்டைவிட அவன் எவ்வகையில் கனவு காண்பவனாய் இருக்கிறான், அவனது கனவு எத்தகையது என்பது முக்கியமானது. பொருளாதாரப் பற்றாக் குறையினால் ஏற்படும் அன்றாட நெரிசல்களுக்கு ஒரு மாற்றீடாக தற்காலிகமாகவேனும் திருப்தி தரும் ஒன்றைத் தேடும் அவனது மனோ நிலையையே கனவு என்பது காட்டுவதாக நான் கருதுகிறேன். இந்த மனோ நிலையே பெரும்பாலும் எல்லாக் கதைகளிலும் ஏதோ ஒரு வகையில் வெளிப்பாடு பெற்றுள்ளது எனலாம். உதாரணமாக, 'மஞ்சள் சோறு' கதையில் அடம்பிடித் தாவது தீர்த்தம் வார்த்து மஞ்சள் சோறு கொண்டு போய்க் கழிப்புக் கழிக்கத்தான் வேண்டும் என்று அவன் தீர்மானிப்பது (பக். 12) பற்றாக்குறை வாழ்விலும் ஒரு திருப்தியைக் காணத்தான். 'வாழ்வைப் புரிந்து கொள்ள முந்தி' என்ற கதையில் கழிந்து போக இருக் கின்ற காலத்தையும் சுமைகளையும் நினைத்துக் கனக் கும் மனதுக்கு (பக். 13) ஒரு தேறுதலாகத்தான் 'சந் தோஷமாகக் கழிந்துபோன இளமைக்கால வாழ்க் கையை நினைந்து' அவன் பெருமூச்சு விடுவது (பக்.23) 'நொண்டிக்கனவு'களில் அவனது மனவலிக்கு மாற்றீ டாக மல்லிகைப் பந்தல் வீட்டுக்காரியின் சிரிப்பு ஒத் தடம் அவனுக்குத் தேவைப்படுகிறது. (பக். 60)

'இன்னும் வட்டத்துள்' இவ்வாறு முடிகிறது. 'விடுமுறையை ஊரில் கழிக்க இருக்கிறதை நினைத்து கொழும்பில் மனது ஏக்கம் கொள்ளும். மாத முடிவில் பட்ஜெட்டில் துண்டுவிழ பட்டினிகள் தொடரும். தொடர்ந்து உடுத்திக் கொண்டதில் றவுசர் புளித்து மணக்கும். சவரம் செய்யாததால் வளர்கின்ற தாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூனிவசிற்றியின் நரத்தை மேலும் உயர்த்தும். ஒளி மயமான உலகை எண்ணி மனது பறக்கும். இடைக் கிடை முகம் காட்டுகிற அவளது கனவுகள் நடுநிசியில் முழிப்புக் காட்டும்' (பக். 33) இங்கு பற்றாக்குறை வாழ்வின் சித்திரமும் அதற்கு மாற்றீடாக ஒளிமய மான உலகுக்கு மனது பறந்ததும் ஒரு கவிதையின் செறிவுடன் சொல்லப்பட்டுள்ளன. ஆனாலும் இந்த ஒளிமயமான உலகு இவரது கதைகளில் அரூபமாக, புகைமூட்டமாகவே காட்சியளிக்கின்றது. அந்த வகை யில் அவனது கனவுகள் அவனுக்கே அர்த்தமாகாத 'நொண்டிக் கனவுகள்' தான். அவனது நொண்டிக் கனவுகள் நமது நெஞ்சையும் உறுத்துவதுதான் றஊ பின் கலையின் வெற்றி.

வார்த்தைகளின் செட்டான படிமங்களைச் செதுக்கும் திறன் ஆரம்பத்தில் இருந்தே றஊபுக்கு கைவந்திருக்கிறது. உதாரணத்துக்கு அவரது முதலா வது கதையில் வரும் பின்வரும் சித்திரத்தைக் காட்ட லாம். 'சுவரில் தொங்கிய கண்ணாடி வலது சொக்கி லும் நெற்றிப் பொட்டிலும் மிகக் கோரமாகக் கொப் பளித்துப் போனதைக்கண்டு திண்ணையில் சலாரென் றது. எல்லோரும் சற்றைக்குத் திடுக்கிட்டுப் போனார் கள். பேசாமல் வந்து மெதுவாக உம்மா கண்ணாடித் துண்டுகளைத் தள்ளிவிட்டாள்.' பொதுவாகவே இத் தொகுப்பில் உள்ள கதைகள் எல்லாம் தம்மளவில் சிறப்பான வடிவ அமைதி பெற்றிருப்பதாகவே சொல்ல வேண்டும். அதிகம் அலட்டிக் கொள்ளாமல் ஆர்ப் பாட்டம் இல்லாமல் இயல்பாக நிகழ்வுகளைத் தொடுத்துச் செல்வது இவரது வினைத் திறனுக்கு அடையாளம். ஆயினும் இதற்கு ஒரு புறநடையாக



கனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெறுமையும் நிறைவும்' அமைந்துள்ளது. இதன் முடிவு றஊபுக்குப் பொருத்தமில்லாத வகையில் ஒரு மிகை நாடகப் பாணியில் அமைந்திருப்பதை ஒரு குறையாகவே சொல்ல வேண்டும்.

றஊபின் மொழிநடையில் அவர் அறிந்தோ அறியாமலோ ஆங்காங்கே மௌனியின் பாதிப்பு சாதகமாகவும் பாதகமாகவும் இருப்பதாகத் தோன்றுகின்றது. மௌனி நடைச் சிறப்புக்கு மட்டுமன்றி நெருடலுக்கும் பேர் போனவர். அத்தகைய நெருடல்கள் சில றஊபிடமும் காணப்படுகின்றன. இங்கு இரண்டொரு உதாரணங்கள் தரலாம்.

1. முடிவில் அதுபோல பருமன்கொள்ள முடிந்தால் இருக்கப்போகிறதை நினைத்து மனது மகிழ்ந்து கொண்டிருக்கும். *(பக். 44)*

2. இப்போதைக்கு இல்லாமல் அவளுக்கும் எல்லாம் முடிந்து ஐந்தோ ஆறோ வருடம் முடியத்தான் அவளைக்கட்ட எண்ணமென்று கதைத்ததெல்லாம் நினைவுக்குவர சிரிப்புவந்தது. *(பக். 66)*

3. அவவுக்கும் தனக்கும் இரத்த உறவில் இருக்கிற அளவுக்குப் பரிமாணம் மற்ற சகோதரர்களுடையதைப் பார்க்கிலும் குறைவாக இருப்பதை இப்போதும் உணர்ந்து கொண்டான். *(பக். 78)*

இத்தகைய நெருடல்களில் இருந்து றஊப் விடுபட வேண்டும் என்பது என் விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கதைகளைப்பற்றி பல விதமான விமர்சனங்கள் பல தளங்களிலிருந்து பல நிலைப்பாடுகளில் இருந்து வரக்கூடும். அது தவிர்க்க முடியாதது. அது எவ்வாறாயினும் றஊப் ஒரு வித்தியாசமான தனித்துவமான எழுத்தாளனாக வளர்ச்சியடைந்திருக்கிறார் என்பதை தமிழ்ச் சிறுகதை உலகோடு பரிச்சயம் உடையவர்கள் மறுக்கமாட்டார்கள். எனினும் ஒரு நல்ல எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய பார்வை ஆழம் - தரிசனவீச்சு இனித்தான் இவருள் வளர்ச்சியடைய வேண்டும். அடையும் என்பதே என் நம்பிக்கை.

1960 களில் நான் ஒரு ஆரம்ப எழுத்தாளனாக கொத்தனின் வீட்டுக்குப் போய்வந்து கொண்டிருந்த நாட்களில் றஊப் ஒரு பாலகன். பின் ஒரு காலத்தில் இவன் ஒரு சிறுகதை எழுத்தாளனாக வளர்வான் என்றோ இவனது தொகுப்புக்கு நான் ஒரு முன்னுரை எழுதநேரும் என்றோ எங்களில் யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. இன்று அது நிகழ்ந்திருக்கின்றது. இது மகிழ்ச்சி தரும் ஒரு வளர்ச்சிதான். கவிதைத் துறையில் மஹாகவியின் இன்னொரு கட்ட வளர்ச்சி சேரன் என்றால் சிறுகதைத் துறையில் கொத்தனின் பிறிதொருகட்ட வளர்ச்சியாக நான் றஊபைக் காண்கின்றேன். இந்த வளர்ச்சி மேலும் செழுமை பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

எம்.ஏ. நுஃமான்

கல்முனை-9-4-1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சள் சோறு

உடம்பெல்லாம் கோரமாக அம்மை போட்டு இன்றோடு ஐந்தாவது நாள் முடியப்போகிறது. இரண்டு நாட்களுக்கு முன் கொப்பளித்துப் போயிருந்த இடங்கள் உக்கிக் கொண்டு வந்தன. பாழ் வளவுக்குள் பிடுங்கி துணைக்கிற நாயுண்ணிப் பழம் நினைவில் தோன்றியது அவனுக்கு. போன கிழமை இரவொன்றில், இரவுச் சாப்பாட்டை மறந்து, வேளைக்குப் படுத்துக் கொண்டான். விடிந்ததும், எப்போதும் அவனோடு ஒட்டிக்கொள்கிற இளைய தம்பி ஓடி வந்து வெருள வெருள தள்ளி நின்று அவனைப்பார்த்துக் கொண்டான். பல் விளக்கிக்கொண்ட மாதிரி, எச்சிலைக் கூட்டித் துப்பிவிட்டு அவனைப் பார்த்த வாப்பா முகத்தைக் கோணலாக வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். தேநீலைக் கோப்பையோடு அவனை எழுப்ப வந்த உம்மா பதறிப்போனாள்.

முந்த நாள் இரவு கனவில் வந்த அம்மான் தாய் மார் அசத்துப் பணியாரம் கேட்டதாகச் சொன்னாள். அது, இதுக்குத்தான் என சந்தோஷவாக்கில் முகத்தை மலர்த்திக் கொண்டு காரணம் சொன்னாள்' அந்த வாக்கில் தான் விஷயம் விளங்கியது அவனுக்கு. எழுந்திருந்து உடம்பைப் பார்த்து, கொப்புளங்கள் கண்டு கலவரப் பட்டுக் கொண்டான். இரவு படுக்கைக்குப் போகையில் செப்பமாக இருந்த தோலைத் தடவிவிட்டுக்கொள்ள வேண்டும் போல் இருந்தது அவனுக்கு.

சுவரில் தொங்கிய கண்ணாடி, வலது சொக்கிலும், நெற்றிப்பொட்டிலும் மிகக்கோரமாக கொப்பளித்துப் போனதைக் கண்டு, திண்ணையில் சலாரென்றது. எல் லோரும் சற்றைக்குத் திடுக்கிட்டுப் போனார்கள். பேசா மல் வந்து மெதுவாக உம்மா கண்ணாடித் துண்டுகளை தள்ளி விட்டாள்.

இந்தநேரம் கணிதபாடம் நடந்துகொண்டிருக்கும். மிக விருப்பமான ஹபீப்முகம்மது ஆசிரியர் சோக்கோடு அவனையும் கரும்பலகையையும் விடுத்துவிடுத்து பார்ப் பது வந்து போனது. ஒரு கிழமையாகப் போகாததில் அரியஸ் நிறையவே இருக்கும். பாடசாலைக்குப் போகா ததையிட்டு ஆயிசா மிகவும் சந்தோசப்பட்டுக் கொள் வாள். தனது கெட்டித் தனத்தை என்றுமில்லாதவாறு பீற்றிக் கொள்வாள். வகுப்பில் தருகிற கணக்குகளை அவனுக்கு அடுத்தாற்போல இரண்டாவதாகக் காட்ட வேண்டியிராது அவளுக்கு.

கொஞ்ச நாளைக்காவது அவள் முதலில் காட்டட் டும் என்று எண்ணுகின்ற இயலாத மனது கூட வந்து



கனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனது அவனுக்கு. இதுகூடப் பரவாயில்லை. பொறுத்துக் கொள்ளலாம். கூட்டாளிமாரோடு பின்னேரம் விளையாட முடியாமல் போனதை நினைத்து துக்கம் வந்தது. நளீரோடு சேர்ந்து கஸ்முனைக்குப் போய் கைக்குட்டையை அவிழ்த்து எண்பத்தைந்து ரூபாவுக்கு வாங்கி வந்த ரியுப்லஸ் பந்தை தன்கையால் முதலாவதாக விளையாட முடியாமல் போனதை எண்ணி மிக நொந்து போனான்.

வழமையிலும் பார்க்க இந்தமுறை கோடை கொஞ்சம் அதிகரித்துப் போயிருந்தது. சற்றைக்கொரு தரம் வெக்கைக் காற்று வேகமாக வீசிக் கொண்டது. ஓலை பழுத்து உதிர்ந்துபோக நாக்கு இல்லாமல் கூடு அந்தரப்பட முற்றத்துத் தென்னையில் காகம் மிகவும் சோகமாக சாக்குரல் இட்டுக் கொண்டிருந்தது.

கோடை பிறந்துவிட்டால் படு கொண்டாட்டம். கூடும் குஞ்சுமாக இருக்கிற காகக் கூடுகளைக் கலைப்பதிலிருந்து காக்காகுயில் பிடித்து விற்றல், கள்ள ஓலை எடுத்து விற்றல் அவனுக்கும் பாடமாகிப் போயிருந்தன. கேணித் தென்னந் தோப்புக்குள் அடிமரத்தில் யாரோ கழித்துப் போட்டிருக்கிற நரகலில் கால் பட்டுக் கொள்ளாமல் கள்ள ஓலை பிடுங்குவது மிகவும் பவுத்திரமான விசயம். அவனுக்கு மட்டும்தான் கூட்டத்தில் கலையாகவும் போயிருந்தது அது.

எப்பவுமே கரேலென்ற பச்சையாய் ஒற்றைப் பனைக்கு முன்னால் நீள்வட்டத்தில் கிடக்கிற நொச்சிப் புதர் ஆரம்பத்திலேயே கருகத் தொடங்கி இருந்தது. இந்த மட்டில் தூத்தி விளையாட ஒழிந்து கொள்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலைகளெல்லாம் இலையுதிர்ந்து மொட்டையாக இருக்கும். தேடிவருகிறவனுக்கு ஆட்களைப்பிடிக்க கஸ்ரம் இராது. பிடிபட்ட கையோடு அசட்டுச்சிரிப்புடன் விலத்தி விலத்தி வரும்போது சருகுகள் மிதிபட்டுச் சலசலக்கும். கடைசியாக விளையாடிவிட்டு வரும்போது கருங்கல் கொண்டு சிதவல் எழுப்பிவைத்த ஆலமர உச்சிக் கொப்பில் பால் உறைந்து சிவந்து போயிருக்கும். கசிந்த சக்கரை மாதிரி. அதை நினைக்க எச்சில் ஊறிக்கொண்டது. வீட்டில் களவெடுத்துக் கொண்டு போகிற கறுவாப்பட்டையோடு சேர்த்து சுயிங்கம் இன்று கனநாளாகின்றது. எண்ணும்போது ஆசை கூடிக்கொண்டு வந்தது அவனுக்கு. மூத்த உம்மாவின் வீட்டுக்குப்பக்கத்தில் சவ்தாவும் அவளுடைய தோழிகளும் உம்மா வாப்பா வைத்து விளையாடமாட்டார்கள். அவனில்லாமல் விளையாட அவளுக்கு மனது வரமாட்டாது. இனிமேல் வாப்பாவாக விளையாட முடியாதென எண்ண துக்கம் அடைத்துக் கொண்டது. அம்மான் போட்டதில் ஆழமாகிப்போன வடுவினால் அவனுக்குச் சமமாக, அழகில்லாமல்போன கபூரை அவள் ஒதுக்கிக்கொண்டது போல அவனையும் இனி ஒதுக்கிக் கொள்ளுவாள். கபூர் கெஞ்சாவண்ணம் கெஞ்சி மன்றாடியதைப் போல அவனும் அவளை ஓட்ட ஓட்ட வரவேண்டியிருக்கும். இதைநினைக்க மனது துக்கப்பட்டது. வீட்டில் எடுத்துவருகிற வெற்றிலை பாக்கைப்போட்டு சிவந்த சொண்டை நீட்டி, நீட்டி எச்சிலை துப்பிக்கொண்டு அவள் நிச்சயம் மாட்டேன் என்பாள். அதனை நினைக்கக்கூட சங்கடமாக இருந்தது.

கபூருக்கு மூக்கில் இருப்பதைப்போல வலதுபக்கச் சொக்கில் உக்கிவர இருக்கின்ற கொப்புளத்தில் மிளகு ஒன்றை வைத்து நிரப்பிக் கொள்ளலாம். இதைவிடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதாக உடம்பில் வேறு எங்காவது வந்திருக்கலாம். முகத்தில் வந்திருக்கவே வேண்டாம். நினைக்க, நினைக்க வெப்பிசாரமாக இருந்தது அவனுக்கு. அவனை அவள் விலத்திப் போடுவாள். இனிமேல் மக்களாகத்தான் விளையாட முடியும். பொய்க்கு மண்சோறு காணாது என்று அடம்பிடிக்கிற மக்களை, பல்லைக் கடித்துக் கொண்டு பாவனையால் விளாசித் தள்ளுகிற சுகம் அவனுக்கு இனி இல்லை.

எங்கேயோ இருந்து உம்மா பறித்துக்கொண்டு வருகிற வேப்பந்துளிரைக்காண அவனுக்கு என்னவோ செய்தது. ஒவ்வொருநாளும் இப்படித்தான் நடக்கிறது. ஆலைக்கு அடுத்தாற்போல ஜமயத்துப் பிட்டியில் நிற்கிற வேம்பு மனதுக்குள் வந்துபோனது.

மேட்டுவட்டை வெட்டிமுடிய ஊருக்குள் நுளம்பு தொல்லை வந்துவிடும். புகைபோட ஒடித்துக் கொண்டு வருகிற வேப்பங் குழைகள் நாட்கணக்காக கிடக்கும். அக்கம் பக்கத்து வீட்டாரும் வேப்பங்குழைக்காக வந்து போவார்கள். உம்மாவுக்காகப்பரிதாபப்பட்டுக்கொண்டான். அவனுக்குவராமல் வேறுயாருக்காவது அம்மை போட்டிருக்கவேண்டும். இந்த மாதிரி உம்மா கஷ்டப்பட வேண்டிய அவசியமே இல்லாமல் போயிருக்கும். அப்படி ஒரு பரிதாபத்துக்கு ஆளாகாமல் போனது வேம்பு செய்த புண்ணியம். மொட்டையாக இல்லாமல் போக.

மதியம் ஆக ஆக அழுத்தி கொண்டு வந்தது அவனுக்கு. மீன் பொறுக்க வெறுங் காலுடன் நிறைமதிய சுடுமணலில் நடக்கிற அவனுக்கு இப்போது அவதியாகவே இருந்தது. உடம்பு கணகணத்தது, மஞ்சள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பங் குழை அரைத்து இப்பவே பூசிக் கொண்டு குளிக்க வேண்டும் போல் இருந்தது.அப்படி ஒரு தகிப்பு.இது ஏழு நாள் கெடுவாம்.உம்மா சொல்லி இருக்கிறாள். வெம்பு மணல் தாண்டி வந்து கொஞ்சிப் பார்த்து விட்டு போன வாப்பம்மாவும் அப்படித்தான் சொல்லி இருந்தாள். இன்னமும் முடிய இரண்டு நாள் இருக்கின்றது. இரண்டும் இரண்டு வருடமாக அவனுக்குப் படுகிறது.

கபூருக்கு அம்மை வந்த சமயம் இவனுக்கும் வர வேண்டுமென ஆசைப்பட்டான். உம்மா அனுப்புத் தோன்ற பாடசாலைக்கு டிமிக்கி கொடுப்பதற்காக பொய்க் காய்ச்சலெல்லாம் வந்திருக்கின்றது. பழச் சோடா குடிப்பதற்குக் கூட புண்கள் நெடு நாளைக்கு மாறாமல் இருந்திக்கின்றன.காய்ச்சலைப்போல கொப்புளங்கள் இல்லாமல் அம்மை வருமென்றால் கபூருக்கு வந்த அடுத்த நாளே அவனுக்கும் வந்துவிட்டிருக்கும். இது மட்டும் தான் அவனளவில் பொய்த்துப்போயிருந்தது.இப்போது அதை நினைக்க மனது சந்தோசப் பட்டுக்கொண்டது...... கபூருக்கு அம்மை போட்டுத் தீர்த்தம் வார்க்க உம்மா போயிருந்தாள். அவனுக்கும் அழைப்பு கிடைத்திருந்தது கபூரிடமிருந்து.

மஞ்சள் வைத்து அரைத்த வேப்பங்குழை அரைப்பை கபூருடைய உம்மா அவனிடம்தான் கொடுத்தாள். கபூருக்கு அவன்தான் உச்சிதொட்டு உள்ளங்கால்வரை அப்பி விட்டான். மாமா,தண்ணீர் ஊற்ற தீர்த்தம் வார்த்த சடங்கில் கூட்டாளி என்ற வகையில் அவனுக்குத்தான் ஏகப்பட்ட மரியாதை. வெள்ளை உடுப்பு உடுத்தி சோற்றுப் பெட்டியை கபூர் சுமந்து கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்க, அவனும் பெண்கள் கூட்டமும் கடற்கரைக்குப் போனார்கள். அன்று வாழை இலையில் கடற்கரைக் காற்று வெளியில் தின்ற மஞ்சள் சோறும், செத்தல் மிள காய் போட்டுச் சிவந்துபோன முருங்கை இலைச் சுண்ட லும் இப்பவும் அவனுக்கு நீரைச் சுரக்க வைத்தது. அந்தமாதிரி வெட்ட வெளியில் வாழை இலையில் மஞ் சள் சோறு தின்று பழக்கப் பட்டிருக்க வில்லை. இப்ப நினைக்க நினைக்க புது அனுபவமாகப் படுகின்றது. அவனுக்கு. மிஞ்சிப் போன சோற்றை கபூர் கடலில் கொட்ட கூடப்போனவன் அவன்தான். அந்தச் சாட் டில் மட்டி கெல்ல நின்று காற்சட்டையை நனைத்துக் கொண்டதெல்லாம் நினைக்க இனிப்பாக வந்து போனது"

தீர்த்தம் வார்த்து மஞ்சள் சோறு ஆக்கவெல்லாம் கனசெலவாம். பிறகு ஒரு நாளைக்காம். உம்மா சொல்லி இருக்கிறாள். கேட்ட மாத்திரத்தில் சோகம் சோகமாய் வந்தது. அம்மை வந்திருக்க வேண்டாமென்று தோன் றியது. நினைக்க நினைக்க அடக்கிக் கொள்ள முடிய வில்லை. இந்தமுறை இல்லாட்டில் அடுத்த முறை சட்டை தைத்துப் போடுகிற மாதிரி இது என்ன பெருநாளா? அம்மை... அதுவும் பெரியம்மை. மூத்த மாமாவுக்கு வந்தபோது அசத்துப் பணியாரம் சுட்டுப் பகிர்ந்ததல் லவா. சுகாதாரம் படிப்பிக்கிற சேர் சொன்னமாதிரி அம்மை வாழ்நாளில் ஒரு தடவைதான வருமாம். நினைக்க மனதுக்கு கஷ்டமாக இருந்தது. எல்லாத்துக் கும் மேலாக கபூரோடு சமமாகப்பழக முடியாமல்போ கப்போகின்றதே என நினைக்க உம்மாவோடு கோபம் கோபமாக வந்தது அவனுக்கு. நாளைக்கிக் கூனிக்குறுகி தலையைத் தொங்கப் போட்டுத் திரிய மனது ஒத்துக்

கொள்ளவில்லை. மறுபுறம் உம்மாவை நினைக்க பாவமாக இருந்தது. இருந்தாலும் முடியாது. தீர்த்தம் வார்த்து, மஞ்சள்சோறு கொண்டுபோய் கழிப்புக் கழிக்கத்தான் வேண்டும். பன்னீர் வாங்கக் கடைக்குப் போயிருக்கிற உம்மா வந்ததும் வேண்டுமென்று சண்டை போட்டு அழுவதற்காக காற்சட்டையை உயர்த்திவிட்டுக் கொண்டு, நாடகத்தில் நடிக்கும்போது கண்ணீர் வர, சேர் சொல்லிக்கொடுத்த யோசனைகளை நினைவுபடுத்திக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வைப் புரிந்து கொள்ள முந்தி

ஐம்பதுதான் மனிதனுக்குச் சராசரி என்றால் வாழ்நாளில் பெரும்பகுதியை அவன் கழித்துவிட்டான். இருபத்திமூன்று வயதில் அடிவைத்து சில மாதங்கள் உருண்டோடி விட்டன. கழிந்துபோக இருக்கின்ற காலத்தையும், சுவைகளையும் நினைத்தபோது மனம் கனத்துக்கொண்டது. தப்பிப்போக முடியாமல் பிடித்துக்கொண்டிருக்கின்ற விசயங்களை நினைத்து பெரிதும் கலவரப் பட்டுப்போனான். இப்படி நிர்ப்பந்திக்கப்பட்டுப் போனதில் பிரச்சினைகளை ஆழமாக யோசித்து அதில் மூழ்கிப் போகின்ற போதுகளில் ஒருவகைத் திருப்தி அவனுக்குள் பூரிக்கவும் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் சில்லு வளைந்து போக, அதைத் தாங்கிக் கொண்டு நிற்கின்ற இரும்புப் பட்டங்களில் ஒன்றுடன் விநோதமான ஓசை எழுப்பிக் கொண்டிருக்க, மூன்று றோதைச் சைக்கிளை இளைய தங்கை படாதபாடுபடுத்திக் கொண்டிருந்தாள். தன்னை வைத்துத் தள்ளும்படி அவள் அவனைக் கேட்க, அவனை வைத்து ஹென்றிலை தூக்கிப் பிடித்துக் கொண்டு இழுத்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கும் அந்த சைக்கிளுக்கும் ஒரு சில வயது தான் வித்தியாசம். அவனுக்கு அந்த நிகழ்ச்சி ஞாபகம் இருக்கிறது. ஒரு நாள் இரவு வேளைதான் வாப்பா அதனைச் சுமந்து கொண்டு வந்தார். இரும்புக் குழாய்கள் ஒயில் குளோத் பேப்பரால் சுற்றப் பட்டிருந்தன. படுத்துக்கிடந்த அவனை எழுப்பிக் காட்டிய போது சந்தோசத்தில் பாய்ந்து போய் அவைகளைக் கழற்றிப் போட்டான்.

விரிந்ததும் விரியாததுமாக அவனை அதில் ஏற்றி வாப்பா தள்ளிக் கொண்டு திரிந்தார். உம்மா கேற்றுக்குள் நின்று புன்னகை செய்து கொண்டிருந்தாள். சில நாட்கள் கழிந்து போக மஹ்றூப்பின் வாப்பாவும் மஹ்றூப்பை ஒரு சைக்கிளில் ஏற்றி அந்த றோட்டில் தள்ளிக் கொண்டு திரிந்தார்.

மஹ்றூப்பும் அவனும் சேர்ந்து அந்தச் சைக்கிள்களை வைத்துக் கொண்டு என்னென்ன வெல்லாமோ செய்திருக்கிறார்கள். தீப்பள்ளையத்துக்குப் போனதில் இரும்புக் கூண்டுக்குள் மோட்டார் சைக்கிள் ஓட்டத்தைப் பார்த்து விட்டு பழைய கிடுகுகளை வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட வடிவமாக வேலிபோல அடைத்து விட்டு, அக்கம் பக்கத்துப் பிள்ளைகளுக்கு ஒரு சதம், இரண்டு சதம் என்று டிக்கட்டுகளை விற்றுப் போட்டு, வளைத்துவர ஆட்களை நிற்கச் செய்து அவனும் மஹ்றூப்பும் ஆளுக்கொன்றில் இருந்தவாறு எத்தனையோ தடவைகள் சுற்றியிருப்பார்கள். கைகளை ஒரு மாதிரியாக மடக்கி திப் பள்ளயத்தில் இரும்புக் கூட்டுக்குள் ஓடிய அந்த மனிதனை பாவனை பண்ணிக்கொண்டு வளைந்து வரும் போது எத்தனை தடவைதான் மண் கவ்வி இருப்பார்கள்.

அவனுக்குப் பிடித்தமான இளைய மாமா பெயின் றோட்டுக்கு சைக்கிள் ஓட்டப் போட்டி காட்டக் கூட்டிப் போயிருக்கிறார், போன வீரர் திரும்பி வருவதற்கிடையில் கரச்சற் படுத்தி குட்டு வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்து, மூத்தம்மாவின் உள் வீட்டு வளையில் தொங்கிக் கொண்டிருந்த அந்த சைக்கிளை திருப்பி எடுத்துத் தரும்படி உம்மாவிடம் மன்றாடி, கதறி அழுது பெற்று அவனும் மஹ்றூப்பும் பிள்ளைகளுக்கு ஓட்டப்போட்டி காட்டியிருக்கிறார்கள்.

இவைகளை நினைத்த போது அவனுக்குச் சிரிப்பு வந்தது. தங்கையை இறக்கி, வளைந்து கிடந்த றோதையை பலங்கொண்ட மட்டும் அமுக்கி நேர்ப்படுத்திப் பார்த்தான்; சரிவரவில்லை. தங்கையின் தொந்தரவு அதிகரித்துப் போக மீண்டும் அவளை வைத்துத் தள்ளிக் கொண்டு திரிந்தான். அந்தச் சைக்கிளை மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரத்தை உயர்த்தி ஒரு தரம் முழங்கால்களைத் தடவிப் பார்த்தான். இரண்டிலும் ஆறிப்போன காயங்களின் தடங்கள். அப்படி ஏற்பட்டுப் போகக் காரணமாக இருந்த பெரிய சைக்கிள் நினைவுக்கு வந்தது. ஊரைவிட்டுக் கல்முனைக்குப் படிக்கப் போனதில் சிறிது காலம் கழிந்து, அவனுக்கும் அந்த சைக்கிளுக்கும் உறவு ஏற்பட்டு விட்டது.

ஒரு நாள் காலையில் விழித்துக் கொண்ட போது அந்தச் சந்தோஷமான செய்தி அவனை வரவேற்றது. வாப்பா நடுராத்திரி வேளை வந்திருக்கிறார். மரதன்கடவளையிலிருந்து அவர் கொண்டுவந்த விளாம் பழம் காஞ்ச இறைச்சிகளோடு தம்பிமார் அமளிப் பட்டுக் கொண்டிருந்தது அவனுக்குப் பெரிதாகப் படவில்லை. முகம் கழுவினதும் கழுவாததுமாக தேனீரைக் கூடக் குடியாமல், நேற்று முழுவதும் கடற்கரை வெம்புமணலில் விளையாடியதால் புழுதியாகிப்போன காற்சட்டையோடு மெயின் றோட்டுக் கடைக்குப் போய் விட்டான்.

தட்டுத் தடுமாறி இதுவாகத்தான் இருக்குமென யூகித்துக்கொண்டு சொருகுபலகைகளைத் தட்டிக் கூப்பிட்டபோது கடைக்காரன் கோபப் பட்டுக்கொண்டு எழுந்து வந்தது அவனுக்குப் பீதியை உண்டாக்கி விட்டது. பயந்து ஒடுங்கிப் போய் வாப்பா இரவு லொறியில் கொண்டு வந்த சைக்கிளைத் தரட்டாம் என்று கூறயாரு. எவரு, நீ அவர்ர மகன என்றெல்லாம் கடைக்காரன் கேட்ட குறுக்குக் கேள்விகளுக்கெல்லாம் பயந்து பயந்து விபரம் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிப் பிசகாத அந்த வேளையில் போர்த்திக் கொண்டிருந்த கரிச்சாரனைக் கூட நழுவிப்போக விடாமல், மாச்சல் பட்டுக் கொண்டு உருட்டி வந்து அவனிடம் சைக்கிளைக் கடைக்காரன் கொடுத்தான். அதிலிருந்து சயிப்புத் தட்டும்வரை அவனுக்குச் சோறு, தண்ணீர் பற்றிய எந்த நினைவுமே கிடையாது. படுக்கும் வேளையில் மட்டும் தான் அவனுக்கும் சைக்கிளுக்கும் பிரிவு இருந்தது. படுக்கையில் கூட சில போதுகளில் சைக்கிள் சம்பந்தமாக வாய் உளாவியதாக உம்மா சொன்னதைக் கேட்டு அவன் வெட்கித்துப் போயிருக்கிறான்.

நாளாக நாளாக ஊருக்கும் கல்முனைக்கும் சைக்கிள் ஓடி அலுத்துப் போனான். அவனது கால்களுக்கு சுகமில்லாமல் அந்த சைக்கிள் மாறியது. அதிலிருந்து எழுகின்ற விநோதமான கீச்சிடல், தடபுடல் எல்லாம் அவன் மானத்தை வாங்க அதனை யாரோ விலைக்கு வாங்கிக் கொண்டு போனதெல்லாம் நினைவில் இருக்கிறது.

முற்றத்தில் நின்ற ஜேம் மரத்தில் பழமொன்றைத் தேடி அண்ணார்ந்து கொண்டு நின்றவன் அந்தப் பாடல் கேட்டு பழத்தை மறந்து போனான். ஈழத்துப் பாடல் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கின்றது. வாப்பா எழுதிய பாட்டுத்தான் அது. அவருடைய பாட்டு என்பதால் மட்டும் அவனுக்கு மகிழ்ச்சி வரவில்லை. பாடுகின்ற குரலுக்குப் பதிலாக அவள் தோழிகளோடு சேர்ந்து, வீட்டில் அபிநயித்திருந்தது அவனைப் பாடுபடுத்தியது.

கடந்து போன அந்தச் சம்பவங்கள் இப்பநினைக்கும் போதுதான் இழப்பாகவும், இன்பமாகவும் படுகிறது. அவளும் தோழிகளும் சேர்ந்து எத்தனையோ பொழுதுகளை அவன் வீட்டில் கழித்திருக்கிறார்கள்.

போட்டி ஒன்றுக்காக அவளுகளை கூட்டி வந்து பாட்டுச் சொல்லிக் கொடுக்க அவளுகள் எத்தனை முறைதான் அதனைப் பாடியிருக்கிறார்கள். சில தடவைகளில் அவளோடு அவன் விஷயமில்லாமல் வேண்டுமென்று பேசி இருக்கிறான். என்னதான் பேசினது... என்று ஞாபகத்துக்கு வரவில்லை.

அந்தப் போட்டி முடிந்து அவர்கள் முதலிடம் பெற்றுவிட்டார்கள் என்று வாப்பா கொண்டு வந்த செய்தி கேட்டு அவன் மகிழ்ந்து போனான். அதற்குப் பிறகு அவளுக்கும் வீட்டுக்கும் தொடர்பில்லாமல் போக அவனுக்கு வெறுமை மிஞ்சிப்போயும் அவன் சோர்ந்து போகவில்லை. அதப் பள்ளிக்கூடத்திற்கு வருகின்ற,போகின்ற வேளைகளில் அவளைப்பார்ப்பதற்காக ஒழுங்கையில் நின்றிருக்கிறான்.எத்தனையோ தடவைகள் அவள் அவனைப் பார்க்காமல் வேறு பராக்கில் போயிருக்கிறாள். இப்பகூட அவனுக்கு கதைக்க அனேகமாக வரமாட்டாது. ஒரு பயந்த சுபாவம். ஊத்தச் சட்டை சகிதமாய் குர்ஆனை இடுப்பில் இடுக்கிக் கொண்டு அவள் போகையில் சில தடவை கதை கேட்டுஇருக்கிறான். அவள் சிரித்துக் கதைத்தால் போதும், அவனுக்குப் பயம் வந்துவிடும்.

ஒரு பெருநாளைக்கு அவன் மருதோன்றி இட்டுக் கொண்ட போது அவனது பெயரை வலது கையில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறித்துக் கொண்டு திரிந்திருக்கிறான். மருதோன்றி அழிந்து போனமாதிரி அவள் நினைவும் அவனை விட்டு வேறு பராக்குகள் குறுக்கிட்டுப் போனதில் அழிந்து போய் விட்டது.

கொழும்பிலிருந்து வந்து கல்முனைக்குப் போன போது ஒரு நாள் அவளைக் கண்டு மலைத்துப் போய் விட்டான். நன்றாக வளர்ந்திருந்தாள். கார் மேல் பாத்திமாவில் ஏ/எல் செய்கிறாளாம். பல்கலைக் கழகத்தில் படிக்கும் விடயம் அவளுக்கு தெரியுமோ என்றெல்லாம் அவன் யோசித்துக் கொண்டான்.

வீட்டுப் பூச் சன்னலில் கூடு வைத்திருக்கின்ற அடைக்கிலன் குருவிகள் ஏதோ சண்டை போட்டுக் கொண்டு திரிந்தன. இது போல எத்தனை ஜோடிக் குருவிகளைக் கண்டிருக்கிறான். குருவி வளர்ப்பது அவனுக்கு மிகவும் பிடித்தமான விஷயம். உம்மாவின் முடிச்சிலோ, அலுமாரியிலோ மறைத்து வைத்திருக்கின்ற சில்லறைக்காசுகள் காணாமல் போகிற அன்றைக்கு அவன் குருவிகளோடு வருவான். கையளுக்குப் பட்டு நோவினையால் அவைகள் செத்துப்போகும் வரை அவனுக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லாத வேலை குருவிக்கூடு கட்டுவது, வெட்டுக்கிளி பிடித்துக்கொடுப்பது, குரக்கன், நெல்லு வாங்கிவந்து கொடுப்பதென்று எத்தனையோ வேலைகள். ஒரு நாள் குருவி ஒன்றைப் பூனை கடித்துப் போட்டதைக்கண்டு அதைச் சாகச் செய்யும் வரை அவனுக்கு நிம்மதியில்லை. கனநேரமாகச் சண்டை போட்டுக்கொண்டிருந்த அடைக்கிலன் குருவிகளை பார்த்துக் கொண்டு நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூறாவளியின் போது பலகை உடைந்த ஜன்னலி னூடாக குருவிகள் பறந்து கொண்டிருந்தன. அவன் படம் காட்டப் போகின்ற நாட்களிலும் அந்த ஜன் னல் அந்தக் கோலத்தில் தான் இருக்கும்.சுன்னத்துக் கல்யாணத்திற்குப் போட்ட கதவுகள் இல்லாமல் அது வெறுமையாகக் கிடக்கின்றது.படம் காட்டத்தொடங் குகின்ற நாட்களிலும் அந்த ஜன்னல் அவனுக்குப் பெரும் பிரச்சினை.பழஞ்சாறன்,கித்தான் சாக்குகள் என்று அதனை மறைப்பதற்குப் பெரும் பாடுபட்டுப் போவான்.அப்பவும் ஒளிப்பொட்டுக்கள் அதனை ஊட றுத்து வந்து கொண்டுதான் இருக்கும்.

இளைய மாமாவுக்கும் அவனுக்கும் கணக்க விஷ யத்தில் ஒற்றுமை உண்டு.படம் காட்டுகின்ற விஷயத் தில் அவர்தான் அவனுக்கு குருஃரீலீஸ் பேப்பர் வாங்கி பேப்பரில் வரும் எம்.ஜீ.ஆர், சிவாஜி படங்களைப் பதிக்க வேண்டுமென்று அவர்தான் சொல்லிக்கொடுத் தார். எம்.ஜீ.ஆரைக்காட்டிலும் சிவாஜியின் படம் தான் அவனது ரீலிசில் அனேகமாக வரும்.நடிகர் திலகம் என்று சொல்லிக் கொள்வதில் அவனுக்கு ஒரு அலாதியான விருப்பம்.

எம்.ஜீ.ஆர் பாட்டி,சிவாஜி பாட்டி என்று கட்சி பிரித்து வகுப்பில் சண்டை கூடப் போட்டிருக்கிறான். அவைகளை நினைத்த போது சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.பாடசாலைக்குப் போவதைப் போல ஒதப்பள்ளிக்குப்போக அவனுக்கு பிடித்திருக்கவில்லை. லாப்பாவின் அடிகளுக்குப் பயந்து குர்ஆனை ஓதி முடித்திருக்கிறானே ஒழிய அதுகள் பற்றிய நினைவே இல்லை. ஒதப் பள்ளிக்கு டிமிக்கி கொடுத்து விட்டுக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரைக்குப் போய்விடுவான்.

பச்சை ஓலை பறித்து, ஈர்க்கிலைத் தனியாக எடுத்து நுனியில் தொண்டு போட்டு, காய்ந்த கம்புச் சுள்ளியில் குத்திக் கொண்டு, ஓணான் பிடிக்கப்போவதென்றால் அலாதி விருப்பு.கடும் பிரயத்தனப்பட்டு ஓணானைப் பிடித்து ஆலைக்குக் கீழ் கொண்டு வந்து மடுத்தோண்டி,தலைமட்டும்தெரிய ஓணானைப்புதைத்துப் போட்டு,அதன் வாய்க்குள், வீட்டில் உம்மாவின் கண்ணை மூக்கைப்பார்த்து காற்சட்டைக்குள் நிரப்பி கொண்ட கரட்டிச் சுண்ணாம்பையும் திணித்து,புகையிலை மயக்கத்திலும் அவதியிலும் அது தலையை ஆட்டுவதை ரசிப்பதில் அவனுக்குப் பெரும் விருப்பு. அவனும் சகபாடிகளும் நாள் தவறினாலும் ஓணான் பேயாட்டத் தவறுவதில்லை.

வாடைக்காற்றுத் தொடங்க,பேயாட்டம் முடிந்து பட்டம் விடத் தொடங்கி விடுவார்கள். தாள்பட்டம், இலைப்பட்டம், பாம்புப்பட்டம் என்று ஆசைப்பட்ட மாதிரியெல்லாம் பட்டம் விட்டிருக்கிறான். ஒரு மாலைக்குள் சாச்சியின் தறிமாலுக்குள் புகுந்து பட்டம் விட நூல் கட்டைகளஎடுத்து பிடிபட்டதிலிருந்து பல நாட்கள் சம்மாந்துறைப்பெரியப்பாவின் வீட்டில் அஞ்ஞாதவாசம் இருந்திருக்கிறான். தேடி அலைந்து களைத்துப்போய் சலிப்புத்தட்டியவராய் கடைசியில் பெரியப்பா வீட்டிலிருந்து கூட்டிப்போய் வாப்பா பிரம்பால் விளாசியது இன்னும் அவனுக்கு ஞாபகமிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்ரஸா சந்தியில் தான் அவனும் மசூரும் சண்டை போட்டு மண்டை உடைத்துக் கொண்டது. மசூரைக் கையில் பிடித்துக் கொண்டு, மசூரின் உம்மா வீட்டை வந்து சொந்தம் உறவு முறை பிரித்துக்காட்டி யதிலிருந்து மசூர் மௌத்தாப் போகும் வரை அவ னுக்கு மசூர்தான் கூட்டாளி. மசூர் அவர்களுடைய கடையிலிருந்து களவெடுத்துக் கொண்டு வரும் பீடி களை கடற்கரை உப்பு வாடிகளில்தான் புகைத்துத் தள்ளுவார்கள்.

யூனிவசிற்றியில் நண்பர்கள் சிகரெட் வாங்கித் தரும் போது பல தடவை மசூரை நினைத்து இவன் கலங்கி இருக்கிறான். அப்படி ஒரு நட்பு இல்லாமல் போனது இப்போதுதான் அவனுக்குப் பேரிழப்பாக இருக்கின்றது. அந்த விஷர் நாய் மட்டும் கடிக்காமல் இருந்திருந்தால் சின்ன வயதில் பிரியநண்பனை இழந் திருக்கத் தேவையில்லை.

கல்முனையில் படித்த நாட்களில், சினிமா விளம்ப ரப் பலகையில் என்ன படம் என்று பார்ப்பதற்காகக் கூட பள்ளிக்குப் போயிருக்கிறான். நல்லதோ, கெட் டதோ என்றில்லாமல் பார்த்த படங்களின் தொகை களைக் கூட்டிக் கொள்வதில், வகுப்பில் கதைப்பதில், அப்படி ஒரு விருப்பமிருந்தது அவனுக்கு.

பள்ளிக்குக் கொண்டு போகும் காசில் மிச்சம் பிடித்து எப்படியும் 55 சதத்தைச் சேர்த்துக் கொள்ளு வான். அப்படிப் படம் பார்த்த அனுபவம்தான் இன் றைக்கு சினிமா பற்றி அவனுக்கு இருக்கின்ற அறிவுக் குக் காரணம். விஷயம் புரியப் புரிய தமிழ் சினிமா



கனவும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுப்புத்தட்டி விருப்பமில்லாமல் போயிருக்கின்ற இன்றைய நிலைமையையும், அன்றைய நிலையையும் நினைத்து அதிசயப்பட்டுக் கொண்டான்.

கேற்றைக் கடந்து வந்து றோட்டை ஒரு தரம் பார்த்துக் கொண்டான். தூரத்தில் கிழக்கில் கடல் தெரிந்தது. சின்னப் பருவத்தில் கடற்கரைக்குப் போய் மீன் கொண்டு வருவதென்றால் அலாதி விருப்பம் அவனுக்கு. அவனைக் கண்ட சந்தோஷத்தில் தோணி வலை வைத்திருக்கின்ற அப்பச்சிமார் கொடுக்கும் ஆசுரியமான மீனைக் கோர்வைக் கொடியில் கோர்த்துக் கொண்டு தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு வருவான்.

றோட்டில் காண்பவர்கள் ஆச்சரியப்பட்டு மீனையும் அவனையும் சேர்த்துக் கதைப்பதில் அவனுக்கு இனம்புரியாத மகிழ்ச்சி. அதற்காக வேண்டி பல றோட்டுக்களைத் திரும்பத் திரும்பச் சுற்றி இருக்கிறான். வீட்டை போய் உம்மாவிடம் அப்பச்சிமாரை பாராமுகக்காரர்களாக்கிப் போட்டு, நான்தான் எடுத்தேன் என்று பெருமை பேசிக் கொள்வதையும், அதனைச் சாக்காக வைத்து ஓதப்பள்ளிக்கூடத்திற்கு உத்தியோக பூர்வமாக உம்மாவிடம் லீவு வாங்கிக் கொண்டு வீட்டில் விளையாடுவதையும், நினைத்த போது வெட்கமாக வந்தது அவனுக்கு.

இப்படியெல்லாம் சந்தோஷமாகக் கழிந்து போன வாழ்க்கையை நினைத்து பெரு மூச்சுத்தான் வந்தது. ஏ/எல் பாஸ்பண்ணி யூனிவசிற்றிக்குப் படிக்கப் போனதில் புரிந்து கொள்ளக் கிடைத்த வாழ்க்கை, இருபத்தி மூன்று வயதுக்குப் பிறகு நிர்ப்பந்திக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுப் போன சுமைகளை எண்ணி துயரப்பட்டுக் கொண்டான்.

விஷயங்களைத் தெரிந்தும் வேண்டு மென்று தவிர்க்க முடியாமல் இவைகளுக்குள் மாட்டிக் கொண்டதை எண்ணி நிர்ப்பந்தம்தான் வாழ்க்கையோ என சலிப்புக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Al-Haj. A.R.A. SATHAR
Justice of the Peace - Whole Island
Regd. No: 2000/ 03/ NE/ WI/ B/ 015
504A, Central Road,
Maruthamunai - 03

# இன்னும் வட்டத்துள்

விடுமுறை குறுகிக்கொண்டு வந்தது. இனிக்கொழும்பின் இயந்திர வாழ்க்கை அவனை மீண்டும் கௌவிக்கொள்ளும். கால் புதைய மணலில் நடக்கிற சொகுசு இல்லாமல் போகும். கிழமைக்கு இரண்டு தடவை வெயில் கொழுத்தும் வரை கடலில் கூட்டத்தோடு குளிக்கிறது முடிந்து போகும். சிகரெட் புகைத்துக் கொண்டு மனாரோடு, கலீலோடு நிலவுகளைக் கடற்கரை வெளியில் கழித்த இரவுகள் திரும்பத் திரும்பத் தோன்றி தாப்புக் காட்டும். அவனுகளோடு சேர்ந்து அவனைக் காணப்போனதெல்லாம் வந்து மனதைப் பாடுபடுத்தும்.

''என்ன தம்பி யோசின''

''ஒண்டுமில்ல...சும்மா''

Al-Haj. A.R.A. SATHAR
Justice of the Peace - Whole Island
Marutham - 02

பின்னல் பிளவுக்குள் அமிழ்ந்து போய் கதிரையில் கிடந்தவனை உம்மா கேட்க, சுதாகரித்துக் கொண்டான்.

''இண்டைக்கு என்ன கறி''

''கறியென்டா ஒண்டு மில்ல......இவள் புள்ளயயும் காணல்ல......பள்ளியடிய மீன் கெடக்காம்''

''இண்டைக்கு இறைச்சி வாங்கி பொரி.நல்லாரிக்கும்''

''பொரிச்சா நல்லாத்தான் இருக்கும்.அதுகளுக்கு யாரு உழைக்க......''

உம்மாவின் பதிலில் கொஞ்சம் கடுகடுப்பு. அவனை உறுத்தியது.இருபத்தி மூன்று வயது இளந்தாரி வீட்டுக்கு உபயோகம் இல்லாமல் இருப்பது என்னவோ செய்தது.

விடிந்ததும் விடியாததுமாக சறுக்காலை எடுத்து நூல் சுற்றுவதும்,வீட்டைத் துப்பரவு செய்தல் தேனீர் தயாரித்தல் போன்றவற்றிற்கிடையே கனக்க வேலை செய்யும் உம்மாவை நினைக்கிற போது அவனுக்கு பகீரென்றது. உம்மாவுக்கு வருத்தம் ஏதும் வந்து விட்டால் பொருட்கள் அப்படி அப்படியே கிடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாடு,நேரம்தவறிக் கிடைக்கும். இவைகளிடையே, மூத்த சாச்சியின் மகளை நினைத்துக் கொண்டு, தனக்கும் அப்படி ஒரு பெரிய பெண் இல்லையே என்று குமுறிச் சிந்தித்துக் கொண்டிருப்பா உம்மா.

''உண்ட கதையைக் கேட்டா எனக்குக் கோபம் தான் வருகுது. அப்ப......என்ன உழைக்கச் சொல்லுற யா?......உனக்கு உழைச்சித் தரவேண்டுமென்று எனக்கும் ஆசைதான்,'' அவனுக்கும் கதை கொஞ்சம் கன மாகவே வந்தது.

பரீட்சை பாஸ் பண்ணி அவனுக்கு, ஏழு வருடம் முடியப்போகிறது. பாஸ் பண்ணின அடுத்த மாதமே தம்பிக்கு உத்தியோகம் கிடைத்துவிட்டது. இது எப் போதுமே அவனைக் குறுகச் செய்து கொண்டிருக்கிற இழப்புத்தான். டிகிரி முடித்து வேலை கிடைத்தாலும் அவனைப் பொறுத்தவரை இது தடித்துப்போன விசயம்தான். இது கூட உம்மாவோடு கதைக்கிற,சண்டை போடுகிற போதுதான் அவனைப் பெரிதும் பாடுபடுத்துகிறது.

அவனுக்குப்புத்திதெரிந்த நாளிலிருந்து உம்மாவை இதே போலத்தான் காணக்கிடைக்கிறது.காதில் கழுத்தில் நகைகள் போட்டிருக்கிற சாச்சிமாரைப் போல அவவைக் கண்டதில்லை. ஈடுவைத்து அறுதியாகிப் போன காப்பை,மின்னியை சதா நினைத்துக் கொண்டு வாப்பாவை நொந்து கொள்கிற உம்மாவை நினைத்து அவனுக்கும் அழுகை வரும். கிடைக்கிற போதெல்லாம் தனது தங்கச்சிமாரோடு தன்னை ஒப்பு நோக்கி நொந்து போகும் அவவைக் கண்டு அவனுக்கு கோபமும் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னையப் போல கோபம் அவனுக்கு அதிகமாக வரு வதில்லை.கொஞ்சம் குறைந்து போயிருந்தது.

சோகமே அப்பிக் கிடக்கிற வாப்பாவின் முகம் அவ னுக்கு நினைவில் தெரிந்தது.சோகத்தின் பின்னணியில் ஆழமாகக்கிடக்கிற மேதமைத் தனம்,பொறுமை, அவ னை புல்லரிக்கச் செய்யும். வாப்பாவை வாய்க்கு வந்த மாதிரித் திட்டவேண்டும் என்று எண்ணுகிற மனம் அப் போவெல்லாம் எங்கேயோ ஓடி ஒழிந்து கொள்ளும் அவ னுக்கு.

வாப்பாவின் அறிவுக்கும்,படிப்புக்கும் உம்மா பொருத்தமே இல்லை.பெரிய நகறாறு வந்த போது மூத்தமாமா இப்படிச் சொல்லக் கேட்டிருக்கிறான். அப்படி இருந்தும் அவவோடு இருபத்தைந்து வருடத் தைக் கழித்து விட்ட அவரை நினைத்து பெருமையா க இருந்தது.உம்மாவைப் போலல்லாமல் படித்த அழ கான பெண்ணை நினைத்து வாடுகிற அவனுக்கு,வாப் பாவின் முன் முகம் தொங்கிப் போகவே செய்தது.

''உன்ன வாப்பா கலியாணம் முடிச்சதுதான் நம் மட கஸ்டத்துக்கெல்லாம் காரணம்''

அவனின் கதைகேட்டதும் உம்மாவுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

'ஏன்...எங்க உம்மா வாப்பா அவருக்கு என்னத் தக் கொறச்சிப் போட்டாங்க......அவர்தான் பொழக் கத் தெரியாமல் திரியிறார்......மத்த வாத்திமாரும் நல்லாத்தான் இருக்காணுகள்.என்ட காதில,கையில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடந்தத்தை யெல்லாம் அவர்தான் வித்துச் சுட்டுப் போட்டார்''

''விசர் கத கதைக்காத...அவர் காரணமில்லாம விக்கல்ல...எல்லாம் நன்மையை நெனச்சித்தான்''

அவன் கூறி முடிப்பதற்குள் அவவுக்கு கண்ணீர் வந்து விட்டது. கதைத்திருக்கவே கூடாது என்று, இப்ப தான் தோன்றியது அவனுக்கு. இன்றைக்கு சதா அழுது சிணுங்கிக் கொண்டு இருக்கப் போகிற அவவால் நேரந் தவறிக் கிடைக்கப் போகிற சாப்பாட்டை நினைத்து இப்பவே வயிறு பிறாண்டிக் கொண்டது.

இந்தக் கதை கேட்டு தன்னைப் பார்க்கப் போகிற வாப்பாவின் முகம் நினைத்து அவனுக்கு பயம் உண் டானது. ஜெயகாந்தனின்'அந்தரங்கம் புனிதமானது' கதை கூட நினைவுக்கு வந்தது. கடைசிப் பகுதியில் அப்பா மீது கோபம் கொள்ளுகிற மகனை எச்சரிக்கும் அம்மா...இங்கு மாறி நடந்து விட்டால்... அவர்க ளோடு வாழ முடியாமல் கிராமத்தில் பாட்டி, தாத் தாவோடு திரும்பவும் தங்கி விடப் போகிற வேணு- வேணுவைப் போல தானும் இப்பவே கொழும்புக்குப் பஸ் எடுக்கலாம் என்று தோன்றியது அவனுக்கு.

''உன்னக் கலியாணம் முடிச்சதாலதான் உண்ட குடும்பத்தோட பலன்ஸ் பண்ணி வாழ வேண்டிய கட்டாயம் அவருக்கு...பேசாம யாராவது ஏழய முடிச் சிருந்தா இந்தக் கஷ்டமெல்லாம் ஒரு வேளை குறை வாக இருந்திருக்கலாம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிச் சொல்லவில்லை. மனதுக்குள் நினைத்துக் கொள்ளத்தான் அவனால் முடிந்தது. உண்மையில் இது வாப்பா அடிக்கடி உணர்ந்து கொண்ட விஷயம் தான்.

அண்மையில் நண்பன் ஒருவனைக் காணக்கிடைத்தது. மிகுந்த சோகத்துடன் இருந்தான். காரில் போகிறவளை கப்பலில் கொண்டு போக உன்னால் முடியுமென்றால் அவளைக் கலியாணம் செய். இது என் அனுபவம் என்று சொல்லிவிட்டு அந் நண்பன் வானத்தை வெறித்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு புரிந்தது போலவும், புரியாதது போலவும் வாழ்க்கை தோற்றம் காட்டியது. அது மிகச் சிக்கலானதுதான். மனதில் குடிகொண்டிருக்கிற அவள், ஸ்கூலுக்கு நடந்துதான் போகிறாள் என்பதையிட்டு தெம்பு வந்தது. நடக்கிற அவளை பஸ்ஸில் கூட்டிக்கொண்டு போகலாம்.

பாழாய்ப் போகிற காய்ச்சல் வந்திருக்கா விட்டால் இந்த விடுமுறையிலும் நெசவு செய்திருக்கலாம். காய்ச்சலோடு சேர்ந்த சளி உபாதை, தொடர்ந்து இரண்டு மூன்று கிழமைக்கு தங்கி இருக்கிற இருமல் இவைகளை நினைக்க வாழ்க்கை கொடூரமாகவே பட்டது அவனுக்கு.

''காக்கா... ஐசிப்பழம் வருகுது... காசிதாங்க...''

இளைய தங்கச்சி அவனை ஒட்டிக் கொண்டு நின்றாள். அவளைப் பார்க்க அவனுக்கு இரக்கமாக இருந்தது.

''நான் காசிகூட்டம் பண்ணுறன் மின்னி வாங்க''

நேற்று அவள் சொல்ல- அவன் நெஞ்சத்தைத் தாக்கிப் போனதை நினைத்துப் பார்த்தான். மனது அப்படியே குறுகிப் போனது. இன்னும் துளையிடப் படாமல் இருக்கிற அவளது காதுகளைப் பார்த்துத் தலையைத் திருப்பிக் கொண்டான்.

மணிக்கூடு வேண்டும்... நல்ல நல்ல கலரில் உடுப்பு வேண்டும்...பூசிக்கொள்ள கொலோன் வேண்டும்...பை சிக்கில் வேண்டும்...என்றெல்லாம் நினைத்துக்கொள் கிற தனது சராசரி மனது அவனுக்கு என்னவோ செய் தது.

L11169

இன்றைக்கு முளிவிசகளம் நன்றாகப்படவில்லை. வாழ்வில் இன்னும் பத்தோ பதினைந்தோ வருடத்தில் இருக்கப்போகிற மனது ஏற்பட்டுவிட்டது. ஒல்லியாய் இருக்கின்ற உடம்பை மீண்டும் சிறுமைப்படுத்தி ஒட் டச் செய்துவிட்டது.

விடுமுறை கழிய இன்னும் இரண்டு நாட்கள் இருக் கின்றன. என்றாலும் முந்திப் போனால் பரவாயில்லை போல் இருக்கிறது. காசுக்காக இருபத்திமூன்று வயது ஆண்பிள்ளை மூத்தம்மாவிடம் கூனிக்குறுகி நிற்க வேண் டியதை நினைத்து மனது கஷ்டப்பட்டுக் கொண்டது. அந்தக் கணங்களில் தன்மானமெல்லாம் பறந்த சுய மு யற்சி இல்லாத ஆண்பிள்ளையாகவே அவனுக்குப் படும். மாமா நீட்டும் போது வாங்கிங்கொள்கிற கைகளை எண்ணிக்கோபமும் வரும். பின்னுக்கு இவைகளை இறுக் கப் போகிறதை எண்ணி மனது சங்கடப்பட்டுக்கொள் ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த பிள்ளைக்கே இப்படி இருக்கும் போது அட்வான்ஸ் லெவல் செய்து கொண்டிருக்கின்ற தம்பிகளை நினைத்து அவனுக்கு பரிதாபம் வந்தது. வாப்பாவின் வல்லமை இன்மையை நினைத்து ஆத்திரமாகவும் வந்தது. படிப்பைக் குறையில் விட்டெறிந்துவிட்டு சோகம் ததும்பிய மனத்தோடு இருக்க எனத் தோன்றியது.

''வாப்பா மீன் கொண்டாறா... கடற்கரையிலிருந்து'' பரபரத்துக்கொண்டுவரும் இளையவளின் குரல் அவனைக்கவனத்திலிருந்து விலக்கியது. கதிரையிலிருந்து எழும் அவனைப் பார்த்துக்கொண்டார்.

என்ன சம்பாதிக்கிறீர்கள்? எவ்வளவு பணம் கிடக்கு... இவையெல்லாம் வாப்பாவை கேட்க முடியாத கேள்விகள். கட்டுக்கட்டாக அலுமாரியிலும் செல்பிலும் குவிந்து கிடக்கிற புத்தகங்கள், தலைக்கு மேல் வளர்ந்து நிற்கின்ற நான்கு ஆண் பிள்ளைகள் சின்னனான பெட்டைகள் இரண்டு... இவைகள் தான் அவர் சம்பாத்தியம்.

கொஞ்ச நேரத்திற்கு முன் வல்லமை இல்லாத ஆள் என்று நினைத்துக்கொண்டதையிட்டு அவனுக்குச் சிரிப்பாக வந்தது. கொந்தளித்து ஓய்ந்த கடலாக மனது புன்னகைக்குள் அடங்கிக் கொண்டது.

நிமிர்ந்து வாப்பாவைப் பார்த்தான். உம்மென்றிருக்கிற உம்மாவையும், அவனையும் அவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டார். அவனுக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறையை ஊரில் கழிக்க இருக்கிறதை நினைத்து கொழும்பில் மனது ஏக்கம் கொள்ளும். மாதமுடிவில் பட்ஜெட்டில் துண்டுவிழ பட்டணிகள் தொடரும். தொடர்ந்து உடுத்திக் கொண்டதில் றவுசர் புளித்து மணக்கும். சவரம் செய்யாததால் வளர்கிற தாடி யூனிவசிற்றியின் தரத்தை மேலும் உயர்த்தும். ஒளிமயமான உலகை எண்ணி மனது பறக்கும். இடைக்கிடை முகம் காட்டுகிற அவளது கனவுகள் நடுநிசியில் முழிப்புக் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீளுகின்ற இருப்பு

மஞ்சள் குடைவிரித்ததாய் கொண்றைப் பூக்கள். பூங்காவின் ஊடே பாம்பென நெளிந்து நீளும் பாதை. இருமருங்கிலும் சீனியஸ் மலர்கள். அதை அடுத்த கரைகளெல்லாம் பச்சைப் பசுந்தரை. அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள். இளம் சிவப்பு வண்ணத்தில் அவள் சேலை கட்டியவளாய்... அவளது மெல்லிய கரங்களை அவன் பற்றியவனாய் ... திடீரென முழித்துக் கொண்டதும், எழுந்து இருந்து கொண்டான். போர்வை விலகி ஒதுங்கிக் கிடந்தது. ஈரக் காற்று சில்லெனத் தாக்கி உடல் வெடவெடத்தது. எங்கோ தனியனாய் விடப் பட்டிருக்கின்ற உணர்வு வியாபித்தது. எழுந்து வந்து சுவிட்சைப் போட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் நன்றாக தூங்கிக் கொண்டிருந்தார்கள். கணேசு நித்திரை மயக்கத்தில் முழித்து அவனைப் பார்த்து விட்டு திரும்பவும் படுத்துக் கொண்டான். மற்றவர்களில் ஒருவன் 'குறட்டை' விட்டுக் கொண்டிருந்தான்.

அறையை ஒரு தரம் சுற்றிப் பார்த்து விட்டு சுவிட்சை அணைத்து விட்டான். திரும்பவும் கட்டிலின் விளிம்பில் வந்து குந்திக் கொண்டான். ஊரிலென்றால் உம்மாவிடம் அல்லது மூத்தம்மாவிடம் பலனைக் கேட்டு அறிந்து கொள்ளலாம். கொழும்பில் யாரிடம் கேட்பது? இந்த மாதிரிக் கனவை உம்மாவிடம் தான் எப்படிக் கேட்பது. ஒரு வேளை மூத்தம்மா கூட இதைக் கேட்டு வித்தியாசமாக அவன் முகத்தைப் பார்த்துக் கொள்ளக் கூடும். வேண்டுமானால் தாயும், மகளுமாக அவன் கனவையிட்டு குசினிக்குள் சிரித்துப் பேசிக் கொள்ளலாம்.

சின்னனில் மிட்டாய் போத்தலுக்குள் கைநுளாவி எடுக்க எடுக்க முடிவே இல்லாது இருப்பது போல... கடலில் கூட்டத்தோடு கும்பலாய் குளிக்கிற விதமாய் காண்பது போல, கால்கள் நீண்டு கொள்ள உச்சாரத்துக்குப் போகின்ற மாதிரிக் காண்பது போல என்றால் பரவாயில்லை. இது பெண்ணோடு கண்டதாச்சே.

மீட்டிப் பார்க்கப் பார்க்க இவனுக்கு திகைப்பு வந்தது. உதறல் எடுத்தது. ஈரக்காற்று மீண்டும் உடலைத் தழுவ, சிகரட் புகைக்க வேண்டும் போலிருந்தது. இருட்டுக்குள் தட்டுத் தடுமாறி வந்து சிகரட்டை எடுத்துக் கொண்டான். நீண்ட நேரத் திறாவலின் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்புப் பெட்டியைக் கண்டு பிடித்து பற்றவைத்துக் கொண்டான். மிக விருப்பமாகத் 'தம்' இழுத்த போது இதமாக இருந்தது.

அறையை திறந்து கொண்டு அசுப்புத் தெரியாமல் குசினி வழியால் பெல்கனிக்கு வந்தான். கூதல் அதிகமாகி இருந்தது. தொலைவை வெறித்துப் பார்த்தான். தூரத்தில் அணிவகுத்து நிற்கின்ற பெயர் தெரியாத மரங்களில் அங்கொன்றும், இங்கொன்றுமாகப் பூக்கள் தாப்புக் காட்டுவது நிலாவில் மங்கலாகத் தெரிந்தது.

சாரி சாரியாக மோட்டார் வாகனங்கள் சரிகின்ற ஹெவ்லொக் றோட்டைப் பார்த்தான். நிசப்பதாக இருந்தது. இந்த விதமாய் நடுராத்திரி வேளை பார்க்கக் கிடைக்கவே இல்லை. தனிமையில் உறங்கிக் கிடந்தது.

கடைசித் தம்மை இழுத்து விட்டு பில்டரை பெல்கனியில் நின்றவாறு கீழேஎறிந்த போது கண்டான். அவனுக்கு நேரெதிரே தெரிகின்ற பஸ் தரிப்பில், மெல்லிய பால் வெளிச்சத்தில் 'இருள் மங்கை' ஒருத்தி யாரையோ காத்த வண்ணம் நின்றாள். தூரத்தில் மங்கலாக ஒளிப் பொட்டுகளைத் தூக்கிக் கொண்டு வந்த டாக்ஸி பஸ்தரிப்புக்கு அருகில் நின்றது. பின் அவளை ஏற்றிக் கொண்டு பறந்தது.

மீண்டும் தனிமையாய் விடப்பட்ட ஹெவ்லொக் றோட்டைப் போல் அவனும் ஆகிப் போனதை உணர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த சனிக் கிழமை ரக்கர் மெச் ஒன்று இங்கு நடந்தது. பொலிஸ் பகுதியால் ஏற்பாடு செய்திருந் தார்கள். சின்னனில் அவனும் கால் பந்து ஆடி இருக் கிறான். விளையாட்டுக் கழகம் வைத்து பரிபாலித்தி ருக்கிறான். தென்னைகள் அணிவகுத்த கேணிப் பள் ளத்தில் நாள் தவறாமல் விளையாட்டு நடக்கும். அது போலவே கேணிப் பள்ளத்தை அடுத்தாற் போல் இருக் கும் 'மாமி' வீட்டுக்கும் தண்ணீர் குடிக்க தினமும் போய் வருவான். பூப் பனை வாக்கில் மதார்த்த உடல்வாகு 'மாமி'க்கு. முந்தானையை சரியவிட்டுக் கொண்டு தண்ணீர் தருவாள். பாதி குடித்த வாக்கில் முகத்தை நிமிர்த்தி முந்தானை விலகலை தாபத்தோடு பார்க்க வரும். கண்டும் காணாததுமாக அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டு போதுமா, போதாதா எனக் கேட்ட கையோடு முந்தானையைச் சரி செய்து கொள்ளுவாள். இன்னமும் சின்ன வயதினனாகவே இருக்க முடியாமல் போனதுதான் அவனளவில் பெரிய இழப்போ?

ரக்கர் மெச் நடந்த வேளை அவனுக்கு பரீட்சை. அறையில் இருந்தவாறு படிப்பு அலுப்புத் தட்ட இடைக் கிடை ஜன்னலால் எட்டிப் பார்த்தான். வரிசை மரநி ழலில் ஒரே கூட்டம். பிளற்சில் அனேக பெண்கள் வந்தி ருந்தார்கள். பொலிஸ் படையைச் சேர்ந்த பெரிய தலைகள் சோடிகளாக வந்திருந்தார்கள். பெவிலியன் கட்டில் பெட்டைகள் குந்திக் கொண்டு கை தட்டினார் கள். விளையாடுகிற பொடியன் ஒருவன்அவர்களது கவனத்தை ஈர்த்திருக்கலாம்.

தினமும் 'பரற்' நடக்கிற இடத்தில் ஒவ்வோர் மாலையும் பெட்டைகள் கூடைப் பந்து ஆடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டையாய் பருத்து இருக்கின்ற பெட்டையை அவனுக்குப் பிடித்திருந்தது. மிகக் கெட்டித்தனமாக ஆடுவாள். மிகத் துடிப்பாய் ஆடுவாள். அந்த உடம்பை தூக்கிக் கொண்டு அவள் ஆடும் போது நோஞ்சலான தன் உடம்பை நினைத்து கவலைப் பட்டுக் கொள்ளுவான்.

நிச்சயமாக அவளுக்கு இருபதுக்கு மேல்தான் இருக்கும். அவளுக்குக் கூட ஒரு வேளை போய்பிரன்ட் இருக்கக் கூடும். மிக அழகாய், மிக எடுப்பாய் இருக்கின்ற மற்ற இரண்டு பெட்டைகளுக்குக் கூட அப்படி ஒரு துணை இருக்கலாம்.

இந்த முறை ஊரில் விடுமுறையைக் கழித்தது நினைக்கப் புது மாதிரியாகப்பட்டது அவனுக்கு. அந்த விதமாய் முந்தின காலத்தில் நடந்ததில்லை. மகா வித்தியாலய ஓலைக் கொட்டில்களில் நண்பர்களோடு நாட்களின் பெரும் பகுதிகள் கழிந்து போனது அவனுக்கு. பின்னேர வகுப்புக்களுக்கு வந்து போகிற பெட்டைகள் அவனைக் கள்ளத்தனமாய் பார்த்ததை வித்தியாசமாக எண்ண இப்போதுதான் அவனால் முடிகின்றது. புதிதாய் அறிமுகமான மெக்ஸியைப் போட்டுக் கொண்டு திரிந்த பெட்டைகள் மனதுக்குள் வந்தார்கள். அவர்களில் ஒல்லியான பொது நிறத்தவளை ஒட்டி ஒட்டி தூரத்து உறவுக்காரப் பையன் கதைத்துக் கொண்டு திரிந்தான்.

அப்பையன் பெட்டைகள் பற்றி மிகச் சுவாரஸ்யமாகக் கதைத்தான். சந்திக் கடையில் டீ வாங்கிக் கொடுத்த கையோடு என்னென்ன வெல்லாமோ பேசினான். பெட்டைகள் பற்றி என்றால் உலகம் முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை சதா கதைத்துக் கொண்டிருக்கலாம் என இருந்தான். தனக்குப் படிப்பில் ஈடுபாடு வரக் காரணமாக இருக்கிறவளைப் பற்றி வாய் நிறைய வாழ்த்தினான். கொடிக்கு கொழு கொம்பு போல தனக்கு என்றைக்கும் அவளாக இருந்தால் வீட்டார் நினைக்கிற பெரிய படிப்புக்களை எல்லாம் மிகச் சாதாரணமாகச் செய்து காட்ட முடியும் எனப் பையன் சொன்னான். என்னைப் போலவே நீங்களும் இருந்ததாலேயே உங்களால் யூனிவசிற்றிக்குப் போக முடிந்தது என்றான். நிச்சயமாக நானும் அங்கு வருவேன் என்றான். இவைகளைக் கேட்டதும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இன்னும் கொஞ்சம் பையனைக் கிண்ட வேண்டும் போல் தோன்றியது. படிப்புக்கும் எதிர்ப்பால் சிநேகிதத்துக்கும் முடிச்சுப் போட்டு கதைப்பதைக் கேட்க, இது வரை அறிந்து வைத்திருக்கின்ற அனுபவங்கள் உதிர்ந்த சருகுகளாகப்பட்டன அவனுக்கு. அந்தப் பையனும் அவனுமாக கடற்கரை ஒற்றைப் பனைத் தடத்தில் வெகு நேரமாக இருந்தார்கள். கடலின் ஓவென்ற இரைச்சலும் குளிர் காற்றும், பையனின் வசனிப்புக்களும் சேர்ந்து கிழுகிழுப்பான மனோ சஞ்சாரத்தை அவனுள் புகுத்தி விட்டிருந்தன.

அதைத்தொடர்ந்த அடுத்த நாளும் அவனுக்கு ஒற்றைப் பனைத் தடத்திலேயே இரவு ரொம்ப நேரம் இருந்தது. கூடப் பையன் இருக்கவில்லை. முஸ்தபா இருந்தான். கஞ்சாச் சுருட்டும் கையுமாக. கஞ்சா அடித்தால் கண்கள் மட்டும் தான் சிவக்குமாம். கன்னி அடித்தால் இதயமே சிவக்குமாம். மிக நீண்ட நாட்களாக தன் இதயம் சிவந்து போயிருப்பதாக முஸ்தபா சொன்னான். சுருட்டின் இதமான தம்முக்கும், கதைப்புக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் பிரியமானவளது நாமத்தை முஸ்தபா முணு முணுத்துக் கொண்டான். இதையெல்லாம் கேட்டு நெடு நாட்களாகவே தான் இருட்டில் இருப்பதாக எண்ணினான். இருபத்து மூன்று வயதாகியும் இப்படி யோர் அனுபவத்தைக் கண்டிராமைக்காக மிகவும் வெட்கப் பட்டான் அவன்.

ஒரு முறை வந்த வெகேசன் சூறாவளியின் அவலத்தோடு கழிந்து போயிருந்தது அவனுக்கு. விடிந்த ஒவ்வொரு பொழுதும் புத்தகக் கட்டுக்களும் புற வாசலுமாக அவனுக்கு இருந்தன. அவனுக்குப் பிடித்தமான மிகப் பெறுமதி வாய்ந்த புத்தகங்களெல் லாம் துண்டு துண்டுகளாக கிழிந்து போயிருந்தன. அவைகளை மிகப் பவுத்திரமாக எடுப்பதும், தாசுக ளை,ஒட்டறைகளை விரலால் சுரண்டி சுதாங்கம் செய் வதும், பக்கம் பக்கமாய்ப் புரட்டி மனம் நெகிழ்ந்த கட்டங்களை நினைவுபடுத்தி மதிய வெயிலில் பரவ சப் படுவதுமாக இருந்தான். ஜானகி ராமனின் 'அம்மா வந்தாள்' மிக மோசமாக சிதைந்துபோயிருந் தாள். மீண்டும் ஒரு முறை வாசிக்க முடியாதவாறு. இருப்பினும் அப்பு,இந்து கங்கையின் ஜலப் பிரவாகம் சகலதும் அவனோடு கூட இருந்தன.

அப்போதுதான் அந்த டயரிகளும் அவனுக்குக் கிடைத்தன. அவன் பிறந்த ஆண்டினது டயரி... அதற்கு முன்னைய ஆண்டினது டயரி,வாப்பா உத்தி யோகம் ஆன ஆண்டினது எனப் பலதும்.அவன் பிறந்த தினமும்,கணமும் மிக நேர்த்தியாய் வாப்பாவின் கைப்பட எழுதியதாய் இருந்தன. அந்த எழுத்துக்களை வாசிக்கும் போதெல்லாம் மிக மகிழ்ந்து போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பாவும் மிகமகிழ்ச்சியாகவே இருந்திருக்கிறார் என அவைகள் அவனுக்குக் கூறின. இது போலவே அதற்கு முந்திய ஆண்டினது டயரியும் அவனுடைய கவனத்துக்குரியதாகவே இருந்தது. விரும்பிய மட்டும் நேரம் காலம் தெரியாமல் எடுத்து முகர்ந்து பார்த்துக்கொள்கிற விசயங்களைக் கொண்டிருந்தது அது. வாப்பா சந்தோஷமாக இருந்த அனேக பொழுதுகளைக் குறிப்பெழுதி இருந்தார். உத்தியோகமாகித் தூர இடத்துக்குப் போனதும், அந்தக் கிராமத்தின் இயற்கை வனப்பும், அவருடைய இளமைக்காலமும் வெற்றுக் காகிதமாக...சுமதிதேவிதன்வடேயின் 'வகுளா' இந்தப் பெண்ணம் பெரிய மாளிகையின் மொட்டை மாடியில், தனிமை கொலுசேர்த்த பூரண நிலவொளியில் ஆற்றுப் படுதாவை நோக்கியவளாய்...சோகத்தை மனதில் தேக்கியவளாய்...நின்றிருந்தாள். வகுளாவின் இளமை அந்த மனோரம்மியமான சூழலில் அலைக்கழிந்தது போல...வாப்பாவும் இறால் கனத்த சல்லோடு யானோயா நதிக்கரையில் திருகோணமலையின் அழகுக்கோலத்தை தனியாகவே அனுபவித்திருக்க வேண்டும். கல்யாணமான புதிதில் அங்கும், இங்குமாக அவர் கழித்த நாட்கள் நிச்சயமாகக் காவியரசனைக்குரியவைதான்.

அவன் வாழுகின்ற நாட்களும் வெறும் உப்புச்சப்பில்லாதவைகளாக..., அந்தி மங்கலில் தோன்றும் ஹெவ்லொக் றோட், சோலைக் காடாய் நீண்டு கொண்டு செல்லும் தேர்ஸ்டன் பாதை, றீட் அவன்யு, கோள் மண்டபம், வாசிகசாலை சகலதும் அவைகளது இனிய பொழுதுகளை அவனின்றிக் கழிப்பதாக...

தனபாலும், தீபாவும் தங்களை மறந்தவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் படிக்கட்டுகளில் இருப்பார்கள். மூக்குக் கண்ணாடி ஜோடி கன்ரினில் எப்போதும் இருப்பார் கள். தற்போது சகலரும் அவன் முன்னால் வந்து நின்றார்கள். மிகவும் மகிமைப் படுத்தலுக்கு உரியவர் களாகத் தோன்றினார்கள். வாழ்க்கை அவர்களளவில் தனக்குப் புதிய சேதி சொல்வதாக அவன் உணர்வுற் றான். வாழ்க்கையில் அனேகம் சாரமற்றுக் கழிந்து போவதாக அவன்...

பெல்கனியை விட்டுக் குசினிக்குள் வந்தான். சிரிப் பதற்கென்று மட்டுமே பிறந்திருக்கிற அன்ரி தட்டுக் களை கழுவியவளாக சமையல் செய்து கொண்டிருப்ப வளாக, குளித்த கையோடு டவலில் நீண்ட கூந்தலைத் துவட்டிக் கொண்டு அவனோடு கதைக்கிறவளாக, வாடகைப் பணம் கொடுக்கும் போது அவனது விரல்களைத் தூக்கி முகர்ந்து கொள்பவளாக... வராந்தாவுக்குள் படுத்துக் கிடந்த அங்கிளைக் காணவில்லை. அன்ரியின் அறைக்கதவு திறந்து கிடந்தது. தனது அறைக்குள் வந்து கதவை ஓசைப்படாமல் சாத்திக் கொண்டான்.

குளிர் மிக வேகமாக அவனைத் தாக்கியது. போர் வையைக் கையில் எடுத்தான். இன்னும் பல வருடங் களுக்குத் தன்னை ஆறுதல் செய்யப் போகின்ற அத னை உதறிவிட்டு, போர்த்திக் கொண்டு சாய்ந்தவ னுக்கு......அதிகாலை வேளை கீரைக் காறியின் ''கீரா கீரா'' சத்தம் கேட்கும் வரை அன்ரியினது அறையி லிருந்து மெல்லிய சிரிப்பொலிகள் கேட்டுக் கொண் டே இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனக்குள்ளே ஒரு தரிசனம்

காத்துத் தடவ உடலைத் திறந்து கொண்டு ஹாயாகப் படுக்கிற சுகத்தைப்போல, மிகவும் ஒட்டுதலாய் விரும்பிப் படித்த நெஞ்சத்தைந் தொடுகிற கதையை திரும்பத் திரும்ப மனதில் போட்டுக் கொள்கிறதைப் போல, கனவு முழிப்பில் மீண்டும் மனத்தை அலைக் கழிக்கிற 'முகங்கள்' தருகின்ற சுகத்தைப் போல, அலாதி இன்பம்.

முதலில் சும்மா தொடுகிற மாதிரித்தான் கை போகும். பொரிஞ்சு போயிருக்கிற இடங்களை மென்மையாகத் தடவ மனம் வரும். அதுவே பழக்கமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொறிதலாக மாறும். இந்தப் பல கணங்களுக்கி டையில் உலகமே மறந்து போகும். உடலே இந்த மாதிரி இருக்காதா, கூடவே பத்துக் கைகள் கிடைத்து விடாதா என எண்ணத் தோன்றும். இது வெல்லாம் எண்ணிக் கொஞ்ச நேரத்துக்குத்தான். நீர் சுரந்து வந்து வேர்த்துப் போவதை உற்றுக் கவனிக்கலாம். பின் காத்து உரச, உலகமே எரிவது போல காலெல் லாம் அளத்தும்.

வேர்க்குரு கொப்பளித்தது போல, வலது காலில் தான் முதலில் பொரிந்தது. நாளாக இடது காலிலும் பொரிந்ததோடு, வலது கால் ஏகமும் பரவிக் கொண் டது. இரண்டு மாதமாக ஒரே தொந்தரவாகிப் போய் விட்டது. நெடுகிலும் நிற்கிற வேலை செய்தாப்போ தும். கால் ஓடி வீங்கிப் போகும். சுருங்கிப் போய் காய்கப் போன இடங்கள் புதுப் பொலிவு கொண்டு விடும். பித்த வெடிப்பும், புடைத்துக் கொண்டிருக்கிற நரம்பும் இல்லாது போய் விடும். சில சமயத்தில், கொழுத்து விட்டால் உடம்பு இந்த மாதிரி செழுமை பெற்று விடும் என எண்ணத் தோன்றும். முடிவில் அது போல பருமன் கொள்ள முடிந்தால் இருக்கப் போகி றதை நினைத்து மனது மகிழ்ந்து கொண்டிருக்கும்.

நெடுகிலும் சும்மா இருப்பது மாச்சல் தர, எழுந்து நடக்கலாம். கூடவே வடிகிற கெட்ட நீரை ஒத்தி எடுக்க சீலைத் துண்டையும் கையில் வைத்திருக்க வேண்டும். சாரனை உயர்த்திக் கொண்டு, வலது காலை வித்தியாசமாய் இழுத்து இழுத்து நடப்பது பெருமிதமாகவும் இருக்கும். காண்பவர்கள் விசாரிக் கையில் அது பற்றி கனக்கக் கதைக்கவும் முடியும்



கனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிக்கிற சுமையை இறக்கி வைக்கிறாப் போல.

கொழும்பில் இல்லாமல், ஊரில் இப்படி ஆகிப்போனது நல்லதாய்ப் போய் விட்டது. அதுவும் வெகேசன் என்றில்லாமல் பைனல் எக்ஸாமோடு ஆகிப் போனது பெரிய புண்ணியம்.

கொழும்பில் ஒரே தொந்தரவுதான். ஒவ்வொரு பரீட்சைக்கும் காய்ச்சல் வந்து விடும். காய்ச்சல் முடிய இருமல் தொத்திக் கொள்ளும். அதுவும் முடிய புத்தகத்தையோ, நோட்டையோ, படிக்க முடியாது. இட்டது கண் கண்ணீரைச் சொரியும், கூடவே மண்டையிடியோடு சளியும் உதிரும்.

அழுத்த பெல் மூடியில் கைவைத்தால் அதிர்ந்து ஓய்கிற சத்தத்தைப் போல மண்டை நரம்புகள் இன்பத்தை அனுபவிக்கும். இந்தக் காலத்தில் விக்ஸ் ஒன்றோ, இரண்டோ அறையில் கிடக்கும். சீறி ஓய்ந்து போக விரலில் அள்ளி, மூக்கில் துளாவிக் கொண்டு ஜன்னல் கம்பியில் ஹாயாகச் சாயலாம். சதா வருகிற காற்றை விரும்பி இழுக்கையில் நெஞ்சு முழுவதும் விக்ஸ் மணம் நிரம்பி வழியும். கூடவே, சிகரட் புகைக்கையில் புகையெல்லாம் விக்ஸ்ஸாக வருவது ஆனந்தமான விஷயம். விக்ஸ் முடியவும், பரீட்சை முடியவும் ஒன்றாக இருக்கும்.

கிரந்தி பற்றி முதலில் சொல்லக் கேட்டவ உம்மாதான். ஒருக்காலும் இல்லாமல் ஊரில் இருக்கும் போது ஏற்பட்டதை அவ வித்தியாசமாக நினைத்துக் கொண்டா. கொழும்பில் படிக்கத்துக்கே கோபப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிற அல்லசல்...தடகிட, சூனியம் அது இதெண்டு ஏதாச்சிலும்...இந்த மாதிரி நியாயப் படுத்திக் கொண்டா. இது கேட்டு சிரிக்க வரும். மறுகணம் கூடவே பயமும் கௌவிக் கொள்ளும்.

கால்களை ஒருக்கா பார்த்து விட்டு சிலந்தி பீச்சியதாகச் சொன்னதும் உம்மாதான். தலை மயிரைச் சுட்டு எண்ணெயில் குழப்பிப் பூசிவிட்டதும் அவதான். இரண்டு,மூன்று நாளாக புறங்காலில் ஒரே மயிர் சுட்ட மணம்.

காலை உயர்த்தி வைத்துக் கொண்டிருந்த ஒரு நாள்,சாச்சி வந்தாள். அவளுக்கும் இந்த மாதிரி வந்ததாம். மூத்த வாப்பாக்கிட்டே காட்டச் சொன்னாள். மூத்த வாப்பாவுக்கு எதையும் சீரியசாக எடுத்துக் கொள்வது முடியாத காரியம் போல. அசலாட்டியமாக பார்த்துக் கொண்டார். அதுதான் விஷக்கடி வைத்தியத்தின் மூல மந்திரமாம். சும்மா வீங்கி இருக்கி...சந்தனம் பூசு என்றதோடு சரி. தங்கச்சி கொண்டு வந்திருக்கிற கொவ்வை இலையும்,சந்தனக் கட்டையும் சுவரோரம் இருக்கும். வேளைக்கு அரைப்பு காலை மூடிக்கொள்ளும். இப்படி நாட்கள் தொடர்ந்ததும் சுகம் வந்த மாதிரி இல்லை. நீரோட்டமும் சொறிச்சலும் அதிகரித்தது.

இது போல அவதிப் பட்டவர்கள் ஏதேதோ வெல்லாமோ மருந்து சொன்னார்கள். நாட்டு வைத்தியத்தை நம்பி தாளும் தின்றாகி விட்டது. சிறுநீர் கழிக்கிற சமயம் தவறாமல் புறங்கால்களை நனைத்தும் பார்த்தாகி விட்டது,ஒன்றுக்கும் சரியான பாடில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைத்துவர மாமரம் நிழல் கொடுக்க,ஏகாந்த மாய் இருக்கிற அந்த டொக்டரின் மருந்தை விட அவர் பேசுகிறது சுகமாக இருக்கும். ஓரிரு சந்திப்புக் களிடையில் ஹோமியோபதி சாஸ்திரத்தையே கூறி விட்டார். அலுப்பில்லாமல் சுவாரஷ்யமாக அவைக ளைக் கேட்டுக் கொண்டிருக்கலாம்.

கீரி மீன், இறால், இறைச்சி, அது, இதெண்டு ஒருபட் டியலை நீட்டிக் கொண்டார் அவர். இதுகள் மனிதனின் எதிரிகளாம். இவைகளைச் சாப்பிட வேண்டாமாம்.

இவைகளை நம்பி மருந்து செய்ததோடு, பத்திய மாய் ஒரு மாதம் கழிந்தது. வீட்டில் இறைச்சி பொரிக் கிற சமயம் வாயில் ஊறுகின்ற நீரோடு மனது ஆறு தல் கொள்ளும். மார்க்கட்டுக்குப் போகிற சமயம் மிகவும் துயரப் பட்டுக் கொண்டு கீரி மீனை வாங்கி வர வேண்டி இருக்கும். பத்தியச் சாப்பாடு, அதுவே பழக்கமாகிப் போனது.

இதுவெல்லாம் போக இன்னொரு டாக்டரிடம் போகக் கிடைத்தது தற்செயல்தான். இவர் செய் கின்ற வைத்தியம் அலோபதியாம். ஹோமியோ பதிக்கு நேர் முறணானதாம். இது அந்த ஹோமியோ பதி டாக்டர் சொன்னது. இந்த வைத்திய சாஸ்திரங் களை நினைக்க நினைக்க சமயத்தில் சிரிப்பு வரும்.

இவர் Skin oinment ஒன்றை எழுதிக் கொடுத்தார். குறைந்த விலை வாங்கிப் பூசுவதை இலகுவாக்கியது. காக்கிற பத்தியத்தைச் சொன்னதும் பெரிதாக சிரித் துக் கொண்டார். என்ன ஐசே...இண்டைக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கிற சத்துச் சாப்பாடே இறைச்சியும், மீனும் தான். அது எல்லாம் விட்டுப் போட்டு எதைச் சாப்பிடு கிறாய்... கொஞ்சம் பத்தியம் காக்கத்தான் வேணும்... அதுக்காகச் சாப்பிடாம விடாதே...இது கேட்டுக் கொஞ்சம் அசந்து போக முடிந்தது. இரத்தத்தில் சீனி இருந்தாலும் இப்படி வருமென்று சொல்லி செக் பண்ண வைத்தவரும் இவர்தான். இரத்தத்தில் சீனி இல்லை என்பதை அறிய முடிந்த அளவில் திருப்தி.

இப்படி எல்லாம் செய்தும் கால் அப்படியே இருந் தது. வேதனை கூடக் கூட மனது சங்கடப் பட்டுக் கொண்டதுதான் மிச்சம். அலோபதியும், ஹோமியோ பதியும் ஏனக் கோபமாக நொந்து கொள்வதைத் தவிர்க்க முடிய வில்லை. மருந்துப் போத்தல்களும், குளிசைகளும் வாசலில் தூக்கி வீசப் பட்டதுடன் கவ லைப் படுவதையும் நிறுத்தியாயிற்று. கண்ணாடியில் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. சந்தோஷம் வந்தது. அத்தைக்கொரு தரம் சொறிந்து தடித்துக் கொள்ளு கிற தேமல், அறவே இல்லாமல் போயிருந்தது. ஊத்தை அப்பிய மாதிரி இருக்கிற கழுத்தைப் பார்க்க அழகாக இருந்தது.

காலில் கிரந்தி வந்த நெருக்கு வாரத்தில் அனேக விஷயங்களை அறிய முடிந்திருக்கிறது. தேமலுக்கும் அதுக்கும் தொடர்பு உண்டாம். எக்ஸிமா என்றாலே இப்படித்தானாம். புண் கோரமாக சொரிந்த போது நெஞ்சில் முட்டிக் கொள்கிற சனி உபாதை இல்லை. முற்றாக இல்லாமல் இருந்தது. முன்னெல்லாம் சளி யை அடிக்கடி காறித்துப்ப வேண்டி வரும்.

வைத்தியத்தை விட்டு நாளாக ஆக புண் காய்ந்து கொண்டு வந்தது. அதற்கிடையில் கழுத்தில் தேமலும் புள்ளியிட்டுக் கொண்டது. பழய படி, கூடவே மூச்சு விடுகிற போது முட்டிக் கொள்ளவும் செய்தது. கூட்டிக் காறுகையில் சளியும் திரண்டு கொண்டது.

உடம்பில் தேமல் இரண்டு இடத்தில்தான் வாழ முடியுமாம். ஒன்று தோலில், அடுத்தது நுரையீரலில்... ஒரு இடதில் இல்லாட்டி மறு இடத்தில் வருமாம்... அதை பலன்ஸ் பண்ணி வைத்திருப்பதுதான் புத்திசாலித்தனமாம்...

இந்தத் தேமலைப் பற்றி பெரிதா அலுத்துக் கொண்ட நாட்களும் உண்டு. அப்பவெல்லாம் தேமல் அழகுக்கு குறை செய்வதாகவே இருந்தது. குளிக்கிற போது தாறு மாறாகப் போட்டு உரச வேண்டி இருக்கும். குளித்து முடிக்கிற கையோடு தலைவாரிக் கொள்கையில் தேமல் பளிச்சென்று தெரியும். கறுப்பாக இல்லாமல் எப்பவுமே இப்படி வெள்ளையாய் இருக்காதா என மனது ஏங்கிக் கொள்ளும். நேரம் ஆக ஆக புழுதிபடிந்து கறுத்துப் போகும். மனதும் கூடவே துக்கப்படும்.

இது தொத்தும். தேமல் தொத்து வியாதி என்று கூட்டாளிகள் விலகி இருக்கிறார்கள். இது கண்டு மனதும் நொந்து தூர விலகிக் கொள்ளும். ஆனால் இது அப்படியாய் இருந்ததில்லை. வாப்பாவுக்கும் தேமல் இதே விதமாய் கழுத்தில் உண்டு. இருபத்தைந்து வருட தாம்பத்திய சீவியத்தில் ஆறு பிள்ளை தலைமுறைக்கு உம்மாவோடு அவர் கொள்ளாத நெருக்கமா, இவர்கள் என்னோடு கொண்டு விட்டார்கள் என

நினைக்க கூடவே ஆறுதல் வரும். உம்மாவுக்கு இந்த மாதிரி தேமல் இல்லை.

இது ஒரு புதினமான வியாதிதான். கொல்லாமலே கொன்று விடுகிற வியாதி. நடக்க முடியாமல் இருக்கையில் சர்வாங்கமெல்லாம் கோரமாகி அழுந்தி அவஸ்தைப் படுவதாக கனவு காண வைக்கிற, இரவோடு எழுந்திருக்க வைக்கிற வியாதி. பின்னர் விடிகிற வரை மூட்டிக் குமுறுகிற உள்ளத்தை உண்டுபண்ணுகிற வியாதி. இந்தச் சோகங்களை எல்லாம் எழுத்தில் ஆக்கவேண்டும் என ஆவலைத் தருகிற வியாதி.

முன்னர் எல்லாம் முட்டித் திமிறுகிற இருமலோடு காற வருகிற சளியோடு துயரும் வரும். சளியோடு சிவப்பாய் வருகிறதோ என துயரத்தோடு சோதனை செய்து கொண்டதெல்லாம் உண்டு. ஒரு முறை என்றில்லாமல் மேலும், மேலும் காறலை எடுக்க பிரயத்தனம் செய்து கொண்டதும் உண்டு.

அட்டமத்துச்சனி வர வேண்டுமாம். காதோட்டம் தலைப்புண் என்று வந்திருக்க வேண்டுமாம். அப்படியெல்லாம் சிறுப்பத்தில் ஆகியிருக்கவில்லையாம். அதுதான் இப்ப சேர்த்துவைத்து வாட்டுகிறதாம்.

சிறுப்பத்தில் என்றால் பரவாயில்லை. இப்ப வந்தது வேண்டாததாகவே படுகிறது. இருபத்து மூன்று வருட சீவியத்தில், இப்ப வந்தது ஏன்தான் என்று தெரிய வில்லை. கொழும்பில் நண்டுக் கறிகளும், கோழிக் கறிகளும் கொஞ்சம் ஓவராகத்தான் இருந்திருக்க வேண்டும். நண்டு வாங்கிக் கொண்டு உறிஞ்சி, உறிஞ்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராமல் போகிற காலை சப்பித் துப்புகிறது, நினை வுக்கு வர எச்சில் ஊறிக் கொண்டது.

இப்பவே நண்டு ஒரு பிடி பிடிக்க வேண்டும் போல இருக்கிறது. இந்தச் சனியன் வந்த மூட்டம் ஒரே பனிக் காலம். இப்ப பங்குனி தொடங்கி கானல் வீசு கிறது. வெயில் ஏற,ஏற இது சுகமாகிப் போகுமாம். ஆனாலோ,நெஞ்சில் முட்டிக் கொள்வதோடு,காய்ச்ச லோடு சளி உபாதையும் வரும். இது முடிய மாரி தொட ங்க இருமலும் சளியும் போக, புறங்கால் மீண்டும் துளிர்த்துக் கொள்ளலாம்.

நமக்கு எந்த முன்னுதாரணமும் வேண்டாம். அலோபதியும் வேண்டாம். ஹோமியோபதியும் வேண் டாம்.இதுக்கெல்லாம் காசுதேடி அலைகிறதும் வேண் டாம். தங்களுக்கு வந்து சுகமாகியதென்ற கை மருந் துகளும் வேண்டாம். மற்றவர்களது அனுபவமும் வேண்டாம்.

இது இப்படித்தான்.கோடையிலே நல்லா வெட்ட வேணும், இறைச்சி, முட்டை, நண்டு என்டு...மாரிக்கு ஒறுத்துக் கொண்டால் சரி.

ஓ...வருத்தம் சாதாரணம்தான். மனுசன் என் றால் வரும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொண்டிக் கனவுகள்

பொழுது விடிந்து கொண்டு வந்தது. எழுந்து அதனையே நெடு நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். கண் தொலைவில் நீண்ட கடற் பரப்பு. ஆசாட்டி, தென்னை உயரத்துக்கு மேலால் சிதறிக் கிடக்கும் ஒளிக் கீற்றுக்கள். சாம்பல் வெள்ளையாய், கடல் பக்கம் சாய்ந்து இலேசான ஆட்டம் போட்டுக் கொள்கிற தென்னைகள். இவைகள் அவனை வசீகரித்துக் கொள்ளவில்லை. ஏகாந்தமாய் இது போலவே அனுபவித்த பொழுதுகளை எண்ணிக் கூட அவனுக்கு மனம் சந்தோசிக்க வில்லை. இவைகளுக் கெல்லாம் அப்பால் விஜயனுக்கும் துயர் பட்டுப் போன சீவிப்புக்கும் இடையில் மனம் எங்கோ சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையில் படுத்துக் கொண்டிருந்த வாச்சர் எழும்பிப் போயிருந்தார். பரீட்சைக்காக படிக்க வந்திருந்த இரண்டு பெடியனுகளும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போதெல்லாம் அவனுகள் தூங்குகிறவேளை இதுதான். அவன் எழுந்து அரட்டி விடுகிறவரை தூங்கிக் கொண்டிருப்பார்கள். இப்படியாகத் தானும், படிப்புக்கும் தூக்கத்துக்கு மிடையில் அவசரமாய் இருந்த காலத்தை எண்ணிப் பார்த்தான். பரீட்சை பாஸ் பண்ணி தன்னைப் போலவே அவர்களும் நெருக்குவாரப்படப் போகிறதை நினைத்து மனம் புண்பட்டுக் கொண்டான்.

நிலம் தெளிந்து கொண்டு வந்தது. இருள்பிரிந்து கொண்டிருந்தது. இப்படி இல்லாமல் திடீரென மீண்டும் சூரியன் கடலுக்குள் ஒழிந்து கொண்டால்...? அப்படியே சதா... விடிவு காலம் வருகிறவரை இரவுக்குள்ளேயே இருக்கலாம். அவனுக்கும் இருள் நீங்கி முகம் சிரிக்கிற வரை.

இப்போதெல்லாம், மேசைகளை அணைத்துப் போட்டு உடல் திறந்து கிடக்க காற்றுத் தடவ இமைகளை மூடிக்கொள்கிற இரவுகள்... தூக்கமும் இல்லாமல், விழிப்பும் இல்லாமல் மனம் எங்கெங்கோ வெல்லாமோ ஆனந்தப் பட்டுத் திரிகிற படுக்கைகள் தருகிற சந்தோசத்தைப் பகல் பொழுது தருவது இல்லை.

பெருநாள் சட்டையைப் போட்டுக் கொண்டு 'பால்வளம்' குடிக்கிறத்துக்காக கொட்டுக் கொட்டென விழித்துக் கொண்டிருக்க நீண்டு கொண்டு சென்ற இரவுகள் ஒருகாலம். பள்ளிக் கூடத்தால் சுற்றுப்பிரயாணம்

போக, வாப்பாவோடு தூரப் பிரயாணம் போக, பஸ்சுகளின், கோச்சுகளின் நீண்ட இரைச்சலுக் கிடையில் பாயில் புரண்ட இரவுகள் ஒரு காலம். திரும்பவும் அந்த வயதுக்கே போய் விடலாமா? என்று கூடப் படுகிறது அவனுக்கு.

தூக்கத்தில் இருந்தவனுகளை எழுப்பி விட்டு வெளியே வந்தான். இனி சூரியன் ஊவாக் குன்றுகளில் சரியும் வரை காத்திருக்க வேண்டும். அர்த்தமில்லாமல் கழியப் போகின்ற பகல்பொழுதின் ஆரம்பம் அவனைச் சுட்டெரித்தது. கண்களை அழுத்தி கசக்கி விட்டுக் கொண்டான். முகம் கழுவுவோமா என சில கணம் யோசித்தான். தொட்டி நிறையத் தண்ணீர் இருந்தது. அதில் ஒரே அழுக்குப் படர்ந்திருந்தது. கிணற்றில் அள்ளிக் கழுவ வேண்டும். அதில் சிரத்தை அவனுக்கு இல்லாமல் போனது. தம்பிக்கு வேலை கிடைக்கல்லையா? என்கிற முகங்களை விட, எச்சில் முகத்தைப் பார்த்து பரிகசிக்க இருக்கிற முகங்கள் பரவாயில்லை போல் தோன்றியது அவனுக்கு.

பள்ளிக் கேற்றைக் கடந்து றோட்டுக்கு வந்தான். வழக்கமாக சந்திப்புக் கொள்கிற இரண்டு முகங்களும் கடல் நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. இவர்களைத் தினமும் இவ்வேளை காண்பது ஒரு வழமையாகவே போய் விடுமோ எனப்பயம் வந்தது அவனுக்கு. வீட்டோடு படுத்து, முகம் மலர்ந்து வேலைக் கென்று போகிற, இவர்களைச் சந்திக்காமலே விடியப் போகிற நாளுக்காக ரொம்பவும் காத்துக் கொண்டிருக்கிறான்.

றோட்டு விழித்துக் கொள்ளத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வீடு தெரிகிற வரை பார்த்துக் கொண்டான். கால் மைல் தொலை இருக்கும். அத்தூரம் போதாமல் தோன்றியது அவனுக்கு. இன்னும் பல மைல் தூர மான தொலைவாக இருந்திருக்கலாம்.

துருத்திக் கொண்டிருக்கிற முண்டுக் கற்கள் றோட்டை மாசுபடுத்துவதாக இப்போது அவனுக்கு இல்லை. இன்னும் பெரிதாய்... சட்டி போல, எருமைகள் போல கற்கள் துருத்திக் கொண்டால் நல்லது. நீண்ட தூரத் தோடு இவ்விதமாய் றோட்டு இருக்க வேண்டுமென் பதில் விருப்பம் மிகுதியாய் இருந்தது அவனுக்கு. கூடவே சப்பாத்துக் கள்ளிகளையும் இடையிடையே பற்றையாக வளர விட்டிருக்கலாம். கால், கை அடி படாமல்,குத்துப் படாமல் மிக நேர்த்தியாக கரிசனை யோடு மெல்ல மெல்ல நடந்து போகிற கவனத்தில் நாளின் பெரும்பகுதி கழிந்து போகலாம்தானே என்ற எண்ணத்தில் வந்தவன், முண்டுக் கல்லொன்று வலது காலை இடறி சுயநினைவுக்கு வந்தான். இரண்டு மாத மாக கிரந்திப் புண்ணால் அவஸ்தைப் படுவது நினை வுக்கு வந்தது. உள்ளங் கைப் பரப்பில் சீழ் ஓடிக் காய்ந்து போயிருந்தது புண்.

சாரனைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு மெல்ல மெல்ல அடியெடுத்து ஒரு பதமாக நடந்து போகலாம். இந்தச் சீக்கோடு வலது காலை ஒரு விதமாய்ப் பதித் துப் பதித்து நடப்பதாவது வீட்டுக்கும் தனக்கும் தொ லைவைக் கூட்டி விடுகிறது தானே என்ற எண்ணம் அவனுக்கு இல்லாமலில்லை. இரண்டு மாதமாக ஒரு சர்மரோகியாக இருக்கிறேனே என்பதில் ஒரு மகிழ்ச்சி தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை எழுதிவிட்டு ஊருக்கு வந்த சமயம் மனத்தில் கற்பனைகளைச் சுமந்து கொண்டு வந்தான் திட்டங்கள் கருக் கூட்டவந்த கடைசி ரயில் பயணத்தை நினைத்துக் கொண்டான். ஊரில் வந்திறங்கியதும் சகலதும் வித்தியாசமாகிப் போனது அவனுக்கு. கூடவே கிரந்திப் புண்ணும் தொற்றிக் கொண்டது. நண்பர்கள் பிரிந்து போயிருந்தார்கள். பொத்துவிலிலும், மட்டக்களப்பிலுமாக.

இன்றைக்குப் புதன்கிழமை. பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் கலகலக்கத் தொடங்கி இருக்கும். பட்டத்தை வாங்கிக் கொண்டுபோக இருக்கிற முகங்களில் சந்தோசம் பூத்துக் கொண்டிருக்கும். தனபால், மனோகரன், நிசாம் கறுத்த அங்கியை மாட்டிக் கொண்டவர்களாக...போகமுடியாமல் ஆகிப்போனது துயரமாக இல்லை அவனுக்கு. பரீட்சை எடுக்காமல் தன்கணவனோடு தூரதேசத்துக்குப் பறந்துபோன ஜமுனா இல்லை. அவளது ஒற்றை நாடிச் சரீரத்தில்... அந்தக் கண்களில் எவ்வளவோ கற்பனைகளைத் தேக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.....பரீட்சை எழுதாமல் பட்டமும் வாங்காமல்...வாழ்க்கை இத்தனை கொடுமையானதாக ஏன் அமைய வேண்டும்?

வானொலி பிறந்தநாள் வாழ்த்தித் கொண்டது. அது முடிவதற்கிடையில் வீட்டை அடைந்துவிடலாம். கண்டதும் தங்கச்சி தேனீர் கொண்டு தருவாள். இல்லாது போனால் வாப்பா ஞாபகமூட்டுவார். இப்போதெல்லாம் வாப்பாவின் கரிசனை அவனில் கூடிப்போனதாகவே உணர்கிறான். சீக்காளி மட்டுமல்லாமல் மனதிலும் ஏதோ தடித்துப் போயிருப்பது அவருக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொண்டிக்...

தெரிந்திருக்க வேண்டுமென அனுமானித்துக் கொண்டான்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னர் இருந்த பரபரப்பு இல்லாது போய் விட்டது. வாப்பா, தங்கச்சிமார் பள்ளிக்குப் போய் விட்டார்கள். மூத்த தம்பி வேலைக்குப் போய்விட்டான். உம்மாவைக் காணவில்லை. குசினிக்குள் எச்சில் கல்லைகள் நிராதரவாகக் கிடந்தன. பழங்கறி வேணாமென்று அடம் பிடித்த இளைய தங்கையின் சாப்பாட்டுக் கல்லை அப்படியே கிடந்தது. இதனைச் சாக்காகவைத்து மதியச் சாப்பாட்டு வேளை போனசாக மீன் துண்டுகளையோ அல்லது இறைச்சித் துண்டுகளையோ அவள் அதிகமாகப் பெற்றுக் கொள்ளுவாள்.

இனி, வீட்டுக்கும் றோட்டுக்குமாக நான்கைந்து தடவை நடை போடவரும். அவனுக்காகவே நேரம் மிகவும் மெதுவாய் ஊருவதாக இருக்கும். இதற்கிடையில் என்னென்ன வெல்லாமோ நினைத்து வெப்பிசாரப் பட்டுக் கொள்ள வரும்.

வீட்டில் கிடப்பதெல்லாம் அவனுக்குப் பழயபுத்தகங்களே. ஏற்கனவே படித்து முடித்தவைகள். கதிரையில் முடங்கிக் கொண்டு சில வேளை அவைகளைப் புரட்டிப் பார்க்க வரும். அதிலும் கவனம் போகாமல் கூடவே மனது சோம்பிக் கொள்ள வெளியே போக அவனுக்குத் தோன்றும்.

மல்லிகைப் பந்தல் சிரித்துக் கொண்டிருக்கும். வீட்டிற்குப் போய் மணிக் கணக்காகக் கதைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கலாம். பூக்களைப் பார்ப்பதும், பொறுக்குவதும், வீட்டுக்காரியின் முகத்தைப் பார்ப்பதுமாக கதைப்பு நடக்கும். இடை இடையே அவளின் சிரிப்பு மனதைச் சுண்டும். அவளின் முகத்தை அதிகமாகப் பார்ப்பதாக உணர, முகம் பூவை முகர்ந்த கையோடு பந்தலையும் வானத்தையும் அண்ணார்ந்து பார்த்துக் கொள்ளும். புடவை துவைத்த மாதிரி, சாம்பல் அள்ளித் துப்பரவு செய்த கையோடு, சில சமயத்தில் குளித்து முடித்து தலையைத் துவட்டுகிறவளாக அவள் கதையைத் தொடருவாள். அவனுக்கு மனம் விட்டுக் கதைக்க முடிகிற மனிதர்களில் அவளும் ஒருவளாக இருக்கிறாள்.

குசினிக்குள் சத்தம் பலமாகக் கேட்டது. வெளியே போன உம்மா இன்னும் வந்திருக்க வில்லை. பீங்கான் ஒன்று தாறு மாறாக உடைந்து கிடந்தது. எச்சித் தண்ணீர் குசினி பூராவும் சிலாவிக் கிடந்தது. இளய தங்கை தின்னாமல் போயிருந்த சோற்றுக் கல்லையை கோழிச்சாவல் கிளறிக் கொண்டிருந்தது. கறிச் சட்டி இருதுண்டாக பிளந்து போயிருந்தது. பானைக்குள் இருந்த பழஞ்சோறு குசினி ஏக சிதறிப் போயிருந்தது. இத்தனைக்கும் காரணமான கோழிச் சாவல் அவனைக் கண்டு வெருண்டது. சில கண நேரத்துள் அது பாய்ந்து குதித்து மேசையில் இருந்த தண்ணீர் கோப்பையையும் தட்டி விட்டு சுடுதண்ணீர் போத்தலையும் உடைத்து விட்டது.

கொஞ்சம் நிதானித்தான். கோழிச்சாவல் மேலும் அட்டகாசம் புரியாதிருக்க யோசனையுடன் நடந்து கொண்டான். சாதுரியமாக அதனை வெளியேற்றி விட்டு வாசலுக்கு வந்தான். உம்மா வந்து



கனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தாள். பக்கத்து வீட்டுக்காரியுடன் அவளது கோழியின் அட்டகாசத்தை சொல்லி நியாயம் கேட்டு.. கடைசியில் அவளோடு வாய்ச்சண்டை பிடிக்க இருக்கும் உம்மாவை நினைத்துக் கொண்டான். சற்று நேரத்துக்கு இங்கு நடக்கப் போகும் பூகம்பத்துக்குள் தானும் கலந்து கொள்ளாது முன்னமே வெளியேறி விட வேண்டுமென அவன் தன்னை ஏற்பாடாக்கிக் கொண்டிருந்தான்.

''என்ர செல்ல உம்மாவே... என்ன பாடுடா படுத்திக் கெடக்கு... இது யார்ர வேல...''

''பக்கத்து வீட்டுச் சாச்சிர கோழி படுத்தினபாடு''

சொல்லி விட்டு அவசர அவசரமாக சேட்டைப் போட்டுக் கொண்டான். உம்மாவின் முகத்தைநிமிர்ந்து பார்க்க வில்லை. பக்கத்து வீட்டுக் காரியுடன் சண்டைக்குப்போக ஆயத்தமாக இருக்கும் உம்மா முதலில் என்ன வார்த்தையை விட்டெறிவாளோ என அவன் மனம் பதைபதைத்துக் கொண்டது. பக்கத்து வீட்டுக் காரியின் மகன் ஓடாவியார் வீட்டில் முட்டை களவெடுத்ததும்... மூத்தவன் நெயினாவோடு 'பழக்கம் பழகினதும்' உம்மாவுக்கு இந்நிலயில் அயத்துப் போயிருக்காது.

''அவள்ள கோழி வந்து ஆச்சினப் படுத்தும்வர நீ எங்க போன... ஒன்ன நம்பித்தானே கடைக்குப் போன நான். போய் வாற வழியில ஒண்ட காலுக்கு அரைப்பு வைக்க கொவ்வெல பிச்சிக்கு வாறதுக்கிடையில இவ்வளவும் நடந்து போச்சி... சோறு கறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனத்துப்பத்தி கவல இல்ல. என்ன அருமந்தச் செப்பமான சுடுதண்ணிப் போத்தல்... ஒங்களுக்கு பொருள் பண்டத்துட மதிப்பு தெரியுமா... நான் கைகடுக்க சறுக்கால் ஆட்டி சீட்டுக்கட்டி வாங்கின போத்தல்... எல்லாம் நடக்கப் பார்த்துக்கிருந்து போட்டு நொண்டி மாமா வெளிக்கிட்டுட்டார்''

அவனுக்குச் சுருக்கென்றது. நொண்டிமாமா என அவள் சொன்ன பரிகாசம் அவனை திணறச் செய்து விட்டது. அவன் நினைத்தது வேறு...நடந்தது வேறு. பக்கத்து வீட்டுக்காரி தப்பித்துக் கொண்டு விட்டாள். அவனுக்கு ஏதும் கதைக்க வரவில்லை. மனதும் நொண்டிக் கொண்டது.

மல்லிகைப் பந்தலும், அதன் பூக்களும், வீட்டுக்காரியின் சிரிப்பும் அவனுக்கு இப்போது தேவைப்பட்டது. மதியம் வரும் வரை அவளோடு கதைத்துக் கொண்டிருக்கலாம். பேச்சில் 'நொண்டிமாமா' அனேகமாக வரும்.

''அடுதெல்லாம் வாறான்... உம்மா தானே. எங்க, கால் இங்கால தாங்க'' என்று கொப்பெலை அரைத்து அப்பிவிடும் மல்லிகைப் பந்தல் வீட்டுக்காரியின் அரவணைப்பு அவனை ஆதரவாக்கும்.

சாரனைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு மெல்ல மெல்ல அடியெடுத்து நடந்து கொண்டிருந்தான். ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவனுக்குத் தானே அபத்தமாய்

மற்றவளுகளை விட அவள் அழகாய் இருக்கப் போய்த்தான் விரும்புகிறாய் என அவன் இவனைப் பார்த்துச் சொல்லப் போய், கொஞ்சம் அசந்து போனான் இவன். அடுத்த நிமிடம் சுதாகரித்துக் கொண்டு அவனைப் பார்த்து மெல்லியதாய் சிரிக்க மட்டும் இவனுக்கு முடிந்தது. கூடவே கொஞ்ச நேரம், அவன் சொல்லுமாப் போல உண்மையிலேயே அவள் 'அழகு' தானே என எண்ணவும் செய்தது. அவனு டைய கருத்துக்கு ஒத்துப்போக மனது இடங்கொடுக்க வில்லை இவனுக்கு. அவன் சொல்லுவதைப் போலல் லாமல் காரணகாரியமில்லாத ஒன்றுதான் ஈடுபாடு கொள்ளச் செய்கிறதென்பதை சொல்ல வேண்டும் என நினைத்தும் முடியாமல் போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வருடம் ஓட்டுதல் கொண்டிருந்த கொழும்பு வாழ்க்கையில் அவன் கூறுவதைப் போல யார்யாரை யெல்லாமோ காணக் கிடைத்திருக்கிறது. ஒபென் கென்ரீனில் இருந்தால் போதும் சகலதையும் காண லாம். அழகிகளுக்கென்றே உருவானதைப் போல Science faculty ஐ எண்ணத் தோன்றும். விதம் வித மான சாயல் கொண்ட பெண்கள் சகலரையும் தரிசிக் கலாம். வேண்டுமானால் கூடவே இருந்து 'சள்ளும்' அடிக்கலாம். நேரம் ஆகிக் கொண்டுவர படத்துக்கு போவோமா... என்றும் கேட்கலாம். அதுக்கும் மேலாக இருந்தாப்போல காலை நீட்டி, கால்களில் உரசி விளையாடலாம்' கூடவே, நாணத்தோடு பக் கம் பக்கமாய் நெளிகையில் அமுங்கித் தழும்புபவைக ளைக் கண்டும் ரசிக்கலாம்.

அவளைக் கண்டு கதைக்கக் கிடைத்த முதல் அனுப வத்தை என்றைக்குமே மறக்க முடியாது இவனுக்கு. அவளுக்கும் இப்படித்தானாக்கும். குளித்த கையோடு ஒழுங்காகத் துவட்டாமல் எண்ணெய் வைத்து சீவிக் கொண்டதில் தலை முடி புளித்து மணக்கும். படிப்பித்த ஆசிரியர் ஒருவர் தன்பல்லில் பச்சையாய் சீமெந்து மாதிரி ஒட்டிக் கொள்கிறதை எண்ணி மனம் நொந்து கொள்வது அவள் பற்களைக் கண்டு ஞாபகத்தில் விரி யும். சீராக இல்லாமல் ஒற்றைக்காது சாடையாய் சப்பையாய் இருந்தது. இவை எல்லாம் கண்டு அப்படி ஒன்றும் ஆகிப் போய்விடவில்லை இவனுக்கு. ஒரு வேளை தெரியவந்தால் முன்கொண்ட கருத்தைமாற்றி, அவன் இவனைப் பார்த்து சிரிக்கக் கூடும்.

நாவை மரத்துக்கு அடுத்தாற்போல் வெட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் அவனும் இவனும் எத்தனையோ இரவுக ளைக் கழித்திருக்கிறார்கள். எதை எதையோவெல் லாமோ எண்ணிய மனத்தினர்களாய், கூடவே மௌனம் துணை இருக்கும். இடையிடையே ஆழ்ந்து ஓர்ந்து கடைசியில் வசனம் அவள் பற்றியதாகவே வெளிவரும். அவனோடு இணக்கமில்லாத கதைப்புக ளுக்கு நிலாக்கீற்றின் புகை வெளிச்சத்தில் தலையசைப் போடு...ம்... ம்...ம் என மட்டும் சொல்ல வரும் இவ னுக்கு. இப்படியாய் நிலாப்பட்டுப் போய் அண்ணார்ந்து பார்த்ததில் வெள்ளி சிதறிக் கிடந்த வானத்தைக் கண்டான். அப்போது அவன் சொல்லியதை நினைக்க நினைக்க... அவன் இன்னமும் தன்னைப் புரிந்து கொள்கிறானில்லையோ என இவனுக்கு எண்ணத் தோன்றும்.

அவன் இப்படி கதைத்திருக்கவே வேண்டாம். அவளுக்கு மூப்பாய் ஒருத்தி வீட்டில் இருக்கிறாளாம். அதுக்கு முடிந்த பிறகுதான் அவளுக்கு திருமணம் நடக்குமாம்.

அதுவரைக்கும் இவனுக்கு வயது ஏறிப்போகு மாம். இதுக்கெல்லாம் மேலாக குடும்பம் ஒத்து வரா தாம். காசுபணம் இல்லையாம். அண்ணன் தம்பிமார் படிக்காதவங்களாம். இந்தக் கதை கேட்டு பல நாட்க ளுக்கு பின்னர்தான் ஏதாவது அவனுக்குக் கதைக்க வேண்டுமென்று இவனுக்குத் தோன்றியது. அப்போதே கூடக்கூட ஏதாவது கதைத்திருக்க வேண்டும் என்றில் லாமல் இப்படிக் காலம் தாழ்த்தி கதைப்பதுதானோ தன் பலவீனம் எனத்தோன்றும் இவனுக்கு. இதுபோல எதிலுமே தான் வித்தியாசமாய்ப்போவதை எண்ணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயமும் வரும்.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பெரிதாக பயம் வந்தது இவனுக்கு. தன்னைச் சூழ உள்ளவற்றை அவன் மூல மாய் அறியக் கிடைத்ததையிட்டு இடைக்கிடை சந் தோஷமும் வந்தது.

என்ர பிரியங்கள... லயிப்புக்கள... இதுக்கெல்லாம் மேலாக என்னையே... ஒரு படித்த பெண்ணாலதான் விளங்கிக் கொள்ள முடியும். என்ற வசனம் அவளைக் காணமுன் என்றைக்குமே மனதில் இருந்ததில்லை இவனுக்கு. தோற்றத்தில் கூட அவள் பொருத்தம் தானே என்று கதைத்தது... காசுபணம் என்ன அவள் என்னோடு ஒன்றிப்போனால் மட்டும் போதும் எனக் கதைத்தது எல்லாம் இரண்டாம் பட்சமான கதைகள் தான். அவளின் கதைகளுக்குப் பயந்து இவனாக வலிந்து கொண்ட நியாயங்கள். இவைகளை எல்லாம் எண்ண எண்ண முன்னிலைக்குப் பணிந்து போவ தாகவே இவனுக்குத் தோன்றியது.

நீ... நினைக்குமாப்போல எல்லாம் முடிந்த பின் னுக்கு கொஞ்சமேனும் வாழ்க்கையில் உராய்வு ஏற் பட்டு விட்டால் உன்னால் என்ன பண்ண முடியும். என்ற கேள்வியும் அவள் கேட்டவைதான். இதற்கும் மறுகதை கூற நேரம் கொஞ்சம் எடுக்கத்தான் செய் தது இவனுக்கு. நீண்ட யோசனைக்கும் மீசையைப் பல தடவை நீவிக்கொண்டதற்கும் பின்னர் தான் கதைக்க வந்தது.

இந்த முன்னிலையைக் கண்டு பயந்து போக



களவுந்

மாட்டேன். சோகமே உருவாக உம்மென்றிருக்க மாட்டேன். துக்கமோ, சுகமோ அதையே வாழ்க்கையாய் ஏற்றுக்கொள்வேன். அந்தப் போராட்டத்திலேயே வாழ்வேன்.

இதுகதைத்தும் பலநாட்களுக்கு யோசனை இன்றி சும்மா இருக்க முடியவில்லை இவனுக்கு. இடைக்கிடை முகம் தெரியாத ஏதோ ஒன்றுக்கு இழுபட்டுச் செல்வதாகவே தோன்றும். சற்றைக்குப் பின் தன் இருப்பே அபத்தமாய் தோன்றும். யோசனையில் முழிப்புக் கண்டு சில்லித்தாறாக்களின் சத்தம்கேட்டு மனம் அதுபோல பறந்து கொள்ளும். குட்சுமமாய் மனதில் தோன்றி விட்ட ஒன்றுக்காக ஸ்தூலமான நியாயங்களைத் தேடித் தேடி கடைசியில் சலிப்புத் தோன்றும். சும்மா உலாவப்போய் இவனும் அவனும் கடற்கரை வெளியில் வெகு நேரமாக இருந்தார்கள். என்னென்ன வெல்லாமோ கதைத்தார்கள். அண்மையில்படித்த மிகப்பிடித்தமான கதையை ஒன்றிப்போய் வரிவரியாகக் கதைக்கமுடிந்தது இவனுக்கு.

இதையெல்லாம் கேட்டு இவன் போலவே ஒன்ற முடிந்தது அவனுக்கு. அதற்குப்பிறகு, இப்படியாய் தன் ரசனைக்கு ஒத்துப் போகக்கூடிய நண்பன் கிடைத்ததையிட்டு மிகச்சந்தோஷம் வந்தது இவனுக்கு. ஒரு சந்தர்ப்பத்தில், அவளைக் கண்டதாகவும், மிக எடுப்பாய் இருக்கிறாள் எனவும், உனக்குப் பொருத்தமான சோடிஎன்றும் அவன்கூற இவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவன் அப்படி கதைக்கப்போய் இவனுக்கும் ஏதாச்சிலும் கதைக்கவேண்டுமென்று ஆகிப்போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப் பொருத்தமாய் இருப்பாள் எனநினைத்துத் தான் பிரியம் கொண்டதாகவும் இவனுக்குச் சொல்ல மனது வந்தது. இப்போதைக்கு இல்லாமல் அவளுக் கும் எல்லாம் முடிந்து ஐந்தோ, ஆறோ வருடம் முடி யத்தான் அவளைக் கட்ட எண்ணமென்று கதைத்த தெல்லாம் நினைவுக்குவர சிரிப்பு வந்தது. ஒருவேளை, நாளைக்காகிலும் அவள் உன்னோடு வரச் சம்மதம் என்று கதைத்திருந்தால்... எனக்கும் அப்படி ஒரு அவ சரம்தான்... இப்பவெண்டாலும் சரி... என்று கதைத் திருப்பேன். எனநினைக்க இவனுக்கு இவனிலேயே பரிதாபம் ஏற்பட்டது.

இது போலவே ஒருபோது... படம் முடிந்ததை யோடு சைக்கிளில் அவள்பற்றிக் கதைக்கையில்... அவள் கிடைக்காமல் போகிற சந்தர்ப்பம் வருமேயானால் என்னால் அதைத் தாங்க ஏலாது. என்றதெல்லாம் நினைவுக்கு எட்டியது.

அதுக்குத்தான் நீ இப்பவே அவளோடு கதைத்து உன்னுடைய விருப்பத்தைத் தெரியப்படுத்து, என்று அவன் கூறி இருக்கிறான். அது கேட்டு அப்படி ஒரு அவ சரம் எனக்கில்லை என கூறமுடிந்தது. இப்படிக் கதைத் தாலும் எல்லோரும்போல நானும் நெருக்கமாய் பழ கித்தான் பிரியம் வளர வேண்டும்? என எண்ணவும் தோன்றும். பின்னர் அதுபோக தனது சோம்பல்தனத் தால் விஷயம் பிழையாகப்போகுமோ என எண்ணவும் தோன்றியது. இதுவெல்லாம் ஆகாமல்போய், யாரோ ஒருத்தனோடு அவள் கோர்த்துக்கொண்டுபோக நேரிட் டாலும் அவளை அப்படியே மனதுக்குள் பூட்டிக் கொள்ள விருப்புதலாய் இருந்தது. அந்த சங்கடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்ற நெடுமூச்சுக்களிலும் அவள் கலந்து சுகம்தர லாம் எனவும் தோன்றியது.

இவைகளை நினைக்க நினைக்க, இவனுக்கு அவஸ்தையாக வந்தது. புறச்சூழலுக்கு பெரிதும்பயப்பட்டுப் போவதாகவே தோன்றியது. சீச்சீ... என்னமனிதன் என அலுத்துக்கொள்ளவும் வந்தது.

முடிவாக இப்படிந்தான் எண்ண இவனால் முடிந்தது... எனக்கு அவளைப் பிடித்திருக்கிறது. அவ்வளவு தான். இது எதனால் என்று ஏதுக்களைத் தேட மனம் ஒப்பவில்லை. அவையெல்லாம் அல்லாத மேல்நிலையில் ஒன்று புரிந்தும் புரியாததுமாக இருப்பதாக மாத்திரம் இடைக்கிடை தோன்றுகிறது.

அவளைப்பிடித்திருக்கிறது என்பதைச்சொல்ல மட்டுமே பிரியமாக இருக்கிறது. இவனுக்கு இதைவிட உயர்ந்த வார்த்தைகளை என்றைக்குமே கூறமுடியாது போகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னிரவுகளும் ஒரு பின்னிரவும்

திடீரென விழித்த கண்ணுக்கு ஒருபாதிரியாய் இருந்தது. பிளேற்றில் பூத்துக் கிடக்கிற மல்லிகைப் பூ வாசம் நாசியை நிறைத்தது. படுக்கப் போகையில் முகர்ந்து பார்த்த வாசம் அதிகரித்தது. பனித்தூறலும், இருட்டும் வாசனையில் கொள்ளை அழகைச் சேர்த் திருந்தது மல்லிகைக்கு. கிட்ட இருக்கிற முருங்கையில் பக்கிள் கத்திக் கேட்டது. கண்ணுக்குத் தெரியும் எழுவான் கரையில் தேய்பிறை பேப்பர் கனத்தில் இருந்தது. இரவு பத்து மணிக்கு இல்லாமல் போன மின்சாரம் இன்னும் திரும்பி வந்திருக்க வில்லை. ஒண்ணுக்கு எழுகிற சமயம் முகத்துக்கு தெறிக்கிற சந்தி வெளிச்சம் இல்லாது கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுராத்திரிவேளை இந்தவிதமாய் எத்தனையோ தடவை எழுந்திருக்கிறான். என்றாலும் இந்தவிதமாய் ஊர் இருண்டு கிடக்கக் காணவில்லை. சிறுப்பத்தில் ஊருக்கு மின்சாரம் வராத காலத்தில் இருட்டுக்குப் பயந்து, உம்மாவை எழுப்ப மாச்சல்பட்டு பாயிலேயே ஒண்ணுக்குப் போவதும், விடிய உம்மா மொத்து மொத்தென மொத்தி, பாயோடு கிணற்றடிக்குக் கூட்டிப் போவதும்தான் அதிகமாக நடக்கும். இப்பவும் ஒண்ணுக்குப் போக வந்தது. கல்லுக் குமியலில் சில்லூறி இரைந்து கேட்டது. கிணற்றடியில் தேரை பாய்ந்து கொண்டது. முருங்கையில் பக்கிள் மீண்டும் கத்திக்கேட்டதுடன் மல்லிகை வாசம் நெஞ்சில் முட்டிமோதிக் கொண்டது. அப்படியே வந்து படுத்துக் கொண்டான். இமைகள் மீண்டும் செருகிக் கொள்ள மறுத்தன. திரும்பத்திரும்ப பக்கிள் கத்திக் கொண்டே இருந்தது. அது தான் படுக்க தொந்தரவு படுத்துகிறதோவென எண்ண கல்லெடுத்துத் துரத்தினான். நாலைந்து எறிக்குப் பிறகு மேற்குப் பக்கம் பறந்தது கேட்டது. மீண்டும் படுத்துக் கொண்டான். அப்போதும் தொலைவில் அமுங்கலாய்க் கேட்டு, பின் கேட்காமல் போனது.

தூரத்தில் சாமக் கோழிகள் கூவிக்கேட்டன. நேரம் நாலு இருக்கும். கொஞ்சம் போக சுபஹுக்கு பாங்கு கேட்கும். பக்கிள் பறந்து போயிருந்தும் தூக்கம் வந்த பாடில்லை. இந்தமாதிரி ஒருபோதும் இருந்ததில்லை. பலமாய் வந்த காற்றில் மல்லிகை வாசம் மீண்டும் நெஞ்சை நிறைத்து முட்டச் செய்ததோடு, பக்கிள்சத்தமும் அப்படியே மனதுக்குள் கிடந்தது. அவனுக்கு தூக்கமில்லாமல் ஆக்கியது பக்கிளா? இல்லை... அது போய் கனநேரம். குழப்பம் அவனுக்கு அதிகரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. பக்கிளுக்கும் மேலாக ஒன்று சூக்குமப்படுவதாகவே தோன்றியது அவனுக்கு.

கடலில் இரைச்சல் ஓவென அழுது ஓய்கிற பெண்ணின் குரலாய் அவனுக்கு கேட்டது. கடலுக்குப் பக்கத்தில் நோய்ப்பட்டிருக்கிற வாப்பம்மாவை நினைத்துக் கொண்டான். கடைசியாக பார்த்து வரும்போது படுத்த படுக்கையாய் "மலாயிக்கா" மாருக்கு சலாம் சொல்லிக் கொண்டிருந்த வாப்பம்மா மனதுக்குள்ளேயே இருந்தாள்.

அவனுக்கு வாழ்வே அறுந்துபோவதாக தோன்றியது. இப்படித்தான் மைமுன மூத்தும்மாவும் பக்கிளுகத்திக் கேட்டு ஏழெட்டு நாட்கள் கழித்து உலகைவிட்டே இல்லாது போனாள். அடுத்த நாள் மையத்து வீட்டிற்கு வந்திருந்த சனங்கள் பக்கிளு கத்தியதற்கும் மூத்தும்மாவின் மௌத்துக்கும் தொடுப்புப் போட்டதை நினைக்க மேலும் பயம் கூடிக்கொண்டது அவனுக்கு.

வாப்பம்மாவின் நோய்ச் செய்தி கேட்டு யாரெல்லாமோ வந்திருந்தார்கள். சம்மாந்துறைப் பெரியப்பாவும் சீக்கோடு வந்திருந்தார்கள். பெரியம்மாவும் வந்து போயிருந்தாள். வாப்பம்மாவைச் சுற்றிக் கொண்டு மாமியார் அழுது மூக்கைச் சீறிக்கொண்டார்கள். ஊருக்குப்பயந்து ஒரு ஒத்துப்போதலுக்காக வந்த உறவுக்காரர்கள் கண்ணீர் துடைத்துக் கொண்டார்கள்.

அவனுக்கு அப்படி ஆகவில்லை. கண்ணீரெல்லாம் அப்படியே ஒரு மனதை நிறைத்துக்கொண்டது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ராத்திரி வேளை உசுப்பிவிட்டிருந்தது அவனை.

இன்னும் பத்தோ, பதினைந்தோ நாளில் வாப்பம்மா இல்லாது போய்விடுவாள். சாதிசனம் கண் துடைத்துக் கொண்டு நாளாகையில் மறந்துவிடுவார்கள். கத்தம் நடக்கிற வேளை அவளுக்காகஅன்றி சோத்துக்காக கூடிக்கொள்வார்கள்.

சாவு தடுக்க ஏலாததுதான். என்றாலும் அதை வாப்பம்மாவோடு சேர்த்துப்பார்க்க அவனால் முடியவில்லை. எவ்வளவுதான் காலம்கடந்து போனாலும் அவளை அவனுக்கு மறக்கமுடியாது. திருமணம் முடித்து முதன்முதலாக மனைவியின் ஸ்பரிசம் கிடைத்தாலும் வாப்பம்மாவின் எண்ணமே அவனுக்குவரும். அவளை நினைக்க அவனுக்கு எவ்வளவோ விசயங்கள் இருந்தன. அதற்கு மேலாகவும் நிறைய இருந்தன.

சின்னனிலேயே வாப்பம்மாவின் உப்புவெளி வெம்பு மனைலுக்கும், அவனுக்கும் உறவு ஏற்பட்டிருந்தது. மதியநேரம் ஒளிப்பொட்டுக்கள் ஒன்றையொன்று கௌவி இறைந்துக் கொண்டிருக்கிற மாமரமும், தென்னையும் கோருத்த நிழலில் வாப்பம்மா அவனோடு விளையாடிக்கொள்வாள். மூத்தவாப்பாவின் நீண்ட சாறுக்குள் கைகளை அளைந்துகொண்டு முகத்தில் படுகிற கூச்சத்தில் திரும்பிக் கொள்வான். மரமுந்திரிகை சக்கைக் கொட்டை, பொறுக்க வளவைச்சுற்றி வேலியோரமாக வேம்புக்குக்கீழ் அவள்திரிகையில் கக்கத்தில் தொத்திக் கொள்வான்.

இரண்டு, மூன்று நாட்களுக்கொரு தடவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைச் சுமந்து கொண்டு வாப்பம்மா வீட்டுக்கு வருவாள். அன்று பூரா வெயில் சாயும்வரை உம்மா அவனோடு பிரியமாக நடந்து கொள்வாள். வெந்நீரில் குளிப்பாட்டி புதுசு போட்டு அழகு பார்ப்பாள். கண நேரத்துக்கு தன்னை மறந்து அவனை முகர்ந்து கொண்டிருப்பாள். அவனுக்குத் தம்பி ஒன்று கிடைத்திருந்த சந்தோஷத்தில் வாப்பம்மாவை மறந்து போயிருந்தான்.

உம்மா தம்பியை கையில் வைத்துக் கொண்டு கால்களை ஆட்டியபடி அவனைப்பார்த்துச் சிரிப்பாள். முந்தானைக்குள் தம்பி தலையை நீட்டிக் கொண்டு பால் குடிப்பதை உம்மாவின் முழங்காலில் சாய்ந்து கொண்டு பார்த்திருப்பான் அவன், அப்படியே நிறுத்தாமல் உம்மா கொடுத்துக் கொண்டிருக்க மாட்டாளா என நினைப்பதில் இருப்பான். இந்த மாதிரி அவன் எதையோ இழந்து போனதுபோல பேதலித்து நிற்பான். இது கண்டு வாப்பா அவனைத் தூக்கிக் கொள்வார்.

இதுக்கெல்லாம் பிறகு தம்பியை விட வாப்பம்மாவே விருப்பமாய் இருந்தாள். மடிக்குள் தூக்கி வைத்துக் கொண்டு கதை சொல்லக் கேட்டிருப்பான். விடிய விடிய சொல்லிக் கேட்டிருக்கலாம் போல் இருக்கும் அவனுக்கு. இப்பவும் அவனுக்கு ஞாபகத்தில் இருக்கிற ஓநாய்ச் சிறுவன் கதை அவள் சொன்னது தான். சிறுவனுக்குப் பால் கொடுத்த ஓநாயைக் காண வேண்டும் போல் இருந்தது.

சாப்பாடு முடிந்து படுக்கையில், கையுளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை வீசிக்கொண்டு அவனை அணைத்தவாறு அவள் படுப்பாள். தூங்கிப் போகும் வரை தலைக்குள் கையை விட்டு பேன் உருவிக் கொள்வாள். அவளின் நெருக்கம் குறைந்து பிடி தளர்வதாக உணர்கையில் அவன் விழித்துக் கொள்வான். மீண்டும் வாப்பம்மா இறுக அணைத்துக் கொள்வாள். தளர்ந்து போன மார்புக்குள் முகத்தைப் புதைத்து கைகளால் அணைத்துக் கொள்வது ஒவ்வோர் இரவும் அவனுக்குப் பிடித்துப் போயிருந்த விசயம். இதுகளை அவள் கவனத்தில் எடுக்காமல் அவன் தூங்கிப் போகும் வரை பொறுத்துக் கொண்டிருப்பாள். இப்போது படுகிற மாதிரி உடுத்தாடைவாடை வெறுத்து ஒதுக்கக்கூடிய ஒன்றாக அப்போது இருந்ததில்லை. தம்பி உம்மாவிடம் பால் குடிக்கிற காட்சி தாங்கிப்போய்விட்ட மனதினனாய் அப்படியே தூங்கிப் போய் விடுவான்.

சாமக்கோழி கூவிக்கேட்டது, சேர்ந்து மீண்டும் முருங்கையில் பக்கிள் கத்திக் கேட்டது. மல்லிகைப் பூ உதிர்ந்து விழுகையில் கூடவே மணம் மனதைத் துன்புறுத்தியது. எழுவானில் ஒளி சிதறுகிற வரை விழித்துக் கொண்டிருக்க முடிந்தது அவனுக்கு. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுமையும் நிறைவும்

அவன் மிகவும் களைத்துப் போயிருந்தான். பிரயாணம் செய்கையில் இருந்ததைப் பார்க்கிலும் இப்போது கூடிப் போயிருந்தது. வீட்டில் இருந்து வருகையில் காலையில் குடித்த தண்ணீர் கிளாசோடு இன்றைய பொழுது கழிந்து விட்டது. இனி உடுப்புகளை களைந்து போட்டு கடைக்குப் போய் இரவுச் சாப்பாடு முடித்து வர வேண்டும்.

வருகிற வழியில் புல்லுமலை, லுணுகலை, பசறை என்ற பல இடங்களில் ஏதாவது போட்டு வயிற்றை நிரப்பிக் கொள்ள வசதியிருந்தும் ஏனோ அவன் மனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியப்படவில்லை. வழமையில் பிரயாணம் செய்கை யில் அவன் மகிழ்ந்து களிக்கிற மலைநாடும், தேயிலைத் தோட்டமும், இயற்கை வனப்பும் இன்று அவனுடைய மகிழ்ச்சிக்கு உரியனவாக இருக்கவில்லை. அதையெல் லாம் விட்டு எங்கோ தொலை தூரமாகவே இருந்து கொண்டு வந்தான். எப்பவும் போலல்லாமல் இன்று வித்தியாசமாகி போன இருப்புதலை வேறு நிகழ் வோடு முடிச்சுப்போட்டு தொடுத்துக் கொண்டிக்கவே அவன் மனது பெரிதும் விரும்பி இருந்தது.

இப்போதேல்லாம் அவன் வாழ்வு நீழ்வதாக உணர்கிறான். அவன் நினைப்பதான எண்ணங்களெல் லாம் தூரத் தூர நீண்டு......தாப்புக் காட்டிப் போவ தாகவே கருதுகிறான். வாழ்க்கையில் என்றுமில்லாத வாறு அதிர்ச்சியும், உறவுகள் அந்நியப் படுவதாகவும் கவலைப் படுகிறான். போன கிழமை அவன் நினைத்தி ருந்தால் மூன்று நாள் லீவு போட்டுக் கொண்டு, இருப தாம் திகதி வீட்டுக்குப் போய் சம்பளத்தை உம்மாவி டம் கொடுத்து ஹாயாக ஒரு கிழமையை ஊரில் கழித் திருக்கலாம். அப்படி இல்லாமல் மற்ற அலுவலக நண் பர்கள் போகட்டும் என விட்டுக்கொடுத்து வெசாக் விடுமுறைக்குத்தான் வீடு போய்ச் சேர்ந்திருந்தான். அதற்கும் போகாமல் பதுளையில் இருந்திருந்தால் இப்போது அவன் படுகின்ற அவஸ்தை பட்டிருக்கத் தேவையில்லை. நாலைந்து நாட்களுக்கு வகுப்பை இழந் திருக்கத் தேவையில்லை. சும்மா பேசாமல் மணியோ டர் அனுப்பி விட்டு இருந்திருக்கலாம். வருகிறது லீவு நாள். வீட்டில் செலவுக்கு என்ன செய்வார்களோ என அவன் நினைத்தது இப்படிப் பிழைத்துப் போய் விடும் என துளிகூட எண்ணியிருக்க வில்லை. தன்னில்யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிசனைப் படுகிறார்கள் இல்லையே எனஎண்ணி அவன் பெரிதும் துக்கித்தான். இப்படியாய் தான்,நெடுகி லும் தூரத்திற்குப் போய் விடுவேனோ என கரைய லானான். எப்படி இருப்பினும் மூன்றாம் நபர்களில் கரிசனைப் படுவதை அவனால் நிறுத்த முடியாதது தான்.இன்றைய நிலையில்...இந்தக்கணங்களில்...அவன் தவிர்ந்த சகலரும் மூன்றாம் பிரஜைகள்தான்.

போன மாதங்களில்...நாளைக்கு வேலைக்குப் போக இன்று மதியம் வெளிக்கிட்டு இரவு நூமை அடைந்தால் போதும் என நினைத்ததால் பல சங்க டங்களை உத்தியோக ரீதியில் பட்டிருக்கிறான். அந்த அனுபவந்தான் ஒரு நாள் முந்தியே போய்விட வேண் டுமென எண்ணினான். அதற்காகத்தான் காலையி லேயே தன் பயணத்தைத் தொடர்ந்தான்.ஆனால் இன்றும் பழையனபோலவே கழிந்தது அவனுக்குத் துக்கிக்க ஏதுவாக இருந்தது.

காலையில் அவன் குளிக்கப் போகயிலேயே எழும் பியிருந்த தங்கைக்கு அவனுடைய அவசரத்தை உணர முடியாமல் போய்விட்டது. அவள் சின்னவள் என சமாதானப் படவில்லை அவன். உம்மா,அவவாவது அதைச் செய்திருக்கலாம். தாமதமாகவே எழுந்தி ருந்தா. இருந்தாலும் அவனுக்காக...இப்படி மாதத் தில் ஒரு நாள் மட்டும் வருகிற சந்தர்ப்பத்திலாவது அவ எழுந்து தேனீர் தந்திருக்கலாம். அவவுக்கு அலுப்பு என்பதையெல்லாம் விட்டு...அவனுக்காக அப் படி செய்ய வேண்டுமென அவன் பெரிதும் விரும்பி இருந்தான். தன்னைச் சூழ்ந்துள்ள புறம் பொருளுக் காக அன்றி வித்தியாசமான ஏதோ ஒன்றுக்காக உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள வேண்டும், என இப்போதும் விரும்புகிறான். காலையில் எழும்பிய கையோடு வெறும் தேனீர் தந்திருந்தால்...யோசனை ஒன்றும் இல்லாமல் இதமாகப் பயணத்தைக் கழித்திருக்கலாம். இவற்றை யெல்லாம் அவனுக்காக அவர்கள் உணர்ந்திருக்க வேண்டுமென பெரிதும் விரும்பினான்.

இடையில் வயிறு பிராண்டிக் கொண்ட போது தான் பயணம் தொடரும் தறுவாயில் பெட்டியும் கையுமாக நின்றபோது ஞாபகப்படுத்தி சத்தம் போட்டதால் கொண்டு தந்த பால் தேத்தண்ணியை நினைத்து வாயூறினான். அவன் பால் தேயிலையை குடித்திருக்கலாம். ஆனால் அந்தக்கணம் அதை ஏற்கக் கூடாது என்றே அவனுக்குப் பட்டது. அவன் எதிர் பார்த்தது பால் தேயிலையை அல்ல. வெறும் தேயிலையைத்தான். பால் அல்லாமல், வெறுமனாக இருந்திருந்தால் ஒரு வேளை அவன் குடித்திருப்பான். பயணத்துக்குத் தெம்பு என்றாவது குடித்திருக்கலாம். இதுக்கெல்லாம் மேலாக அந்த நிகழ்வு...வேண்டாம் என்று போட்டு...பயணம் கூடச் சொல்லாமல்...திறக்கப் படாமலிருந்த வாசல் கேற்றை தம்பியைக் கொண்டு திறக்கப் பண்ணி...கோபம் நிறைந்த நெஞ்சோடு அவன் வந்த விசயம் ஏதோ இனம் புரியாத ஒன்றுதான் என அவன் நினைத்துக் கொண்டான். எதிரிடையாக மனம் சிந்திப்பதை அறிந்தான்.

நினைவுக்கு எட்டியதிலிருந்து தாய் அவனுக்கு தூரத்தில் இருப்பதாகவே படுகிறது. அவவுக்கும் தனக்கும் இரத்த உறவில் இருக்கிற அளவுக்குப் பரிமாணம் மற்ற சகோதரங்களுடையதைப் பார்க்கிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாக இருப்பதை இப்போதும் உணர்ந்து கொண்டான். இந்த இடத்தில் சிக்மன் பிராய்டுக்கும் ஒருபடி மேலாக சிந்தனையை பறக்க விட்டான். இது பற்றி நினைக்கும் போதெல்லாம் வாப்பம்மா மனதுக்குள் வருவாள். கடற்கரை வெளியும், மரமுந்திரிகைத் தோட்டமும் மாவும் தென்னையும் சேர்த்துக் கொண்ட மதிய நிழலும், அதனிடையே சிதறும் ஒளிப்பொட்டுகளும், ஒவ்வோர் இரவும் அவன் விரும்பி அணைத்துக் கொள்ளும் அவள் மார்பும் கூடவே வரும். அவன் வாப்பம்மாவை என்றைக்குமே மறக்க மாட்டான். அவளை நினைத்து வாட எவ்வளவோ விஷயங்கள் உண்டு.

காலையில் நடந்த அந்தச் சம்பவம் தான் காரணமோ தெரியாது அவன் நினைத்த மாதிரி எதுவுமே இன்று நடக்கவில்லை. இதற்கு முன்னரும் நடந்ததில்லை. நினைத்த மாதிரி ஏதாவது நடக்காதா என விரும்பினான். இனிமேலும் அப்படி நடக்குமா என்பதிலும் அவனுக்கு சந்தேகமாகவே இருந்தது.

அந்த சந்தேகத்தோடு வாழ்வும் தொடர்கிற இழப்பாகவே படுகிறதாக உணர்வுற்றான். காலையில் நுவரேலியா பஸ் எடுத்து பதுளைக்கு மதியத்துக்கு இடையில் போய் ஆற்றில் குளித்து விட்டு சாப்பாடு முடிந்த கையோடு வருகிற இதமான தூக்கத்தில் ஆழ்ந்து...எழுந்த கையோடு அன்றைய தினசரிப் பத்திரிகையுள் மனசை நுழைய விட்டு சந்தோஷமாகப் பொழுதைப் போக்கலாம் என்பது அவன் திட்டம். அது அப்படியே தவிடு பொடியாகிப் போயிருந்தது. அவன் பார்க்கிற உத்தியோகம் இந்த விதமாய் வாரத்தில் ஒரு நாளையாவது கழிக்க வேண்டும் என்பதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்தை ஏற்படுத்தி இருந்தது. ஆனால் இன்று நடந்த கதையோ வேறு. நினைத்த மாதிரி நுவரெலியா பஸ் இருக்கவில்லை. அதற்காக ஒரு மணி நேரம் காத்திருந்து, ஏமாந்து மட்டக்களப்புக்குப் போய்...மதியம் போகின்ற பதுளை பஸ் எடுத்து...றாமை அடைய இருட்டி விட்டது. முதற்கோணல் முற்றிலும் கோணல் என்றாப் போல் எல்லாம் ஏமாற்றத்தில் கழிந்தது.

ரொம்பவும் அவஸ்தைப் பட்டான். நெஞ்சு முட்டிக்கொண்டு வந்தது. இப்பவெல்லாம் எப்போதாவது இருந்து போட்டு, இந்த மாதிரி ஆகிப் போகின்றது. அதிக சந்தோஷமும் இதைக் கொடுக்கிறது. ஆழமான துக்கமும் இதைக் கொடுக்கிறது. டொக்டர் சொன்னது போல் இருதயத்தைச் சுற்றி சளி மட்டுமா படர்கிறது? அவனைச் சுற்றி.....சோகமான......துயரமான இருள் படர்வதாகவும் அவன் உணரலானான். நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. இதைவைத்துக் கதை ஒன்று எழுத வேண்டும் என நினைத்துக் கொண்டான். துயரங்களை, சுகங்களை கூறி ஆறுதலடைய இப்போதெல்லாம் எழுதுவது அவனுக்குப் பெரிதும் உதவுகிறது. மனதில் பட்டதை அப்படியே கொட்டித் தீர்த்துவிட காகிதமும் பேனாவும் மிகவும் பிடித்த பொருளாகி விட்டதை அவன் நினைத்து பெருமிதப் பட்டுக் கொண்டான்.

அவன் எழுதத் தொடங்கிய காலமும் மிகக்குறைவுதான். என்றாலும் ஒவ்வொன்றும் அவனுக்கு பெரும் ஆறுதல் தருகிறது. இப்பவெல்லாம் அவன் கதைகளைப்பற்றி ரசனை கூடிய மட்டத்தில் மிக அவதானமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்களாம். இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்து சந்தோஷமும்தான். இப்படி நான் எழுத்தாளனாக இல்லாமல் சாதாரண மனிதனாக இருந்திருந்தால்...இப்படி பேசுவார்களா? என்னும் போது கவலை அவனைத் தொடர்வதாகவே உணர்கிறான்.

யாருமற்ற தனிமையில் இருக்க வேண்டும் போல, மிகவும் பிடித்தமான புத்தகத்தை வரிவரியாக ரசிக்க வேண்டும் போல, அவன் நினைத்துக் கொண்டான்.

றூமில் வெளிச்சம் வந்திருந்தது. ஜன்னல் கதவுகளும் திறந்தே இருந்தன. இதை அவன்தான் செய்து இருக்க வேண்டும். ஆனால் ஞாபகம் இல்லை.

நடந்து முடிந்த நிகழ்வுகளை பலமாக எண்ணினான். புகழ் பெற்ற அந்த நோபல் பரிசு எழுத்தாளன் மனதுக்குள் வந்தான்.

ஹெமிங்வே...உன்னை என்றைக்குமே மறக்க இயலாது. உனது புகழ் பூத்த அந்தப் புத்தகத்தையும் தான். நீயும் வாழ்க்கையில் துயர் கொண்டிருக்கிறாய். அப்படி நினைக்கத்தான் மனது ஆறுதல் அடைகிறது. உனது கைத் துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருக்கும் போது, பிசகாக ஏற்பட்ட சூட்டினால் நீ மாண்டு போனதாகத்தான் நான் அறிந்து உள்ளேன்.

அதை என் மனது ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி அந்தச் சம்பவம் நடந்து இருக்க முடியாது. நீயே சுட்டுக்கொண்டதாக நினைக்கத்தான் எனக்கு பிரியமாக இருக்கிறது. நீ அப்படித்தான் செய்திருப்பாய். உனது 'கடலும் கிழவனும்' அதைத்தான் எனக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறது. ஏமாற்றம் உன்னை தொடர்ந்ததாக இருந்திருக்க வேண்டும்.

'இல்லை...நீ...தன்னைத்தானே சுட்டுக் கொண்டாய்' இப்படி அவன் பலமாகக் கத்தியிருக்க வேண்டும். கூச்சல் போட்டு கத்தியிருக்க வேண்டும். பக்கத்து வீட்டிலிருந்த எல்லாரும் திறந்திருந்த ஜன்னல் ஊடாக அவனைப் பார்த்தார்கள்.

அவன் அழுதான். மார்பில் கையை வைத்துக் கொண்டு அழுதான். இப்பவே அப்படியே தீர்த்துவிட வேண்டும் போல அழுதான். ஒவ்வொரு துளிக்கண்ணீரையும் இதயம் தாங்கிக் கொண்டது.

அவர்களுக்கிடையில் நின்று கொண்டு அவள் அவனைப் பார்த்தாள். அவன் நெஞ்சைத் தடவிக் கொடுக்க ஓடியே வந்துவிட்டாள். மற்றவர்கள் அவன் நிலைக்காகப் பரிதாபப் பட்டார்கள். ஆனால் அவளது செயலால் ஆச்சரியத்தில் கண்ணை விரித்தாள் அவள் உம்மா. அவன் மீண்டும் அழுதான். அவள் அவனைப் பார்த்து அழுதாள். அவனோடு கூடவே மஹாகவியின் 'இதயகீதம்' நெஞ்சில் விரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடையில் வெளிகள்

வழமையில் நடை வேகம்தான். நேற்றும் வேகமாகத்தான் நடந்து திரிந்திருக்க வேண்டும். இன்று அப்படி நடக்க முடியவில்லை. ரீட் அவனியூவுக்கும் திம்பிரிகஸ்யாய சந்திக்கும் இடைப்பட்ட தூரம் மிக நீண்டு போகவேண்டும் என நினைத்தான். கடந்த இரண்டு வருடங்களில் நெருக்கம் கொண்டவைகள், வாழ்வின் தேடல்களைப் புரிந்துகொள்ள உதவியவைகள், அனைத்தையும் மீட்டுக்கொள்ள வேண்டும் போல் பட்டது. நடையும் ஒப்புக்கொள்வதாய் தளர்ந்து போனது.

பஸ்ஸில் ஏறி இருந்தால் றாமுக்குப் பக்கத்தில் இறங்கி இருக்கலாம். இறங்கிய கையோடு டவுசர் பக்கெட்டைக் குடைந்து தட்டுப்படுகின்ற சில்லறைக்கேற்றவாறு சிகரெட்டுகளை வாங்கிக்கொண்டு போயிருக்கலாம். அவற்றுள் ஒன்றையாவது அறையில் இந்நேரம் ஊதிவிட்டிருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலதுமே வாழ்வில் பிந்திக்கொண்டு போவதான ஒருவித மயக்கம். சங்கடங்கள் பின் தொடர்வதாகவே படுகிறது. மனோகரங்கள் தொடர்ந்தும் தொலைந்து போகின்றன.

ஏ. எல். பரீட்சை முடிவு வந்தவுடன் அதனோடு ஒட்டிய மனோகரமான எண்ணங்களை அடுக்கிக் கொண்டு திரிந்தது சிறிதுகாலம்தான் நீடித்தது. இப் போது நினைக்கையில் தள்ளி நின்று எள்ளி நகையாட வேண்டும்போல் படுகின்றது. பல்கலைக் கழகத்துக்கு எடுபட்டிருக்கவே கூடாது. அந்த வெப்பிசாரத்தில், வித்தியாசமான மனோ நிலையில் பூரண நிலவுகளை வெள்ளை மணற் கடற்கரை வெளியில் களித்துக் கொண்டிருக்கலாம். அத்தியாலங்களில் வரும் மெல்லி யதான, துயரங்கலந்த நெடுமூச்சுக்கள் வாழ்க்கையை ஒருவேளை உய்வித்திருக்கலாம்.

யூனிவசிற்றி, பெயரில் இருக்கின்ற கனதி அனுப வத்தில் வெறுமையாகவே படுகின்றது. பாடப் புத்தகங் களாலும், குறிப்புகளாலும் வாழ்வின் நுட்பங்களை அளவீடு செய்யும் முயற்சி சிரிப்பாகவே தோன்றுகிறது.

கொழும்புக்கு வர முந்தி மனதிலே ஒரே கற்பனை. கொழும்பு வாழ்க்கையின் கவர்ச்சியில் இனம் புரியாத மகிழ்ச்சி. பல்கலைக்கழக சீவியத்தை, முஸ்பாத்திகளை, பிறர் சொல்லக் கேட்டு ஒரே ஆனந்தம். எல்லாம் அனுபவத்தில் பொய்யாகிப் போனதும் பச்சாதாபமே மீதமானது. இந்தவிதமான மயக்கத்தில் மிதந்து கொண்டிருக்கும் முகங்களை எண்ணிப் பரிதாபமாக வந்தது அவர்களுக்காக இரண்டு சொட்டுக் கண்ணீரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக் கொள்ள வேண்டும் போல் மனோநிலை உருவானது.

உண்மையில் அனுபவம் மகத்தானதுதான். சொந்த அனுபவத்தில் உழலவேண்டி ஆகிப்போனது பெரும்பேறாகவும் தோன்றுகிறது.

படிப்பின் சுமை என்னமாய் அழுத்துகிறது? படிப்பா, காகிதக் கட்டுகளின் கனதியா தன்னை இப்போது அழுத்துவது என்பதை நிதானிக்க முடியாமலே இருக்கிறது. கனக்கின்ற இரண்டு தவணைச் 'சரக்' கோடு மனமும் இழந்து போன வாழ்வின் நாட்களைத் தேடி ஓடிக்கொண்டது.

கொழும்பில் முதலில் பரிச்சயமானது இந்தக் கட்டிடம்தான் ஹெவ்லொக்றோட் ஆரம்பமாகும் இடத்தில் இருந்து சற்றுத்தள்ளி அக்கியூனாஸ் விடுதி. வார்டனைச் சந்தித்து அறைத் திறப்பை வாங்க வந்த போது பட்ட ஆக்கினை மறக்க முடியாதது. சிரேட்ட மாணவர்கள் 'வரவேற்புடன்' காத்திருந்தார்கள். அவர்கள் கூப்பிட்ட இடத்துக்கெல்லாம் போகவேண்டி இருந்தது. ஹொஸ்டலுக்கு எதிரே இருக்கும் தபாற் பெட்டிக்கு நூறு தடவை முத்தம் கொடுக்கவேண்டி இருந்தது. பொலிஸ் பிளேட்டில் குடி இருக்கும் அதி சிரேட்ட மாணவன் ஒருவனின் அழுக்கு உடுப்புகளை துவைத்துப் போட்டதற்கு சன்மானமாக புரியாணிப் பார்சல் எடுத்துத் தந்தான்.

பிரியமானவளைப் பிரிந்து போகும் சோகம்போல, விடுதியின் மாடி அறையொன்றில் எப்போதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துவிட்டு நள்ளிரவில் மனதை வருடும் சிறிசேனா வின் புல்லாங்குழலைப் போல, நள்ளிரவுக் காட்சி ஆங்கில சினிமாவுக்குப் போய்வந்து விடுதி முற்றத்தில் சக்கப்பணிய சிகரட் புகைக்கும்போது உடலைத் தட வும் கொன்றை மரத்துக் காற்றைப்போல, ஏதோ இனம் புரியாத பிரிவுச் சோகம் உள்ளமெங்கும் பரவி யது. முதல் வருடப் பரீட்சை முடிவடைந்ததும் வந்த வெகசனோடு சிறிசேனாவின் புல்லாங் குழலையும் செவிகள் இழந்து போயின. மஞ்சள் பரவி ஏகப் பூத்துக் குலுங்கும் கொன்றையைக் கண்கள் தொலைத்துப் போயின.

L11169

இப்போது இவ்விடுதியில் இருக்கும் முதல் வருட மாணவர்களுக்கு விதம் விதமான எண்ணங்கள் தோன் றக்கூடும். கட்டிலில் படுத்துக் கொண்டு, கூடவே சிகரெட் புகைத்துக் கொண்டும் அண்மையில் பார்த்த படத்தைப் பற்றிக் கதைத்துக் கொண்டுமிருக்கலாம். பஸ்ஸில், யூனிவசிற்றியில் மனதில் புகுந்து கொண்ட பெண்களின் முகத்தை நினைத்து 'ஏதும்' செய்து கொண்டும் இருக்கலாம். இன்னும் ஒரு சிறிசேனாவின் புல்லாங் குழலோ, குரலோ நள்ளிரவில் அவர்களை அழைக்கலாம். இவைகள் அனைத்தும் அடுத்த வருடம் அவர்களைப் பிரிந்து போய்விடும் என்னும்போது துக் கம் அடைத்துக் கொண்டது.

இருக்க றூம் தேடி அலைந்துவிட்டு பாடக் குறிப் புகைளயோ, கட்டுரைகளையோ கையில் எடுக்க மன மில்லாமல் சலிப்புக் கொள்ளும் நாட்கள் அவர்களுக்கு வெகு தொலைவில் இல்லை. வந்த தொடக்க வருடத் தில் சந்தோஷம் பூரித்த முகங்களில் வேதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிய இருப்பது கொடுமையாகவே படுகின்றது.

விடுதி முற்றத்தில் கொன்றை பூத்துக் கிடந்தது. கொத்துக் கொத்தான பூக்கள் பார்வையில் பட்டு மனதில் ரம்மியத்தை விளைவித்தது. விடுதிக் கட்டிடத்தை மீறிய அதன் உயரத்துக்கு வானப் படுதா மேலும் அழகு சேர்த்தது. மதிலை ஒட்டி நிற்கின்ற அலரி மரங்கள்கூட நெடிதுயர்ந்து வளர்ந்து இருக்கின்றன. உச்சியில் பூக்கள் பார்ப்பதற்கு குளுமையாக இருக்கின்றன. நாளையோ அல்லது அதற்கு அடுத்த நாளையோ அவைகள் நிலத்தில் வீழ்ந்துவிடும். ஆயினும் தொடர்ந்து பூக்கள் உச்சியில் பூத்துக்கொண்டே இருக்கும்.

மதிலை ஒட்டி நிற்கும் அலரி மரங்களுக்குக் கீழ் எப்போதும் ஒரு பெட்டிக்கடை. இரவு பகலென்று நாள் முழுவதும் அதன் சேவை விடுதி மாணவர்களுக்கு கிடைக்கும். பத்து மணிக்குப் பின்னரான இரவு வேளையில் சுடச்சுட ஆப்பையும் பிளேண்டியும் கிடைக்கும். பிளேண்டிக்குப் பின்னர் சிகரட் ஒன்றை பற்றவைத்துக் கொண்டு மதிலில் ஏறிக்கொண்டிருப்பது அலாதி விருப்பமான விஷயம்.

பகல் வேளைகளில் பெட்டிக் கடைக்கு சிகரெட் வாங்க வருகிற அனேக வேளைகளில் வளர்மதியைக் காணலாம். தகட்டுத் துண்டுகளால் அண்டை போட்ட பல வீடுகள். அவைகளுக்கென்று சிறு முற்றம். அங்கு தான் அவளைக் காணக் கிடைக்கும். விடுதியில் இருக்கும் அனேக மாணவர்களுக்கு வளர்மதியின் வயதும், தோற்றமும் இரசிக்கத் தூண்டி இருக்கவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்சிரிப்புக்கும், பகீரென்ற பல் வரிசைச் சிரிப்புக்கும் இடைப்பட்ட அவளது முறுவல், ஈடுபாடு கொள்ளப் போதுமானதாக இருந்தது. குமரிப் பருவத்துப் பூரிப்புக்கள், கீச்சுக்கூட்டுகின்ற அவள் இப்போது ஏதாவது செய்து கொண்டிருக்கலாம். தோழிகளுடன் தனக்குப் பிடித்தமான ஒருவனைப் பற்றிக்கூட கதைத்துக் கொண்டிருக்கலாம். அவளை இணையாக நினைத்து உலகை மறந்த போதுகள் ரம்மியமானவைகள்தான்.

மீண்டும் அந்த இடத்தில் பெட்டிக்கடை வந்துவிட்டது. விடுதியை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே அது அங்கு இல்லாமல் போய்விட்டது. முனிசிபல் அனுமதியை மீண்டும் கொடுத்துவிட்டது போலும். ஊரில் வெகேசனைக் கழித்த போதெல்லாம் உம்மா அடிக்கடி முகத்தைப் பார்க்க உதட்டை மடித்துக்கொள்ள வேண்டி ஏற்பட்டுப் போனது. சிகரெட்டால் கறுத்துக் கொண்டு வருகின்ற உதடுகளை அவள் கண்டு கொள்ளக் கூடாது என்று மனம் எச்சரிக்கையுடன் இருந்தது.

இந்நாளையில் மழை வருவதற்கான அறிகுறிகள் எதுவும் வானத்தில் இல்லை. யட்டாரோ ஹோட்டலுக்குப் போகும் சந்திக்கு முன்னால் புனைமுருக்கு பூத்துக் குலுங்கியது. மதியம் அந்த வீதி தகித்துக் கொண்டிருக்கும். பாடசாலை விட்டு வருகின்ற சிறுசுகள், டியூசன் முடிய வீட்டுக்குப் பஸ் பிடிக்க நிற்கும் கலகலப் பேச்சுக்கள், கந்தோருக்கு அரைநாள் லீவு போட்டுவிட்டு பஸ்சுக்குக் காத்துக்கொண்டிருக்கும் இளநிக்கல் சோடிகள் இப்படி எத்தனையோபேர் தினமும் புனைமுருக்குவுக்குக் கீழ் நிற்கிறார்கள் போகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியை இரண்டாகப் பிரிக்கும் பூனைக் கற்கள். இரு மருங்கிலும் புனைமுருக்கு. வாகை, கொன்றை மரங்கள், பஸ்தரிப்புகள். இவை அனைத்தையும் போல மாலையானதும் சந்திக்கு வந்துவிடுகிற பெண்கள். சந்தியை தொட்டு சற்றுத் தொலைவில் யட்டாரோ காட்சி தந்தது. நெடிதுயர்ந்த புனைமுருக்கு மரங்களுக்கு கீழே ஆங்கிலப் படங்களில் கதாநாயகன் துப்புத் துலக்க தங்கி இருக்கும் உல்லாச கூடாரம்போல யட்டாரோ ஹோட்டல். மாலையானதும் சுற்றிவர வர்ண விளக்குகள். ஹோட்டலின் உள்ளரங்கிலிருந்து வரும் மேனாட்டு வாத்திய ஒலிகளும், ஆங்கிலப் பாடல்களும். மிகப் பவுத்திரமாக ஏதோ புனிதமான கடமை போன்று சத்தமின்றி உள் நுளையும் வாகனங்கள். அதில் வந்திறங்கும் சோடிகளின் வேற்று மொழி உச்சரிப்புக்கள். இவை எல்லாம் கூடிய பின்னர் அப்பகுதி உறுசுறுப்படைந்து விடும்.

முதன் முதலாக யட்டாரோவைப் பற்றிக் கேட்டபோது பாரத் நிறையவே சொன்னான். மனம் ஒன்றிப் படித்த கதையைப் போல மிக ஆர்வமாகவும், சுவாரஸ்யமாகவும் கதைத்தான். வெளியைப் போலவே உள்ளரங்கும், இசையும், கூத்தும் குடியுமாக ஒரே கலகலப்பு என்றான். ஒருநாள் இரவு முழுக்க ஒரு அழகிய இளம் பெண்ணுடன் அங்கு தங்கக் கிடைத்த வாய்ப்பை பெருமையாகச் சொன்னான். அதற்குப்பின் யட்டாரோவை நினைக்கும்போதெல்லாம் ஒரு அழகியின் மடியில் கிடப்பதான எண்ணமும் வருவது தவிர்க்க முடியாது போயிற்று.

இருபத்திரண்டு வருட கால சீவியமாகிறது. இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில்...

மாதிரியான அனுபவம் இதுவரையும் இல்லை. அந்த அனுபவத்துக்கு ஆளாகவேண்டும் என்ற வேட்கை மனதில் கூடிக்கொண்டே போகிறது. அந்த நாளுக்கான வருகை இன்னும் தூரத் தூரப் போய்க் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

திம்பிரிகஸ்யாய சந்திக்கு வந்தாச்சு. சைவ ஹோட்டலில் திருத்தவேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனந்த பவான் என்ற பெயரை அழித்துவிட்டு திரும்பவும் அப்பெயரையே எழுதிக் கொண்டிருந்தான் பெயின்ரர். திருத்த வேலை நடைபெறாவிட்டிருந்தால் எப்போதோ பார்த்து ஞாபகமான அப்பெயர் இப்போது நினைவுக்கு வந்தே இருக்காது. இங்குள்ள அனேகம் பேருக்கு அது ஒரு சைவக் கடை என்று தெரிந்தே இருந்தது. ஆனந்த பவான் எங்கே இருக்கிறது என்று யாரும் விசாரித்ததில்லை காட்டுவதற்கு. யூனிவசிற்றிக்கு படிக்க வரும் அதிகமானவர்களுக்கு, வங்கிக் கடனில், கொழும்பில் சீவியம் நடத்த சைவ ஹோட்டல்கள் பேருதவி புரிந்து கொண்டிருந்தன. வெகேசன் காலத்தில் சாப்பிடக் கிடைக்கிற வீட்டுச் சாப்பாட்டை நினைத்து வாயூறும் போதுகள் அனேகம்.

அவசரமாக மூஞ்சியைப் பார்த்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. டெக்ஸ்டைல் ஷோகேசுக்கு முன்னால் ஒருத்தரும் கவனியாதபடி நடக்கவேண்டும். வழமையில் உடம்பு கொஞ்சம் வீக்தான். இருந்தாலும் இப்போதைய மாதிரி இருந்திருக்க முடியாது. ஊரில் பிரியமான பெட்டை ஒருத்தி இருந்தால் கோலத்தைப் பார்த்துக் கண் பொங்கக் கூடும். வெகேசன் கழிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு திரும்பும்போது, உடலைக் கவனித்துக் கொள்ளும்படி கரிசனையும் படலாம். கிழமைக்கு இரண்டு தடவை வரும் கடிதங்கள் மனதைப் பிழிய லாம். இப்படிக் கதைகளில் படிப்பதுதான் ஞாபகம். சொந்தத்தில் இதுவரை ஆகிப்போகவில்லை.

கன நாளைக்குப் பிறகு இன்று பொரித்த கடலை வாங்கவேண்டும் போல்பட்டது. இரண்டு சிகரெட்டுக ளுக்குப் போக மீதிக்கு வாங்கினால் சரி. கடலைக் கடையின் தூக்குகளில் புத்தகங்கள் தொங்கின...... காயத்திரி,...... பரசுராமன்,...... இன்பரகசியம்,...... காதல்லீலை எனப்பல. கடலை வாங்க வந்தோமா... இவைகளைத்தான் பார்க்க வந்தோமா என நிதானிக்க முடியவில்லை. மனதைத் தொடும்படியான போட் டோக்கள். தெளிவில்லாமல், அவசரத்தில், தரக்குறை வான காகிதத்தில் அச்சான போட்டோக்கள். ஊன் றிப் பார்த்தும் நிசத்தை மனதில் தரிசிக்க முடியாத போட்டோக்கள். இன்னவைகள் இன்ன இடத்தில் தான் இருக்குமோ என உபாதைப் படுத்துகின்ற போட்டோக்கள். இந்த மாதிரியான போட்டோ புத்த கங்களை முன்னர் அடிக்கடி படிப்பதுண்டு. இப்போது வாங்குவதில்லை. அரைத்ததையே அரைக்கிறான் என்ற சலிப்பு. அப்படியே, வாசிக்கையில் தூங்கிவிடும் போது வாசித்தது போல நிசமாய் கனவில் நடந்து விடக்கூடாதா? என்பதாகவும் எண்ணத் தூண்டும் புத்தகங்கள். இன்று தொங்குபவைகளை நாளை காண முடிவதில்லை. வாடிக்கை ஒருவனால் குறைந்து விட வில்லை.

முகம் கழுவிக்கொண்டு வந்தபோது வீட்டுக்கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோனா அங்கிள் என்று சொல்லிக்கொண்டு வந்தான். மூஞ்சி உம்மென்று இருந்தது. இப்போதுதான் தூங்கி எழுந்திருக்க வேண்டும். அவளைச் சிரிப்புக்காட்ட எண்ணியபோது அவள் தானாகவே சிரித்துக் கொண்டாள்.

லியாக்கத் இன்னும் வந்திருக்கவில்லை. படுக்கையில் சாய்ந்து கொண்ட போது சுவர் முழுக்க பென்சிலால், சோக்குத் துண்டால் கீறப்பட்ட வடிவங்கள், வரைபடங்கள், சமன்பாடுகள், புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்ற குறியீடுகள்...... எல்லாம் மனதில் அச்சத்தை ஊட்டியது. தொடர்ந்தும் நண்பனின் அறையில் மூன்று மாதமாக 'கஜே' அடித்துக் கொண்டிருப்பது இடைக்கிடை ஞாபகத்துக்கு வந்து போகையில், எப்படியாவது றூம் ஒன்று பார்த்தாக வேண்டும் என நினைத்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகாசத்திலிருந்து பூமிக்கு

அவனுக்கு எல்லாம் குழம்பிப்போய் விட்டது. நொடிப் பொழுதில் துண்டிப்பு ஆகி விட்டது. றோட்டில் ஒரே கும்மாளம். அந்தி பட்டதும் தெரியாமல் சிறுசுகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். முறை வைத்தாப்போல ஒருவன் எறிய தொடர்ந்து குமியலில் கல்லு சிதறிக்கொண்டிருந்தது. பொறி கிளம்பியதும் மிகச் சிறுசுகள் கூச்சலில் துள்ளிக் குதித்தார்கள். அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஏகாந்தமாய் உலாவியவனை தாப்புக்காட்டிய கூட்டத்தை தொலைக்க வேண்டும் போல் இருந்தது.

மீண்டும் மீண்டும் பலமாக றோட்டில் ஆராவாரம் கேட்டது. சுறுக்கில் முடிகிறாப் போல இல்லை, அது. யாராவது தேடிவந்து ஓதல்லையா? படிக்கல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று முதுகில் விளாசுகிறவரை இது தொடரும். தவறினால் குறிப்பும் ஸலவாத்தும் முடிய செய்தி சொல்லப்போகிற அசுப்புத் தெரிந்ததுதான் கூட்டம் கூச்சலோடு......அல்லது சண்டையோடு கலையும்...ம்... இது இப்ப முடிவுறுவதாயில்லை. நீண்ட பரிதவிப்பு அவனைப் பிடித்துக் கொண்டது.

மூன்று மாதகாலமாக அவன் சுயத்தில் இல்லையென்றே சொல்ல வேண்டும். கொழும்பு வாழ்க்கை முடிய இப்படியொரு அவலம் காத்திருப்பதாக கனவிலும் நினைக்க வில்லை......அடிக்கடி கொழும்பை எண்ணி மகிழ்ந்து போவான். லெக்சர் முடிகிற கையோடு சாப்பாட்டுக்கு யாரையாவது பிடிக்க ஓடலாம். வீட்டுக்காரியின் முகம் தலைகாட்ட வாடகை கொடுக்கவென்று யாரிடமாவது பல்லைக்காட்டலாம் லோன் எடுத்த கையோடு பகிர்ந்து போட்டு பரிதாபகரமாகலாம். டியூட் கொடுக்கிறதுக்காக விடிய விடிய றாமில் விழித்திருக்கலாம். இவைகளை சோகமாக பெரிது படுத்தி நொந்து கொண்டதை எண்ணி மிகவும் மனக்கஷ்டப்பட முடிந்தது. இப்ப இருக்கிறதைப் பார்க்கிலும் நிறைவான அர்த்தம் அப்ப இருந்ததாகவே அவனுக்குப் படுகிறது.

பரீட்சை முடிய ஊருக்கு வந்தாகி விட்டது.எப்ப ...வந்த...தம்பிக்கு எல்லாம் செரிய என்ற முகங்களோடு ஒப்புதலாய் தலையாட்டுதலும் சிரிப்புமாய் நாட்கள் பல கடந்தன. மூன்று வருடமாய் விலகிப் போன உறவுகளை புதுப்பிப்பதில் இன்னும் பல நாட்கள் கழிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் முடிந்து போக மனது தனிமைப்பட்டு போனது அவனுக்கு. வேளைக்கு சோறு கிடைத்தது: செலவுக்கு ஒன்றோ இரண்டோ காசு கிடைத்தது. உம்மாவை விட வாப்பா இதில் கரிசனையாக இருந் தார். இவை போக மிகுதி வேளையில் தனியாகவே கழித்தான். கூட்டாகத் திரிய ஒருவருமே இல்லை. வீட்டிலே சகலருமே பள்ளிக்கூடம் போய் விடுவார்கள். ஊரில் சிநேகிதர்கள் வேலையாகி தூர இடங்களுக்குப் போய் இருந்தார்கள்.

வீட்டுச்சுவர் நிழலில் பாய்போட்டு ஹாயாகப் படுக்கலாம். இமை பூரணமாக சொருகிக் கொள்கிற வரை மனது எங்கேயாவது ஓடிக்கொண்டிருக்கும்.

இந்த உலகத்தை விட்டு மனதுக்குள்ளேயே உரு வாகிப் போன உலகத்தில் மிதக்கலாம். கணத்துக்குக் கணம் ஆனந்தமான இன்பம் புரளும். மிகவும் பிடித்த மான புத்தகங்களை வாசித்த கையோடு சாய்கையில் புதிய உலகத்தில் புகுந்துகொள்ளக் கிடைக்கும் அவ னுக்கு. அதில் அறியக் கிடைத்த வாழ்க்கை இடுக்கு களை எண்ணி வியந்து கொள்ளுவான். தலை சுற்றுகிற மாதிரி பார்க்கத் தோன்றுகிற பொருத்துக்களைக் கண்டு மலைத்துப் போவான். ஒரு அர்த்தமும் இல்லாத ஆடு, மாடுகளைப் போல் இருக்கிற மனிதர்களை நினைத்து அனுதாபப் பட்டுக்கொள்ள முடியும் அவ னுக்கு. தனிமனித பெறுமானத்தை விட்டு முன்னிலை யில் சிதறிப்போகிற மனிதக் கூட்டத்தைக் கண்டு பரி தாபத்தோடு, கூடவே எரிச்சல் பட்டுக் கொள்ளுவான். இப்படியாய் நினைத்து துயரப் பட்டதோடு வெறுப்பும் கொள்வான். முடிவில் இதில் பின்னிக் கொள்ளாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தூரப் போவதே விருப்பமாகும் அவனுக்கு. மிக வும் உச்சாரத்துக்குப் போய் ஆனந்தப் படவேண்டும் போல இருக்கும். என்றுமே நித்தியத்துவமானதாய் ஆக வேண்டும் போல இருக்கும்.

அசப்புத் தெரிந்து முழிக்கிற கண்ணுக்கு உம்மா நின்று கொண்டிருப்பா. குசினிக்குள் சோறு காத்திருக் கும் அவனுக்கு. அது முடிய கொஞ்ச நேரம் உலாத்தல். கடலைப் பார்த்தவண்ணம் மணல் வெளியைத் தொலை தூரம் கால்கள் அளக்கும். மனது சினேகிதர்களைப் போல உத்தியோகமாகிப் போவதை நினைத்துக் கொள் ளும். முடிவில் பெயரோடு சேர்ந்து இருக்கிற பட்டத் தோடு ஆத்திரமும் வரும். இதுக்குப் பிறகு உத்தியோ கமாகிச் சேவகம் செய்ய இருக்கிறதை துயரத்தோடு மனது பேசிக்கொள்ளும். பட்டதாரி செய்கிறதா என்று பயமுறுத்துகிற சூழலை எண்ணிக் கோபம் வரும். இப் படியாய் கொந்தளித்து ஓய மனது அடங்கி, நடை வீட்டை அடையும்.

'புள்ளேய்...புள்ளேய்' உம்மா கடப்பைத்தாண்ட அவனும் றோட்டுக்குப் போனான். முண்டுக் கல்லைச் சுற்றி ஏக கூட்டமாக இருந்தது. கற்கள் தொடர்ந்து விழுந்து கொண்டிருந்தன. தீப்பொறிகளைக் கண்டு சின்னஞ் சிறுசுகள் கும்மாளம் போட்டு அலுத்ததாகத் தெரியவில்லை. கூட்டத்திலிருந்து இளைய தங்கையைப் பிடித்துக் கொண்டு உம்மா வந்தா. பயந்து ஒடுங்கிப் போய் அவளும் வந்தாள். தீப்பொறி கிளம்ப குதித்து அமருகிற போது இருந்த மூச்சு இப்போது அவளிடம் இல்லை. எலிப்பொறிக்குள் மாட்டிக்கொண்ட மாதிரிப் பிதுங்கினாள். 'இண்டைக்கு ஒனக்குச் சாப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாறன் பாரு' என்ற உம்மாவுக்கு ரொம்பவும் பயந்து போனாள்.

அவன் வாசலுக்குள் வரும் போது தங்கை நின்று கொண்டிருந்தாள். நகப்பொட்டுக்கள் ஒன்றை ஒன்று சுரண்டிக் கொள்ள முகம் உம்மென்று குனிந்துகொண் டிருந்தது அவளுக்கு.

'பகல் சோறு திண்டுட்டுப் போனவள் இன்னா வந் திருக்காள்.....கடைக்கு சாமான் சக்கட்டு வாங்கப் போக ஆளில்லாமல் நான் பட்ட பாடு' உம்மா அவ ளைப் பார்த்துக் கதைக்க அவள் முகத்தைப் நிமிர்த்தி தாழ்த்திக் கொண்டாள்.

அவளை உற்றுப்பார்க்க வேண்டும்போல் இருந்தது அவனுக்கு. நன்றாகப் பார்த்தான். விடிந்ததிலிருந்து இப்பவரை தெருப்புழுதி வியர்வைக் கசிவில் இடைக் கிடை திரண்டு போயிருந்தது. மூக்கைப புறங் கையால் இழுத்து விட்டதில் ஒரு பக்கச் சொத்தையில் புழுதி சுரித்துப் போயிருந்தது. அவளைப் பார்க்க அவனுக்கு சிரிப்பாக வந்தது. விடிந்ததிலிருந்து இப்பதான் அவளை அவனுக்கு பார்க்கக் கிடைக்கிறது. உம்மா பிடித்து வருகிறவரை வீட்டைப் பற்றிய நினைப்பே அவளுக்கு இருந்திருக்காது. பாழ்வளவு நெக்கொட்டை மரத்துக்குக் கீழ் விளையாடி இருப்பாள். நெக்கொட் டைக்காய் பொறுக்கி நுரைக்கப்பண்ணி முட்டை விட் டிருப்பாள். பப்பாசி இலைத்தண்டு குழலால் ஊதிவிடு கின்ற முட்டை எழும்பிப் பறந்து உடைந்து போகிற வரை கூப்பாடு போட்டிருப்பாள். குரும்பட்டி எடுத்து தையல் மெசின் இணக்கி இருப்பாள். ஈச்சங்கொட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடி இருப்பாள். ஒழுங்கை முடுக்கில் உடைந்த பீங்கான், கிளாஸ், ஆகியவற்றின் துண்டுகளை எடுத்து சாம்பல் அப்பம் சுட்டு இருப்பாள். கடைசியில் மாலை பட கல்லுக் கும்புத்துக்கு கூட்டத்தோடு போய் இருந் திருப்பாள்.

இப்படி நினைக்க அவனுக்கு என்னவோ அவிந்து போனமாதிரி இருந்தது. உம்மா பிடித்து அவள் உம் மென்றிருக்கிறதுக்கு முந்தி ஆனந்தமாய் அவள் இருந் ததை நினைத்து அவனுக்கும் ஆனந்தம் உண்டானது. அவனைப் போலில்லாமல் நாளின் பெரும் பகுதியில் அவள் சந்தோஷமாக இருந்திருக்கிறாள். இப்படித் தான் அவனுக்கும் ஒரு காலம் இருந்தது. காலையில் பள்ளிக்குப் போவான். திரும்பி வந்து சாப்பிட்ட கையோடு வில்லு அல்லது பட்டம், றோதை ஆக விளையாட்டு. இரவில் தூத்தி அல்லது உள்ளாங் குடும்பை என்று இன்னும் பல தினிசு. அப்பவெல்லாம் இந்த மாதிரிபோல துயரம் இருந்ததில்லை. ஓயாத விளையாட்டு. கூடவே ஓயாத ஆனந்தம். நேரத்துக்கு சோறு. கேட்டவுடனே காசு. இப்பவும் கிட்டத்தட்ட அந்த மாதிரித்தான். ஆனாலும் ஆனந்தம் இல்லை. குறிப்பும் ஸலவாத்தும் முடிய கூட்டம் கடைசி ஆட்ட மாகக் கல்லை எறிந்து கொண்டது. ஒருவன் ஊவென்று கத்த முழுவதும் ஊபோட்டு ஓடியது. இது முடிய ரேடி யோவில் செய்தி வாசிப்பது கேட்டது.

கலைந்து போன கூட்டம் குளித்தோ, குளிக்காம லோ படுத்துக்கொள்ளும். விடிய விளையாட்டுத் தொட ரும். செய்தி தொடங்க திரும்பவும் அடுத்த இரவைக்கு ஆட்டம் முடிந்து கல்லுக்குமியல் நிராதரவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு கனமாக மண்டையுள் உறைத்தது. மனம் நெளிந்து முதன் முதலாக ஆனந்தம் கொண்டான். இதுவரையிலான இருப்புக்கு சும்மா இருப்பதே காரணமாய் தோன்றியது.

நாளை விடிய தறி பார்க்க வேண்டும். பட்டதாரியானால் என்ன நெய்யக் கூடாதா......என்று கேட்க வேண்டும். வேலை கிடைக்கல்லய......என்றால் என்ன கிடைக்காமலா போகும் எனத் துணிந்து கதைக்க வேண்டும். புறத்தியானுக்குப் பயப்படத் தேவை இல்லை. றோட்டுத் தெளிந்தாப்போல் அவனுக்கு மனதும் தெளிந்து கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48 மாதங்களும் 15 நாட்களும்

அவனுக்கும் இந்த நகரத்துக்கும் தொடர்பு ஏற்பட்டு இன்றுடன் 48 மாதங்களும், 15 நாட்களும் கழிந்து போயிருந்தன. அதிகாலை வேளையில் பதுளு ஓயாவில் மூழ்கி எழும் மனோரம்யமான காலைப் பொழுதுகள் இனி அவனைச் சந்திக்காது போய்விடும். குளித்து முடிந்து அறையை அடைவதற்கு இடையில் மூங்கில் படர்ந்த ஒற்றையடிப் பாதையில் தினமும் குட்மோ னிங் சொல்லும் மல்காந்தியின் திகீரென்ற பல்வரி சையை இனிக்கண்டு கொள்ள முடியாது. உடை உடுத்தி அறையை பூட்டிவிட்டு பள்ளிவாசலையும், பிரதான பாதையையும் இணைக்கும் குறுகிய கொங் கிரீட் பாலத்தைக் கடக்கும் போது காலை இளம் சூரி யனின் கதிர்கள் உடலைத்தடவும் பரவசம் இனி என் றைக்குமே கிடையாது. இதற்கும் மேலாக துயரத்தைச் சுமந்து கொண்டு அவன் முகம் பார்த்து மௌனமாக அழுகின்றவளது தொங்கிய முகம் மறந்தே போகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதைத் தொடும் கதைப் புத்தகங்களும், பரந்து விரிந்த வங்காளவிரிகுடாக் கடலின் அலையெறியும் தனிமையும், பிடித்துப் போயிருந்தவேளை உத்தியோக நிமித்தமாய் இந் நகரத்துக்கு வந்திருந்தான் அவன் அலுவலகத்தின் பரபரப்புக்கும், லெஜர்களுக்கும், வவுசர் கட்டுகளுக்கும் அவனைத் திருப்தி செய்யும் திராணி இருக்கவில்லை. காலை 7.30 திலிருந்து இரவு ஏழோ, எட்டோ மணிவரை லெஜர்களில் புதையுண்டு கிடப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. இவைகளுக்கு மேலாக வங்கியின் சட்டதிட்டங்களும், மனேஜரின் 'ராஜ கட்டளைகளும்' உலகத்தில் மிகத் தீவிரமாக வெறுத்து ஒதுக்க வேண்டியவைகளாக அவனுக்கு இருந்தன. இவை அனைத்தினதும் தொடர்புகளை இன்று அவன் துண்டித்துக் கொண்டு விட்டான். இது சம்மந்தமான இராஜினாமாக் காகிதத்தினை மனேஜரிடம் ஒப்படைத்தும் விட்டான்.

சக ஊழியர்கள் அவனை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டார்கள். அவனுடைய அபிமானத்துக்குரியவளாகிப் போன மிஸி மனேஜரின் 'ராஜதர்பாரை' சக ஊழியர்களிடம் கோபத்துடன் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தாள். செகண்ட் ஒபீசரின் அறிவுரைகள் அவனைத் தடுக்கும் வலிமை கொண்டிருக்கவில்லை.

அவனது முடிவு தீவிரமானதென்றும், மிகையுணர்ச்சி நிரம்பியதென்றும் சக ஊழியர்கள் நிதானப்படுத்த முனைந்தார்கள். அவர்களோடு அவனுக்கும் கோபம் ஏற்பட்டு விட்டது. வெளியே காட்டிக் கொள்ளாமல் அடக்கிக் கொண்டான். மாறாக மனேஜரை சரிக்கட்ட அவர்கள் ஏதும் செய்திருந்தால் ஒரு வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷப் பட்டிருப்பான். மனேஜரின் அதிகாரத்தின் முன் சகலரும் அடக்கமாகிப் போவதைக் கண்டு சிரிப்பதனைத் தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை. மிக நிதானமாக ஒவ்வொருவரிடமும் விடைபெற்றுக் கொண்டான்.

சகலதும் முடிந்தாகி விட்டது. வங்கியை விட்டு உதயராஜ வீதியில் இறங்கி நடந்தான். விடுதலை பெற்ற சிறைக்கைதியின் மனோநிலை உருவாகிப் போனதை உணர்ந்து கொண்டான். காலைச் சுற்றிக் கொண்ட விசப்பாம்பினை உதறி எறிய 48 மாதங்களும் 15 நாட்களும் தேவைப்பட்டதை எண்ணி துக்கப் பட்டான்.

இனி அவன் சுதந்திரன். மனேஜரின் கடுகடுப்பும், சம்பள ஏற்றங்களை, போனசை தடுத்து நிறுத்தும் பேனாவும் இனிஅவனை ஒன்றும் செய்துவிட முடியாது.

பாடசாலை வாழ்க்கையின் கடைசி காலகட்டங்களிலிருந்தே ஆசிரிய உத்தியோகத்தை மிகவும் விரும்பி இருந்தான். யூனிவசிற்றியில் சகமாணவர்களுடன் பாடங்கள் சம்மந்தமாக சம்பாசிக்கின்ற வேளைகளில் அந்த விருப்பம் மிகுதியாகவே இருந்தது. அவனளவில் ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்புக்களில் இதுவும் ஒன்றாக இருந்தது. இனிமேல் அதற்கான வாய்ப்பு இல்லையே என எண்ணுகையில் மீண்டும் மனம் கனத்துக் கொண்டது.

றாமை அடைந்தாகி விட்டது. இனி ஊருக்குப் போகவேண்டிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பாக்கி. ஊரை நினைத்ததும் வாப்பா முன்னால் வந்து நிற்கிறார். அவனுக்குப் பின்னால் வாப்பாவின் கனவுகளும், கற்பனைகளும் நிறையவே இருந்தன. அதில் ஒன்றையாவது இதுவரை தன்னால் நிறைவேற்றமுடியாமல் போனதை நினைக்கையில் மிகவும் துக்கித்தான்.

பதுளை நகரத்தின் சீதளமும், சுற்றிவளைத்த தேயிலை மலைத்தொடர்களின் வனப்பும் ஆரம்பத்தில் அவனை மிக வெகுவாகக் கவர்ந்திருந்தன. இயற்கை எழிலார்ந்த சூழலில் மிகுந்த மன அமைதியில் படிப்பைத் தொடரலாம். என்றே நினைத்திருந்தான்.

ஊவா மலைச் சிகரங்களை மிஞ்சி அலுவலக வேலைப்பழு போகப்போக சலிப்பூட்டியது அவனுக்கு. காலை 8.00 மணிக்கு முன்னர் வேலைக்கு ஆஜராகிவிட வேண்டும். நிமிடம் தவறினால் மனேஜரின் கேள்விகளுக்கு பதிலைத் தேட வேண்டும். இல்லையேல் சோட் லீவு ரெஜிஸ்டரைத் தேடித்திரிய வேண்டும்.

பனிமூட்டத்தின் மெல்லிய திரையுடன் ஆரம்பமாகும் மனோரம்யமான காலைப் பொழுதுகள் இயந்திர உலகத்தில் கரைந்து போவது அவனுக்குப் பிடித்திருக்கவில்லை. சும்மா......லீவு போட்டு விட்டு மலைத்தொடர்களில் மோதித்திரியும் பனிமூட்டங்களைப் பார்த்து பரவசித்த வண்ணம் சதா இருக்க முடியாதா எனத்தோன்றும். அவ்விதம் இருக்கக் கொள்ளை ஆசை அவனுக்கு. ஆனால் அந்த ஆசை இதுவரை நிறைவேறியதில்லை. கவுண்டரில் ஏறிவிட்டால் அல்லது லெஜர்களில் புதையுண்டால் சரி. இயந்திரமாக இயங்குவதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர வேறொன்றும் செய்ய முடியாது. பியதாச வந்து ஞாபகமூட்டும் போது ஆறிப்போன டீயைக் குடிக்க வேண்டி இருக்கும். 'குணே' தருகின்ற குறைச் சிகரெட்டின் கடைசித் தம்மை தட்ட முடியாமல் இழுக்கவேண்டி இருக்கும். மாலை வேலை முடிந்து, இராச்சாப்பாடு முடிந்து றூமைஅடைய எட்டோ,ஒன்பதோ ஆகிவிடும். அறையில் அஸாம் நன்றாகத் தூங்கிக் கொண்டு இருப்பான். இதற்குப் பின்னர் மேசையில் கிடக்கும் புத்தகங்களையோ குறிப்புக்களையோ பார்ப்பதற்கு அவன் மனது ஒரு போதும் விரும்பி இருக்கவில்லை.வாழ்க்கை ஒருவித சலிப்பூட்டும் நாடகமாகிப் போனதன் பின்னர் எதனைப் படிக்க? எதனைச் சாதிக்க என்றாகி விட்டது.

வாப்பா அவனை விசாரித்து அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டே இருப்பார். இன்ன திகதி கஸெட்டில்......இன்ன பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருக்கிறது. நீ பார்த்தாயா? விண்ணப்பித்தாயா? என்பதான விடயங்கள் அதிகமாக இருக்கும். அவருடைய கடிதம் ஒன்று வந்தவேளை அவன் மிக சந்தோஷமாக இருந்திருந்தான். அது தாங்கி வந்த வேண்டுகோளை அவன் மனது மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு, எஸ். எல். ஏ. எஸ். பரீட்சைக்கு விண்ணப்பித்த கையோடு நன்றாகவே ஆயத்தம் பண்ணிக் கொண்டான்.

பரீட்சைக்கு அட்மிசன் காட் வந்த வேளை வங்கியில் year ending நடந்து கொண்டிருந்தது. இரண்டு நாள் லீவு கேட்டுப் பார்த்தான். அவனது வினயமான வேண்டுகோளுக்கு மனேஜரின் இதயத்தைப் பிழியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராணி இருக்கவில்லை. அன்று மட்டும் அலுவலகத்தில் பத்துச் சிகரட்டுகளுக்கு மேல் ஊதித் தள்ளினான். வேலை முடிந்து வருவதற்கு முன், கடைசியாகவும் ஒரு தரம் கேட்டுப் பார்த்தபின் அட்மிசன் காட்டை கிழித்துக் கசக்கி மனேஜரின் முகத்தில் விட்டெறிவதைத் தவிர அவனுக்கு வேறொன்றும் இருக்கவில்லை. வாப்பாவை நினைத்து பெரிதும் பரிதாபப் பட்டான்.

இதற்குப் பின்னர் வந்த குளிர்காலம் அவனைக் கொடூரமாகத் தாக்கியது. சளி உபாதை அதிகரித்துப் போயிருந்தது. அடிக்கடி sick Leave போட்டு விட்டு அறையிலே அடைந்து கிடந்ததும் ஜன்னலில் முகத்தைத் தூங்கி cullen estate மலைத் தொடர்களை வெறித்த பார்வையில் சோகம் அமிழ்ந்து கிடந்ததையும் அவள் எப்படியோ அறிந்திருக்க வேண்டும். தனது வீட்டு ஏறுபடிகளில் நின்ற வண்ணம் அவனில் கரிசனைப் படுவது அவளுக்குப் பிடித்துப் போயிருக்கவும் வேண்டும்.

நீண்ட அவளது ஒற்றை நாடிச் சரீரத்தில் அவன் துயரங்கள் பிம்பப்படுவதாக அவன் உணரலானான். ஒரு மழை நாளைத் தொடர்ந்த மதியவேளையில் ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கையில் அவனை நேருக்கு நேர் பார்த்து அழுதே விட்டாள். அவளது கண்ணீருக்கு அவனை ஆற்றுப்படுத்தும் தன்மை இருப்பதாகவே அவனுக்குப் பட்டது. இதைத் தொடர்ந்த நாட்கள் ஒவ்வொன்றும் அர்த்தமுள்ளதாக இருந்தன. ஏறுபடியில் இருந்த வண்ணம் நாடிக்கு வலது கையை முட்டுக் கொடுக்கும் அவளது தோற்றம் அவனுள் நிறைத்து போய் விட்டது.

83 ஆடிக் கடைசிப் பத்தில் ஒரு நாள் அவளுக்கு மிகவும் கொடூரமாக இருந்ததை பின்னால் அவன் அறிந்து கொண்டான். நீக்குண்டுகளும், மிருகங்களும் சொந்தம் கொண்டாடிய அந்த நாளை அவனும் மறக்க முடிந்தது. அடுத்த நாள் வாடிய முகத்துடன், சுரிபட்டு அழுக்கேறிப் போன உடையுடன் மதில் ஏறிப் பாய்ந்த சிராய்ப்புகளுடனும், அவனைக் கண்டபோதுதான் அவளுக்கு உயிர் வந்ததாம். அந்த நாட்கள் ஒன்றில் மனதைத் திறந்து அவனுக்குக் காட்டினாள். அவளது வீட்டு முற்றத்தில் மலரும் ஜுனியஸ் மலர்களின் பிரகாசத்தைப் போல்......பாபடஸ் மலர்களின் மென்மையைப் போல் அவனோடு அவள்......

இந்த விதமாக இருந்த அவளது நட்பை ஏன் அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை? அவளிருக்க வேறொரு பெண்ணை எங்ஙனம் கைபிடிக்க அவனுக்கு முடிந்தது? இவைகளென்ன புதிர்களா? நிர்ப்பந்தங்களா? ஒரு பெண்ணின் மென்மையான உணர்வினைப் புரிந்து கொள்ள முடியாதவனாகிப் போனதன் சூட்சுமம் என்ன? அவனைச் சுற்றிப் படர்ந்திருந்த அவளது கனவுகள் இன்னும் கலையவில்லை என அறிந்தபோது அவன் பெரிதும் சிறுமைப் பட்டுப் போனான். சட்ட பூர்வமாக ஒருத்திக்கு கணவன் என ஆனபிறகும் அவளது மனம் அவனுக்குத் திறந்தே கிடந்தது. உண்மையில் வாழ்க்கை இத்தனை கொடுமையானதா என நினைக்க...நினைக்க அவனில் அவனுக்கு அருவருப்பே தோன்றியது.

இதற்குப் பின்னர் வாழ்வு அர்த்தமற்றதாக உணரலானான். Spring vally மலை உச்சியில் ஏறிநின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரவளை மலைத்தொடர்களைப் பார்த்த வண்ணம் செங்குத்துப் படுதாவில் தாவிக் குதித்துமாய வேண்டுமென்று தோன்றியதில், அவனுக்குப் பிழை இருப்பதாக தெரியவில்லை. காணும் இடமெல்லாம் அவள் முகமே தோன்றி அவனைத் தின்றுகொண்டிருந்தது. இந்தக் கொடுமையை, துயரை அவன் யாரிடம் பகிர்ந்து கொள்ள......?

ஜுலைக் கலவரத்தில் அவனும், அரியரத்தினமும் உயிர் தப்பியது அதிசயமான விஷயமாகவே இருந்தது. அவன் விரும்பி இருந்தால் மற்ற அலுவலக நண்பர்கள் செய்தது போல் பேசாமல் கொள்ளாமல் றூமுக்கு வந்திருக்கலாம். சென்ரல் மோட்டார் சந்தியில் அரியரத்தினம் தீக்கு இரையாகி இருக்கலாம். அவன் அங்ஙனம் செய்யவில்லை. அரியத்தோடு சேர்ந்தே இருந்தான். அந்த இனிய நண்பனின் மரண பயத்தில் தானும் பங்காளியானான். மதில் ஏறிக் குதித்தான். அந்தப் பயங்கர இரவினை நண்பனுடன் பகிர்ந்து கொண்டான்.

83 ஜுலை பற்றிக் கதைக்க எவ்வளவோ அவனுக்கு உண்டு நினைப்பதை யெல்லாம் கதைத்துவிட முடியுமா என்ன? ஆள் பார்த்து வேளை பார்த்து வார்த்தைகளைத் தேடித் தேடிக் கதைக்க வேண்டியவைகளே நிறைய இருந்தன. றூமுக்கு அடுத்தாற்போல் இருக்கின்ற ரயில்வே ஸ்டேசன் முன்றலில்தான் அந்த டொக்டரை வதைத்தார்கள். அந்த உடம்பிலிருந்து நாலைந்து நாட்களுக்கு சுட்ட மாமிச வாசம் சுற்றுவட்டாரத்தில் பரவிக் கொண்டே இருந்தது. இறப்பு தவிர்க்க ஏலாததுதான். அதற்காக அந்த டொக்டருக்கு இத்தனை கொடுமையானதாகவா இருக்க வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு அஸாம் அவனுடன் இருக்கவில்லை. உத்தியோக நிமித்தமாக கொழும்புக்குச் சென்றிருந்தான். மாலை அவன் கூடவே வழியனுப்ப ரயில்வே ஸ்டேசனுக்கு சென்றிருந்தான். ஸ்டேசன் பரபரப்பாக இருந்தது. கொழும்பில் தான் தங்கப் போகும் நாட்களையும், புரோகிரமையும் அஸாம் சொல்லிக் கொண்டிருந்தான். அவைகளில் எதிலும் அவனது மனம் செல்லவில்லை. ஸ்டேசனில் நடமாடும் ஒவ்வொரு மனிதரும் தீப்பிடித்து எரிவதாகவும், மரணஓலமிட்டு அலறுவதாகவும் மனப் பிராந்தி இருந்தது. றூமுக்கு வந்ததும் பதட்டம் தீர்ந்த பாடில்லை. ரொம்ப நேரத்துக்குப் பின்னர் சாப்பிடாமலேயே தூங்கிப் போய்விட்டான்.

ஒருவன் வந்தான். கழுத்தில் தெலஸ்கோப் போட்டுக்கொண்டிருந்தான் தனது மனைவியை கண்டீர்களா என புலம்பிக் கொண்டிருந்தான். பரந்த புல்வெளி தோன்றியது. சிறுத்தைகளைச் சிங்கங்கள் குதறிக் கொண்டிருந்தன. ஆண்சிங்கம், பெண்சிங்கம், கிழட்டுச் சிங்கம், இளம்சிங்கம், பிளாட்போம்சிங்கம், கசிப்புச் சிங்கம் இத்தியாதி. பொல்லும் தடியுடனும் கும்பலொன்று வந்தது. அவன்மீது மூர்க்கத்தனமாகத் தாக்கியது. அவன் சாக்குரல் கேட்டு அழுதான். உயிர் பிரிந்து கண் சொருகிக் கொள்ளும் தறுவாயில் ஊரில் இருந்து அவனது மனைவி கண் எட்டிய தூரத்தில் ஓடி வந்து கொண்டு இருந்தாள். இரு கைகளிலும் அவன் முகத்தை ஏந்தி முத்தமிட்டாள். திடீரென எழுந்து கொண்டான். கால்களிரண்டிலும் ஈரக்கோடிடுவதனை உணர்ந்து கொண்டான். சுவீட்சைப் போட்டதும் விளக்கு எரியவில்லை. பயம் அவனைக் கௌவிக் கொண்டது. மிகநிதானமாக முனையை தடவியபோது

விளக்கு எரிந்தது. அறையின் கிழக்கு மூலை சீற்றிடுக்கில் கருஞ்சாரை வெளியே இறங்கிக் கொண்டு இருந்தது. அதற்குப் பின் அவன் தூங்கவே இல்லை' ஒவ்வொரு இரவும் கருஞ்சாரைகளும், தீவட்டிகளும் பிணவாடையுமாக இருந்தான்.

அரியரெத்தினத்திற்கு ஊருக்கு இடமாற்றம் கிடைத்த போது மகிழ்ச்சி என்றாலும் அவனுக்குப் பொறுத்துக் கொள்ள முடியவில்லைதான். பிணக்காட்டில் வாழ்ந்து கொண்டிருக்க அவன் மனம் துளியும் விரும்பவில்லை. அரியம் போன கையோடு அவனும் ஊரோடு போயிருப்பான் திருமணம் மட்டும் செய்து கொள்ளாதிருந்தால்.

சாங்கமான மாப்பிள்ளை என்பதிலும் பார்க்க, பார்க்கிற வங்கி உத்தியோகம் அவனுக்குப் பெண் கொடுக்கப் போதுமானதாக இருந்தது. பலரைத்திருப்திப்படுத்த திருமணம் செய்யப் போய் வில்லங்கத்தில் மாட்டிக் கொண்டதைத் தவிர வேறொன்றும் அவனுக்கு மிஞ்சவில்லை. பெண்வீட்டார் அள்ளி வீசிய வார்த்தை ஜாலத்தை எண்ணி விசனப்பட்டான். தன்னால் முடியும்... அடுத்த வாரமே செய்து தருவேன்... எம்பி கிம்பி தேவையில்லை... நான் இங்கிருந்த படியே கட்டளையைப் பிறப்பிக்கச் செய்வேன்... என குளிர் தேசமொன்றில் இருந்துகொண்டு அவனது இடமாற்ற விடயமாக மனைவியின் சகோதரன் எழுதும் கடிதங்களில் அர்த்தமில்லை. என உணர அவனுக்கு மிக்க நாளெடுத்தது. மனைவியின் சகோதரன் இராஜ தந்திர சேவையில் இருப்பவன் என்பதை மிக நாசுக்காகச் செய்து கொண்டிருந்தான். அவன் விடுமுறை ஒன்றின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது ஊரில் வந்திருந்த சமயம் மிக அருவருப்பாக நடந்து கொண்டான் என்பதிலும் பார்க்க நடக்கப் பண்ணப்பட்டான் என்பதே பொருத்தம். தூரத்து உறவுக்காரச் சகோதரன் ஒருவனின் மூளை குளிர்தேச சகோதரனுக்குப்பின்னால் இருப்பதைக் கண்டுகொள்ள பல மாதங்கள் எடுத்தது அவனுக்கு. அவனது கைகளை யாரோ கட்டி விட்டார்கள். கையை உயர்த்தும்போது கால் தடக்கிக்கொள்ளும். இடமாற்றம் மட்டும் கிடைத்திருந்தால் அவன் படும் அவஸ்தைகளில் அரைவாசியேனும் நிச்சயம் குறைந்திருக்கும்.

கல்யாணம் செய்த ஆரம்ப நாட்களில் வாரத்துக்கொருதடவை ஊருக்கு எப்படியும் போய் விடுவான். லீவு கிடைக்காத நாட்களில் வெள்ளிக் கிழமை வேலை முடிந்து மொனராகலை போகும் கடைசி பஸ்சை பிடித்து இரவு எட்டு, எட்டரையளவில் மொனராகலை சென்று விடலாம். இரவு சாப்பிட்டுவிட்டு கையூம் முதலாளியின் கடையில் தூங்கிக் கொள்ளலாம். கொழும்பிலிருந்து வருகின்ற அம்பாறை பஸ் 12. 30 மணி அளவில் கையூம் முதலாளியின் கடைக்கு முன்னால் நிற்கும் போது ஏறிக்கொள்ளலாம். 4.30 க்கு அம்பாறையை அடைந்து விடிய 7.35 அளவில் மனைவியுடன் தேனீர் பருகலாம். பிரியத்தை மட்டும் தரமுடிந்தவளாக இருக்கிற மனைவியின் துணை தூக்க மயக்கத்தை அப்படியே போக்கி விடும். இந்த விதமான பயணத்தில் சியம்பலாண்டுவ சந்தியில் சோதனை போடும் படை வீரர்களின் தொந்தரவுகளை மறந்தாலும் மனைவியின் தூரத்து சகோதரனை மறக்கவே முடியாது. துப்பாக்கி சுமந்த தோள்களுடன் அவன் மனதுள் நின்று கொண்டே இருக்கிறான்.

வாழ்க்கை ஒரு மூடுமந்திரந்தான். மூளை பலம் மிக்கவர்களுக்கு மட்டுமே அது லாயக்கானது என்ப தனை அவன் அண்மைக் காலமாக உணரத்தலைப்பட் டிருக்கிறான். காலம் கடந்த ஞானோதயம் என்பதா? அல்லது படிப்பினை என்பதா? எதுவானாலும் அவன் பல துயரங்களையும், இடர்களையும் பட்டுவிட்டான்.

வீட்டார் புது வீட்டிற்கு குடி போன பின்னர் யாரு மற்ற தனிமையில் நிறைமாதக் கர்ப்பிணியாக, தலைய ணையில் முகம் புதைத்து அவன், நிறைந்துபோன மனத் தினளாய் இருக்கும் மனைவியை எண்ணி பெரிதும் துக் கித்தான். தலைப்பிள்ளை பெறும்வரையிலாவது அவ ளோடு இருங்கள் என்ற அவனது வேண்டுகோளை பெண் வீட்டார் ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டே இருந்தார் கள். குளிர்தேசச் சகோதரன் வரும் வரைக்கும் அவ னுக்கு விஸ்வாச மானவர்களாகவே பெண் வீட்டார் இருந்தனர். சகோதரனது வருகை கர்ப்பிணிச் சகோத ரியை தனிமையாக விட்டு, புதுவீடு போக வைத்ததில் எந்தவித நியாயத்தையும் அவன் காணவில்லை. புதிய ஜீவனொன்றைச் சுமந்துகொண்டிருப்பவளுக்கு காட்ட வேண்டிய அன்பும் கொடுக்க வேண்டிய அரவணைப்பும் தன்னைப் போலவே தனது மனைவிக்கும் இல்லை யென்றான போது அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. 83 ஆடிமாத மனிதர்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாசத்தை அவனால்காண முடியவில்லை. இத்தனை துயரத்திலும் பிள்ளைப் பெறும் தறுவாயிலாவது அவனது அணைப்பு மனைவிக் குக் கிடைக்க வேண்டும் என்பதில் அவனுக்கு ஆசை மிகுதியாகவே இருந்தது. அதற்காகப் பெரிதும் முயற் சித்தவனாகவே இருந்தான். அவன் நினைத்து



கனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது நடந்திருக்கிறது இது வரை?

நேற்றுக்கவுண்டரில் இருந்தபோது அந்தச்செய்தி கிடைத்தது. ஆண்குழந்தை பிறந்திருக்கிறதாம். உடனே சென்று குழந்தையைக் காணவேண்டும் போலாகி விட்டது. மனேஜர்வந்து கஸ்ரமர் காத்துநிற்கிறார்கள் எனச்சொல்லும்வரை ஊரில் குழந்தையிடமே இருந்தான். இந்தச் செய்தி கேட்டு அலுவலகத்தில் அவனுடையபிரியமிஸி ஆனந்தப்பட்டாள். அந்தச்சந்தோஷம் டொபிபக்கெட்டாக அலுவலக நண்பர்களிடம் இனித்துக்கொண்டிருந்தது. மனேஜரும் சிரித்துப்பேசி அவனது சந்தோஷத்தில் பங்குகொண்டவனாகவே இருந்தான். அதுமனேஜர் மீது நம்பிக்கை வைக்கப் போதுமானதாக இருந்தது அவனுக்கு.

செய்தி கிடைத்தது வியாழக்கிழமை. வெள்ளியும் வேலைசெய்து ஏற்கனவே விண்ணப்பித்த மூன்றுமாத சம்பளக்கடனை பெற்றுக்கொண்டு, இரண்டு நாள்லீவு போட்டுவிட்டுச் சென்றால் புதன்கிழமை வேலைக்குத் திரும்பிவிடலாம் என்பது அவன் திட்டம். அது தவிடுபொடியாகிவிட்டது. லீவு தரமறுத்த மனேஜர் கடன்தரவும்மறுத்து விட்டான். அரியஸ்வேலை நிறையஇருக்குதாம். அடுத்தவாரம் முழுவதும் நின்று போகட்டாம். கடனையாவது தந்திருந்தால் Nopay லீவிலாவது வீட்டுக்குப் போகலாம். அதுமனேஜருக்குத் தெரியும். பணத்தைவைத்து மடக்கலாம் என நினைத்து விட்டான்.

ஆரம்பத்தில் நிதானமாகவே இருக்க முடிந்தது அவனுக்கு. நேரம் செல்லச்செல்ல ஆவேசப்பட்டான். லெஜரை மனேஜரின் முகத்தில் வீசியதுமல்லாமல் கூடவே இராஜினாமாக் கடிதத்தையும் விட்டெறிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் முடிந்தாகிவிட்டது. குழந்தைக்கு சவக்காரம், ஓடிக்லோன், உடுப்பு சகிதமாய் பெட்டி சுமந்து கொண்டு வரும் கணவனின் சந்தோஷமுகம் மனைவிக்கு தோன்றிக் கொண்டிருக்கக்கூடும். எதற்கும் கலங்காத கண்கள் இன்று துளிர்த்தேவிட்டன. அறையை அடைந்ததும் தூங்கிவிட்டான். ஜன்னலைத் திறந்த போது ஜீனியஸ் மலர்களும், பாபடஸ் மலர்களும் அவனைக் குளிர்வித்தன. அவைகளுக்கு தண்ணீர் விட்டுக்கொண்டிருந்த அவளது 'என்ன நேரத்தோட வேலையால' என்றகுரல் கேட்டதும் விசயத்தைச்சொன்னான். அவள் மகிழ்ச்சிக் கடலில் குளித்தாள். கூடவே அழுதும் விட்டாள். வேலையை இராஜினாமாச் செய்ததையா அல்லது பதுளையை விட்டுப் போகப்போறானே என்பதனையிட்டா அவள் அழுகிறாள் என அவனால் உணர முடியவில்லை. அவளது உணர்வுகளில் எதனைத்தான் அவன் இதற்கு முன்னர் புரிந்துள்ளான்?

ரூபா 500/- அவள் தந்தபோது அவனால் தட்ட முடியவில்லை. பேக்கைத் தூக்கிக் கொண்டு அவளது முகத்தைப் பார்க்காமலேயே வந்துவிட்டான். ஏறு படியில் இருந்த வண்ணம் நாடிக்கு வலதுகையை முட்டுக் கொடுக்கும் அவளது தோற்றம், நிறைந்த மனத்தினனாக இருக்கிறவனுக்கு அது அவசியப்படவில்லை.

அம்பாறையைநோக்கி 80ம் இலக்கறூட்பஸ் ஆயத்தமாக இருந்தது. ஏறிக்கொண்டான். இன்னும் ஏழுமணித்தியாலங்களில் வீட்டை அடைந்துவிடலாம். குழந்தைபிறந்த சந்தோஷத்தில் வேலையை இராஜினாமாச் செய்து விட்ட விடயம் அழிந்தே போய்விட வேண்டுமென்று மனதுள் அடிக்கடி வேண்டிக்கொண்டான். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Al-Haj. A.R.A. SATHAR
Justice of the Peace - Whole Island
Regd. No: 2000/ 03/ NE/ WI/ B/ 015
504A, Central Road,
Maruthamunai - 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பெரிதும் ஏமாற்றத்துக்குரியவனாகிப் போனேன். பாலின் நிறம் வெள்ளை என்பதனை அறிந்தவனாயிருந்தும் கள்ளின் நிறமும் வெள்ளை என்பதனை அறியக் காலமாயிற்று எனக்கு. உறவுகள் எதுவும் நம்பிக்கைக்குரியனவாக தோன்றவில்லை இப்போது. சகலதுக்கும் ஒரு உள்நோக்கம் இருப்பதனை அறிய காலம் தேவையாயிற்று.

திட்டமிட்டபடி இத்தொகுப்பு 1990 ஜூனில் வெளிவந்திருக்க வேண்டும். அது இப்போதுதான் சாத்தியமாகிறது. இந்த இரண்டு வருடகாலத்துக்குள் இத்தொகுப்புக்கு எத்தனையோ தடைகள். அதனால் தாமதம். உள்ளடக்கம் அச்சாகி முகப்பை செய்து முடிக்க இரண்டு வருடங்கள் தேவைப்பட்டுவிட்டது. இவ்விடயத்தில் பரிதாபத்துக்குரியவன் நானே.

முனைப்பு இலக்கியப் பத்திரிகையின் தொடர்ச்சியான வருகை. அச்சுவசதியை உருவாக்குவதில் ஆர்வம், முனைப்பு பதிப்பகத்தின் நிறுவகராய் என் சகபாடி மருதூர்பாரியை ஆசிரியவிதம் முனைப்பு பதிப்பகத்தின் கன்னி வெளியீடு இத்தொகுப்பு என்று இத்தியாதி விசயங்கள்......

வெளியீட்டுத்திகதி 1990 என்பது, உண்மையில் 1992 எனத்திருத்தப்பட்டிருக்க வேண்டும். அட்டைப் படம் என்பதில் வந்திருக்க வேண்டியவர் மு மு. பாசில். எனது நன்றிக்குரியவனும் அவரே. இரண்டே நாட்களில அவரது ஒத்துழைப்பை எப்படி மறக்க முடியும்.

இத்தொகுப்பின் தாமதம் கலாநிதி எம். ஏ. நுஃமான் அவர்களை பெரிதும் கவலைகொள்ளச் செய்திருக்கிறது. எனது எழுத்து முயற்சிக்கும், இத்தொகுப்புக்கும் முன்னமக் காரணிகளாக இருந்தவர்களுள் மருதூர்பாரியும், நுஃமானும் முக்கியமானவர்கள் என்பதனை மீண்டும் சொல்ல வேண்டும் போல் இருக்கிறது.

எம். ஐ. எம். றஊப் 1992 - 06 - 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org